32

# சக்தி

மாத வெளியீடு

2584

202

சித்திரபானு ௵ புரட்டாசி ௴

-/4


**கதைகள்**

படையெடுப்பு

தூங்கு மூஞ்சி

மழை அம்மன்

வாடகை

சன்ஞவாய் ராணி

ங்கையின் மந்திரம்

★

**கட்டுரைகள்**

நாஸ்திகன்

போரும் உணவும்

மணி என்ன?

படகோட்டியின் பெருந்தகைமை

★

**பாடல்கள்**

காந்திஜி

மலரின் வாழ்வு

நம்பிக்கை

★

**குறிப்புக்கள்**

கதம்பம்

உடம்பும் மருந்தும்

காலச் சுழல்

புத்தக உலகம்






# அழகுக்கு அழகு செய்வா உண்டோ!

உண்மை எழில் பொன்னணிகளிலும் பட்டாடைகளிலுமன்று - இவைகள் எவ்வளவு விலையுயர்ந்தவைக ளானலும், இயற்கையாக இல்லாத வசீகரத்தை உண்டு பண்ண முடியா. மாசற்ற காந்தியுடன் விளங்கு வதனமொன்றே மெல்லியரின் அற்பு வனப்பிற்கு இன்றியமையாத தாகுப்

மென்மலரிதழ் போன்ற வதன சௌ தரியம் பெற பாண்ட்ஸ் க்ரீம்கள் நிச்ச மாக உதவு மென்பது அனுபவத்திற் கண்டறிந்த விஷயம். உபயோகித்து பாருங்கள். சொற்ப வாரங்களுள் உங் வதனம் என்று மில்லா மிருதுத்துவமு பதுமை காந்தியும் வாய்த்து விளங்கு

**பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம்:** காலையிலும் மாலையிலும் முகத்தில் மெதுவாகத் தடவி, சொற்ப நிமிஷங்கள் அப்படியே வைத்திருந்து, பின்பு அழித்துக் களையுங்கள். அது மயிர்க்கண்களினூடே சென்று அங்குள்ள எண்ணெய் அழுக்குகளைக் கரைத்துப் போக்கி விடுவதோடு, சருமத்திற்கு அவசியமான வளப்பத்தையும் அளிக்கிறது.

**பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்:** எண்ணெய்ப் பொருள்கள் இல்லாததாகையால் பகல் நேரத்தில் தாராளமாக உபயோகிக்கலாம். அது சருமத்திற்கு மென்மையைக் கொடுத்து வெயில் காற்று முதலிய வற்றிலிருந்து பாதுகாக்கிறது.




# பாண்ட்ஸ் க்ரீப்

P. 2829 I.

# ஸி. ஏ. க்யூ.

## உங்களுக்கு எப்போதும் பாதுகாப்பளிக்கும்




நோய்கள் நம்மை அணுகாமல் தடுப்பதில் ஸி. ஏ. க்யூ. எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பதைச் சென்ற 30 வருஷங்களுக்கு மேலாக இதற்கு இருந்துவரும் பிராபல்யம் நிரூபிக்கிறது. இன்ப்ளுயன்ஸா, டிங்கி ஜுரம், ஜலதோஷம், மார்ச்சளி முதலிய உபாதைகளைக் குணமாக்குவதில் இன்று ஸி. ஏ. க்யூ. தலைசிறந்துவிளங்குகிறது. இதில் ஒரு டோஸ் சாப்பிட்டதுமே குணமளிக்கும் மருந்தென்று இதைச் சிபார்சு செய்கிறார்கள். ஜலதோஷம், மார்ச்சளி, இன்ப்ளுயன்ஸா முதலியவைகளைத் தடுப்பதில் ஸ்பென்ஸர் கம்பெனியாரின் ஸி. ஏ. க்யூ. நிகரற்றது.

"ஸி. ஏ. க்யூ." இது ஒன்றேதான். அதைத் தயாரிப்பது ஸ்பென்ஸர் கம்பெனியார்தான்

ஒரு புட்டி விலை ரூ. 1
மாத்திரைகள் ஒரு டப்பா அணா 14

## ஸ்பென்ஸர் & கோ. லிமிடெட்

சென்னை

மருந்து வியாபாரிகள்

# மீரா

## சந்தன சோப்




★

ஆரோக்கியமும் அழகுமே வாழ்க்கையை இன்ப மயமாக்குவன. அந்த இரண்டையும் தருவதில், மீரா சோப் இணையற்று விளங்குகிறது. தினந்தோறும் மீரா சோப் தேய்த்து ஸ்நானம் செய்வோர் இதை நிச்சயமாய் அறிவார்கள்.

★

தயாரிப்பவர்கள் :—

**மீரா கெமிக்கல் இண்டஸ்ட்டிரிஸ் கல்கத்தா**

தென்னிந்தியாவிற்கு பூரண உரிமைபெற்ற ஏஜண்டுகள் :

**டீ-லக்ஸ் டிரேடிங் கம்பெனி,**

44, அல்லிமால் தெரு, திருச்சிராப்பள்ளி



## காந்தியடிகளின் நூல்களும் அவரைப் பற்றிய நூல்களும்

| | ரூ. | அ. |
|---|---|---|
| சத்திய சோதனை | 3 | 8 |
| அனாசக்தி யோகம் | 0 | 10 |
| இல்லறமும் பிரம்மசரியமும் | 0 | 8 |
| ஆரோக்கிய வழி | 0 | 6 |
| ஹிந்து தர்மம் | 0 | 4 |
| உத்தம வாழ்க்கை | 0 | 4 |
| மகா தியாகம் | 0 | 4 |
| கீதா போதனை | 0 | 3 |
| தென்னாப்பிரிக்கா சத்யாக்கிரஹம் | 1 | 0 |
| மகாத்மா காந்தி (சர் ராதாகிருஷ்ணன்) மொழிபெயர்ப்பு: வெ. சாமிநாத சர்மா | 3 | 0 |
| காந்தித் தாத்தா கதை | 0 | 8 |
| பாபு அல்லது நானறிந்த காந்தி | 1 | 8 |

முன் பணம் அனுப்புவோருக்குத் தபாற் செலவு இல்லாமல் அனுப்பப்பெறும்

**சக்தி காரியாலயம்**

மதுரை — காரைக்குடி

விரைவில் வெளிவரும்

# திரை ஒலி

## சினிமாப் பத்திரிகை

## மாத வெளியீடு

இதில் சினிமாவில் நடிப்பவர்களின் வாழ்க்கைக் குறிப்பு, அவ்வப் பொழுது வரும் புதிய படங்களைக் குறித்து நியாயமான அபிப்பிராயம், அயல் நாடுகளில் சினிமா, கதை -- கட்டுரைகள் முதலியன படங்களுடன் வெளிவரும்

விலை அணு 4

வருடச் சந்தா ரூ. 3

'திரை ஒலி' காரியாலயம்

காரைக்குடி

சித்திரபானு
மலர் 7

# சக்தி

புரட்டாசி
இதழ் 2

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

## இந்த மாறுதல்

மாறுதல் வளர்ச்சியின் இயற்கை. 'சக்தி'யின் புதிய உருவம் கைக்கு அடக்கமானது; படிக்க வசதியானது. கவர்ச்சியா யிருக்கும்படியும் செய்ய முயன்றிருக்கிறோம். மேலும், பலர் விருப்பத்துக் கிணங்க, முன்போலவே தனிப் பிரதியின் விலையை நாலணு வாகக் குறைத்திருப்பதும் கவனிக்கத் தக்கது. சந்தாவும் அதற்கேற்ப, குறைக்கப் பட்டுள்ளது. நண்பர்கள் பரிபூர்ணமாய் வரவேற்பார்கள் என்று நம்புகிறோம்.

# எத்தனை காலம் ?

இந்தியாவின் கொந்தளிப்பு அடங்கவில்லை. அடக்கிவிட்டோம் என்று சர்க்கார் என்னதான் வெளி உலகத்துக்கு ரேடியோ 'தண்டோரா'ப் போட்டுக் கொண்டிருந்தாலும், உண்மையில் சர்க்காருக்கும் மன அமைதி இருக்க முடியாது. நாளுக்குநாள் நிலைமை சீரழிந்து வருகிறது. சில ஜனங்கள் தவறானவழியில் செல்லலாம். ஆயினும் இத்தனை விபரீதங்களுக்கும் மூலகாரணம், சுதந்தர ஆர்வம் அடக்கப் படுவதால் வந்த ஆவேசமே என்பதை யாரும் மறுக்கமுடியாது. அந்த மூல காரணத்துக்குச் சரியான பரிகாரம் அடக்குமுறையாகுமா ?

பிரிட்டனிலே சர்ச்சிலும் அமெரியும் வீறுப்புப் பேசுகிறார்கள். இங்கே மாக்ஸ்வெல் கர்ஜனை புரிகிறார். வைஸிராய் சபையிலுள்ள இந்திய அங்கத்தினர்கள் எல்லாரும் ஆளுக்கொன்று என்னென்னவோ குளறிக் கொட்டுகிறார்கள். ஜனநாயக மந்திரிசபை போலவே வைஸிராய் நிர்வாக சபை நடப்பதாக, ஸர் பிரோஸ் கான் நூன் கூறுகிறார். ஆனல்,ஸர் முகம்மது உஸ்மான், "வைஸிராய் ஏதாவது அபிப்பிராயம்கேட்டால் வாய் திறப்போம். இல்லாவிட்டால் மௌனியா யிருப்போம்" என்கிறார். ஸர் ஜோகேந்திர சிங்கோ, "எங்களுக்கு முன்னே யிருந்தவர்கள் செலுத்திய அதிகார மெல்லாம் நாங்களும் செலுத்துகிறோம்" என்று ஆனந்திக்கிறார். ஆனல், இது போதாது என்று அவரே சொல்லுகிறார். இதெல்லாம் எதைக் காட்டுகிறது? புதிய நிர்வாகசபை, ஒரு நாளும் ஒரு தேசிய சர்க்காரின் தன்மையைப் பெற முடியாது என்பதையே காட்டுகிறது.

எதிரியின் அபாயம் நெருங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில், ஜனங்களோடு ஒன்றுபட்ட, ஜனங்களின் செல்வாக்கை அபரிமிதமாய்ப் பெற்ற ஒரு சர்க்கார் இல்லாமல், இப்படி ஓர் அவந்தரை சர்க்கார் இந்தியாவில் நடப்பது எவ்விதத்தும் ஐக்கிய நாடுகளின் லட்சியத்துக்குத் துளியும் ஒத்ததல்ல. இந்த உண்மை, சர்ச்சிலுக்கோ அமெரி துரைமகனுக்கோ தெரியா திருக்குமென்று நம்மால் நம்ப முடியவில்லை. ஆயினும், அவர்கள், தங்களைத் தாங்களே மயக்கிக் கொள்வதன் மூலம், இந்தக் கோளாற்றைச் சரிப்படுத்திவிட நினைப்பது போல் தோன்றுகிறது.

"காங்கிரஸை ஒப்புக்கொள்ளாமல் முஸ்லிம்கள் இருக்கிறார்கள்; ராஜாக்கள் இருக்கிறார்கள்; அவர்கள் இருக்கிறார்கள்; இவர்கள் இருக்கிறார்கள். எல்லாரும் போகக் காங்கிரஸில் மிச்ச மிருப்பது பூஜ்யமே" என்று கணக்குப் போட்டு, காங்கிரஸுக்கு ஒரு செல்வாக்குமில்லை யென்று ஸ்தாபிக்கப் பார்க்கிறார் சர்ச்சில். அப்படியானல், அந்த ஸ்டாபோர்டு கிரிப்ஸ் நீட்டி முழக்கிக்கொண்டு இவ்வளவு தூரம் வந்து காங்கிரஸோடு பேரம் பேசுவானேன்?

இந்தச் செல்வாக்கற்ற காங்கிரஸ் எக்கேடு கெட்டாயினும் தொலையட்டும் என்று சொல்லி, மற்றவரிடம் அதிகாரத்தைக் கொடுத்து ஏன் ராஜி செய்து கொள்ளவில்லை? சர்ச்சில் இந்த வீண் டம்பப் பேச்சுப் பேசுவதால், வெளி நாட்டார் ஏமாறலாம். ஆனால், இங்கே என்ன நடக்கிறது?

இதோ சிந்துப் பிரதம மந்திரி அல்லா பக்ஷ் தம்முடைய 'கான் பகதூர்', 'ஒ. பி. ஈ.' என்ற பட்டங்களை உதறிவிட்டார். சர்ச்சிலின் பிரசங்கத்தையும் பிரிட்டிஷ் சர்க்காரின் கொள்கையையும் கண்டிக்கிறார். "உண்மையான தேசீய சர்க்கார் ஒன்று அமைந்தால்தான் தற்போதைய நெருக்கடி தீரும்; அதற்குக் காங்கிரஸுடன் முஸ்லிம் லீக் ஒரு சமரஸம் செய்துகொள்ள வேண்டும்" என்று பல பம்பாய் முஸ்லிம் லீக் தலைவர்கள் கூறுகிறார்கள். இன்னும் அங்கங்கே இம்மாதிரி கண்டனங்களும் அபிப்பிராயங்களும் வெளியிடப்படுகின்றன.

நாகபுரியில், முஸ்லீம்களால் தமக்களிக்கப்பட்ட விருந்தொன்றில், ஹைதராபாது நைஜாமின் ஏஜண்டான ஸர் எம். வெங்கடசுப்பாராவ், "ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் அடிப்படையான வேற்றுமை கிடையாது. அரசியல் பிரசாரத்தால் கற்பனை செய்யப்பட்ட விஷமமே அந்த வேற்றுமை" என்று சொல்லுகிறார். மேலும், அவர் "சுதந்தர ஆவல் தன்னிச்சையானது; இயற்கையானது. அதை நாம் அடக்கிவிட முடியாது. அழிவற்ற சுதந்தர ஐதீகத்தைப் படைத்த ஆங்கிலேயர், நமக்குத் தங்கள் அனுதாபத்தை அளிப்பார்களா? இந்த ஆபத்து வேளையிலே, நாம் ஒன்றுபடலாகாதா? போல்ஷ்விக்கரையும் நாஸ்திக ருஷ்யாவையும் சில காலத்துக்கு முன் தானே பிரிட்டிஷ் பத்திரிகைகள் கடுமையாய்த் திட்டிக் கொண்டிருந்தன. இன்று பிரிட்டனும் ருஷ்யாவும் நேசமுற்றுத் தோழர்களாய் ஒரே லட்சியத்துக்காகப் போரிட வில்லையா?" என்று, பிரிட்டனுக்குப் புத்திமதி சொல்லுகிறார்.

> **சுதந்தரம்**
>
> ஆள்வோரென்றும் ஆளப்படுவோரென்றும் உள்ள ஒரு சமுதாயத்தில் ஜனங்களுக்குள் சம அந்தஸ்தோடு கூடிய ஒரு கூட்டுறவு இருக்க முடியாது. ஒரு சிலர், பலர் மீது ஆதிக்கஞ் செலுத்துவதுதான் இருக்கும். மனிதனுக்குப் பிராணன் முக்கியமானது; புனிதமானது. அதே போல, அந்தப் பிராணனின் பிரதிநிதியாயிருக்கும் சுதந்தரமும் முக்கியமானது; புனிதமுடையது.
>
> —மாஜினி.

இதை யெல்லாம் எத்தனை காலந்தான் பிரிட்டன் அலட்சியம் செய்து கொண்டிருக்க முடியும்? எத்தனை காலந்தான் தேசத்தின் அருமணிகள் போன்ற தலைவர்களைச் சிறையிலே வைத்திருக்க முடியும்? எத்தனை காலந்தான் ஜனங்களுக்குப் பொறுப்பற்ற, அவர்களின் ஆதரவைப் பெற்றிராத தோர் அவந்தரை சர்க்காரை நடத்திக் கொண்டிருக்க முடியும்? எத்தனை காலம்?

# காலச்சுழல்

**காந்தி பிறந்த நாள் :** அக்டோபர் 2-ந்தேதி காந்திஜி பிறந்த நாள். இந்தியப் பஞ்சாங்கப்படி அக்டோபர் 17வ அவர் பிறந்த நாள் வருகிறது. இந்த இரண்டு வாரமும் 'காந்தி ஜயந்தி' நாடெங்கும் கொண்டாடப்படுவது வழக்கம். ஆனல், இவ்வருஷம் காந்திஜி, சர்க்காரின் விருந்தினராய்ச் சிறை புகுந்திருக்கிருர்; அபாயமான புரட்சிக்காரர் என்று மதிக்கப் பட்டுள்ளார். புதுக்கோட்டை போன்ற சமஸ்தானங்களில் ஏற்கனவே 'ஜயந்தி' ஏற்பாடுகள் தடை செய்யப்பட்டுள்ளன என்று அறிகிருேம். உலகத்தின் விசித்திரந்தான் என்ன! 'நாடு காடாவதும் காடு நாடாவதும் நவில் சகடு மேல் கீழதாம், நடையூறு சந்தை பல கூடுமுடனே கலையும்' என்ற ஞானி வாக்கையே இதெல்லாம் நமக்கு நினைப்பூட்டுகிறது.

**கூட்டு அபராதம் :** யாரோ சிலர் ஏதோ செய்து விடுகிருர்கள். உடனே ஊரிலுள்ள அனைவருக்கும் கூட்டு அபராதம் விதித்து விடுகிறது சர்க்கார். குற்றம் செய்தவர்களைக் கண்டு பிடிப்பதற்குச் சர்க்காராலே முடியவில்லை என்று இதற்கு அர்த்தமா? அப்படியானல், ஜனங்களிலும் அதேமாதிரியே, குற்றம் செய்தவர்களைக் கண்டு பிடிக்க முடியாத நிரபராதிகள் எத்தனையோ பேர் இருப்பார்களே; அவர்களுக்குத் தண்டம் விதிப்பதால் என்ன பலன்? நியாயந்தானகுமோ? இதிலே முஸ்லீம்கள், தாழ்த்தப்பட்டோர் முதலியவர்கள் விலக்கு என்று ஒரு பிரிவினை வேறு செய்கிறது சர்க்கார். இதெல்லாம் எந்த தர்மத்தில் சேர்ந்ததென்றே தெரியவில்லை.

**யார் கெடுத்தார் :** "என் தூது வெற்றி பெருமல் கெடுத்தவர் காந்தி தான்" என்று கூறினர் ஸர் கிரிப்ஸ். அது உண்மையல்ல என்று அழுத்தந் திருத்தமாய் ராஜாஜி மறுத்துவிட்டார். என்ருலும், ஸர் கிரிப்ஸ் தம் கட்சியை விடாமல், இன்னும் அப்படியே சொல்லிக்கொண்டிருக்கிருர். "என் காலத்தில்கூட இவ்வாறு தான் நடந்தது. சென்னையில் காங்கிரஸ்காரர் மந்திரி பதவி ஏற்கத் தயாராயிருந்த ஒரு சமயத்தில், காந்தி வந்து கெடுத்து விட்டார்" என்ருர் லார்டு எர்ஸ்கின். அதையும் மறுத்தார் ஸி. ஆர். இந்திய சர்க்காரின் ஒரு மாஜி அதிகாரியான ஜான் கோட்மான் என்பவர் கிளம்பினர். "வட்ட மேஜை மகாநாட்டில் காங்கிரஸ் கலந்துகொள்ளாமல் கெடுத்தவர் இந்தக் காந்திதான்" என்று கூறுகிருர். காந்திஜி சிறைக்குள்ளே இருக்கிருர்; பதில் சொல்லமுடியாது. இந்நிலையில் இவ்வாறெல்லாம் தூறு கூறுவது, முற்றிலும் வெறுக்கத் தக்க செயலாகும்.

**ஹுஸேன் விளக்குகிருர் :** நண்பர் ஹுஸேன் இமாம், பாகிஸ்தான் திட்டத்தின் ஒரு முக்கிய

அம்சத்தை, ராஜாங்க சபையில் விளக்கி யிருக்கிறுர். பாகிஸ்தானை நிர்ணயிக்கும்போது, முஸ்லீம் பிரதேசங்களில் உள்ள வயது வந்த முஸ்லீம்கள் மட்டுமே ஓட்டுச் செய்ய வேண்டுமாம். அங்கே உள்ள பிற வகுப்பார்களுக்கு அந்த ஓட்டுரிமை இராதாம். அதேபோல, பிற இடங்களில் முஸ்லீம்களுக்கும் அந்த ஓட்டுரிமை கிடையாதாம். முஸ்லீம் பிரதேசங்களை நிர்ணயிப்பது யார்? ஒரு சிறிய தாலூக்கா பூராவும் முஸ்லீம்களும் ஜில்லாவிலே பெரும்பான்மையோர் ஹிந்துக்களுமாக எங்கேனு மிருந்தால், அந்தத் தாலுக்காவின் கதி என்ன? ஹுஸேன் கூற்றுப்படி, சென்னை மாகாண முஸ்லீம்களுக் கெல்லாம் சுய நிர்ணய உரிமை கிடையா தென்று நிச்சயமாகிறது! அவர்களில் சிலர் லீக்கில் சேர்ந்திருக்கிறுர்களே? அவர்களின் கதிதான் என்ன?

**ரகஸ்யம் வெளியாகிறது:** மத்திய மாகாணத்தில் மிகவும் செல்வாக்கு உள்ள முஸ்லீம் லீக் தலைவரான நண்பர் யஸ்டானி லீக்கிலிருந்து விலகிக் கொண்டுவிட்டார். இதிலிருந்து ஒரு ரகஸ்யம் வெளியாகிறது. பம்பாயில் முஸ்லீம் லீக் காரியக் கமிட்டி கூடியிருந்த தல்லவா? அப்போது ஒன்பது அங்கத்தினர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்களாம்: (1) பாகிஸ்தான் என்ன என்று தெளிவாக்க வேண்டும், (2) சுதந்தர தினத்தைக் கொண்டாட வேண்டும், (3) காங்கிரசுடன் சமரசம் செய்துகொள்ள முயற்சிக்க வேண்டும் என்பதுதான் அந்தத் தீர்மானத்தின் சாரமாம். தீர்மானம் நிறைவேறும்போல் கூட இருந்ததாம். எப்படியோ அதை ஜின்ஞ சாகேப் கவிழ்த்து விட்டார். யார் இட்ட சாபமோ தெரியவில்லை.

**ஹாலிவுட்டுக்குச் சூடு:** அமெரிக்கப் பிலிம் உற்பத்தி ஸ்தலமான ஹாலிவுட்டுக்கு, நீக்ரோக்கள் என்ருல் வெகு இளப்பம். அவர்களைத் தோட்ட அடிமைகளாகவும், சிற்ருள்களாகவும், கோமாளிகளாகவுமே சித்தரிப்பது ஹாலிவுட்காரர்களின் வழக்கம். இதை நிறுத்தும் வரையில் தாம் ஹாலிவுட்டில் நடிப்பதில்லையென்று, பால் ரோப்ஸன் என்ற இணையற்ற நீக்ரோ பாடகர் பால் ரோப்ஸன் பிரதிக்ஞை செய்துவிட்டார். நீக்ரோக்கள் எவ்வளவோ முன்னேறி யிருந்தும், அவர்களைப் பழைய அநாகரிக அடிமைகள் போலவே சித்தரிப்பது துடுக்குத்தனமல்லவா? நீக்ரோக்களின் தன்மதிப்பு உணர்ச்சி பெருகி வருகிறது என்பதற்கு, ரோப்ஸனின் பிரதிக்ஞை ஓர் அடையாளமாகும். நிறத் திமிருக்கு உலகில் இனி இடமில்லை.

**கத்தரிக்காய் விளம்பரம்:** சர்க்காரின் யுத்த விளம்பரங்கள் தினுசு தினுசாய் வெளிவருகின்றன. பல விசித்திரமாயு மிருக்கின்றன. செக்கந்திராபாதில், 'நித்தம் ஒரு கத்தரிக்காய், நெட்டித் தள்ளும் ஜப்பானை' என்று கூறுகிறதாம் ஒரு விளம்பரம். ஒரு கத்தரிக்காயே இப்படி வேலை செய்யுமானல், கூடை நிறையக் கத்தரிக்காயோடு வரும் அங்காடிக்காரிக்கு யாதொரு கவலையுமில்

லேயோ என்று எவரும் நினைக்க வேண்டாம். அதிக உணவுப் பொருளை உற்பத்தி செய்யுங்கள் என்ற விளம்பரமே இது; கத்த ரிக்காயைப் பீரங்கிக் குழாயில் வைத்து எதிரிமீது குண்டாக வீச முடியும் என்பதல்ல.

*ஜின்னா தர்பார்:* கிரிப்ஸ் தூது முறிந்தவுடனே, ஜின்னா சாகே புக்கு ஒரு புதுமையான ஆசை உண்டாயிற்று. பத்திரிகைக்காரர் களையெல்லாம் கூட்டி ஒரு 'தர் பார்' நடத்தினர். அதைப்பற்றிய சில ரஸமான தகவல்களை 'ராய்ஸ் வீக்லி' இப்போது வெளியிட்டுள் ளது. நவாப் தர்பார் மாதிரிதான் ஜின்னா நடந்துகொண்டிருக்கிறார். செய்திக்காக லீக் கட்டிடத்தைச் சுற்றிக்கொண்டிருந்த சில பத்திரி கை நிருபர்களை "அரெஸ்டு பண் ணச்செய்வேன்" என்று மிரட்டி னாராம். அப்படியிருந்தும், துணிந்து இவர் தர்பாருக்குப் பல நிருபர்கள் வந்திருக்கிறார்கள். என் றாலும், கேள்வி கேட்பவருக்குச் சரியான பதில் சொல்லவில்லை யாம். "பம்பாய்த் தீர்மானம்..." என்று ஒருவர் ஆரம்பிக்கையி லேயே, "நீர் சொல்வது தப்பு. அதைப் போய்ப் படியும்" என்று சீறினாராம் ஜின்னா. "பாகிஸ்தா னில் எந்த இடமெல்லாம் சேரும்" என்று இன்னொருவர் கேட்டதற்கு, "அதெல்லாம் உமக்குப் புரியாது" என்றாராம். "சொல்லுங்கள். புரிந்தாலும் புரி யும்" என்று நிருபர் கேட்ட தற்கு, "இல்லை. இந்தக் கேள்வி யைக் கேட்டதிலிருந்தே உமக்கு அது புரியாதென்று நிச்சய மாகிறது" என்று அதட்டினாராம் ஜின்னா. இதேமாதிரி எட்டிக்குப் போட்டி சொல்லியும் ராஜாஜி மாதிரி உபமானக் கதைகள் கூறி யும் தடபுடல்செய்துவிட்டாராம். சமீபத்திலும் அவர் இப்படியே செய்ததாக, அ. பி. செய்தியாலும் தெரிகிறது. இந்த ஜனநாயக யுகத்தில் இப்படியும் ஒரு தலைவ ரென்பவர் நடப்பது விந்தை தான்.

★

**இந்திய ராணுவச் சேதம்:** சகல போர் முனைகளிலும் இந்திய ராணு வத்துக்கு இதுவரை ஏற்பட்டுள்ள சேத விவரத்தைச் சர்க்கார் வெளியிட்டிருக்கிறது:

| இடம் | இறந்தவர் | காயமடைந்தவர் | காணமற்போனவர் | சிறைப்பட்டவர் |
|---|---|---|---|---|
| எகிப்து | 605 | 2,275 | 12,158 | 2,475 |
| சூடான்-எரிட்டிரியா | 606 | 3,943 | 7 | 1 |
| பாலஸ்தீனம்-சிரியா | 81 | 282 | 0 | 0 |
| இராக்-இரான் | 50 | 89 | 4 | 0 |
| சோமாலிலாந்து | 9 | 28 | 0 | 0 |
| பிரான்ஸ்-யுனைடட் கிங்டம் | 9 | 8 | 0 | 327 |
| பர்மா | 417 | 1,173 | 3,327 | 1 |
| கடலில் | 4 | 1 | 0 | 118 |
| மலாயா | 208 | 721 | 70,000 | 16 |
| ஹாங்காங் | 0 | 1 | 4,187 | 0 |

# கதம்பம்

**தேசாயும் காந்தியும்:** காந்திஜி ஒரு வாழ்க்கைக் கலைஞர். தேசாய் காலம் சென்றது அவருக்கு ஈடில்லாத துக்கத்தைத் தந்திருக்கும். அதற்கு ஆறுதல் செய்து கொள்ள என்ன செய்வது? குழந்தை மாதிரி தினந்தோறும் மலர்களைப் பரப்பி வைத்து ஸ்ரீ. தேசாய்க்காக மிக உருக்கமாய்ச் சில நிமிஷ நேரம் பிரார்த்தித்துத் தியானம் செய்கிறாராம்! "தேசாய்க்கு நான் தந்தையாவேன்; மகனுமாவேன்" என்று சொல்லிக் கொண்டேதான், ஸ்ரீ. தேசாயின் ஜதைக்கு, மகாத்மாஜி தீ மூட்டினாராம். இந்த மனங்கரைக்கும் விவரங்கள் 'ட்ரிப்யூ'னில் வெளியாகியிருக்கின்றன.

* *

**'பேசாமடந்தை' நேரு:** பிரசங்கம் செய்தும் எழுதியும், ஜனங்களைத் தேசீய உணர்ச்சியும் எழுச்சியும் கொள்ளச் செய்வதையே தம் வாழ்க்கையாய்க் கொண்ட பண்டித ஜவஹர்லால் நேரு, ஒரு காலத்தில் 'பேசாமடந்தை'யாய் இருந்தார் என்ற விஷயம் அநேகருக்குத் தெரிந்திராது. அப்போது, அவர் கேம்பிரிட்ஜ் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த இளைஞர். கல்லூரியில் 'மாக்பை அண்டு ஸ்டம்ப்' என்றொரு பேச்சுச் சங்கம் உண்டு. அதில் அவ்வளவு மாணவர்களும் ஆறுமாத காலத்துக்குள் என்றாவது ஒரு நாள் பிரசங்கம் செய்தாக வேண்டும் என்று ஒரு கட்டாயம் இருந்தது. பேசாதவர்களுக்குப் பெருந் தொகையை அபராதம் விதிப்பார்கள். ஜவஹருக்கோ பேசுவதென்றால் பெருங் கூச்சம். ஆகையால், பேசுவதை விட அபராதம் செலுத்திச் சும்மா இருப்பதே சுகம் என்று, அந்தக் காரியத்தை அவர் செய்து விடுவாராம்!

* *

**நன்கொடை விநோதம்:** சில செட்டிமார் வீடுகளிலே காய்கறிகள் வாடிப்போனால், வேலைக்காரனைக் கூப்பிடுவார்களாம். "இந்தா, இதைப் பசுமாட்டுக்கு வை. அது திங்காட்டி, ஐயருக்கு வெச்சு வை" என்று உத்தரவிடுவார்களாம். பின்வரும் விஷயத்தை அந்த மாதிரி நாம் சந்தேகிக்கவே முடியாது. யுத்த நிதிக்குப் பல லட்ச ரூபாய் வசூலானதில், பங்கு ஒன்று 3000 ரூபாய் மதிப்புள்ள கான்பூர் போர்டு அண்டு மெக்டனால்டு கம்பெனியின் இரண்டு டிபெஞ்சர் பங்குகள், நன்கொடையாகச் சர்க்காரிடம் கிடைத்திருக்கின்றனவாம். ஆனால், அவை எந்த மார்க்கெட்டில் விலை போகுமென்று தெரியாததால், பத்திரமாய் வைத்திருக்கிறார்கள். அவைகளுக்கு மார்க்கெட் கிடைக்குமுன் யுத்தம் முடியாமலிருக்க வேண்டுமே; அதுதான் கவலைப்படவேண்டிய விஷயமாயிருக்குமோ?

**எது மேல்:** கிரேக்க ஞானி யான ஸாக்ரடீஸிடம் ஒரு சிஷ்யர் "கல்யாணம்செய்துகொள்வதா? செய்துகொள்ளாமல் இருப்பதா? எந்த வழி நல்லது?" என்று ஒரு சமயம் கேட்டார்.

"இரண்டில் எந்த வழியை நீ கைக்கொண்டாலும் பின்னல் வருந்துவது நிச்சயம்" என்று பதிலளித்தார் ஞானி.

*　　　*

**வாழ்வதா, சாவதா:** திரு. போத்தன் ஜோஸப், சுடச்சுடக் கேலி செய்வதில் வல்லவர். மகாத்மாஜீயின் துணைவரா யிருந்த காலஞ் சென்ற திரு. தேசாய், கள்ளமற்ற ஹாஸ்யக் குறிப்புக்களை எழுதுவதில் தேர்ந்தவர். புது டில்லியில் பத்திராசிரியர் மகாநாட்டில் இருவருக்கும் ஒரு தர்க்கம் வந்தது.

**ஜோஸப்:** காந்திஜி கொஞ்சம் சர்வாதிகாரி மாதிரி நடக்கிறார்.

**தேசாய்:** ஆம்; அவர் ஒரு சர்வாதிகாரிதான். ஆனல், அவருடைய சர்வாதிகாரத்துக்குக் கீழே, பூரண சுதந்தரமும் அன்பும் நிறைந்திருக்கின்றன.

**ஜோஸப்:** அரசியலுக்காகச் சிறையிலே வாழ்வதில் என்ன பயன்?

**தேசாய்:** (புன்சிரிப்புடன்) அதாவது சிறையிலே சாக வேண்டு மென்கிறீர்களாக்கும்!

திரு. தேசாய் வேடிக்கையாய்த்தான் கூறினர். ஆனல் அவர் அவ்வாறே சிறையில் உயிர் துறந்துவிட்டார். திரு. தேசாயின் இந்தக் கேலியை, திரு. போத்தன் ஜோஸப்பே இப்போது கூறி, வருத்தப்படுகிறார்.

*　　　*

**தசை 'மகாத்மா':** அமெரிக்க 'டைம்' பத்திரிகையில் பின்வரும் ரஸமான குறிப்புக் காணப்படுகிறது:

தசைகளைப் பலப் படுத்தும் வழிகளைக் கூறும் ஒரு பத்திரிகையின் ஏடுகளை ஒரு சமயம் காந்திஜி புரட்டிக்கொண் டிருந்தார். தேகாப்பியாச நிபுணரான சார்லஸ் அட்லாஸ் என்பவர் எழுதிய ஒரு கட்டுரை, ஒரு பக்கத்தில் காணப்பட்டது. "பாவம்! இந்த நோஞ்சல் காந்திக்கு இஷ்டமானல், இனமாகவே அவருடைய தசைகளை நான் பருக்கச் செய்வேன்" என்று தசை 'மகாத்மா' வான அட்லாஸ் குறிப்பிட்டிருந்தார். இதைப் படித்ததும் மகாத்மா காந்தி கூறியதாவது: "மதியூகமுள்ள சில அமெரிக்கர்களை நான் சந்தித்திருக்கிறேன். ஆனல், அவர்களி லெல்லாம் இந்த அட்லாஸுக்குத்தான் முதல் பரிசு கொடுக்க வேண்டும். இவர் இந்தியாவுக்கு வர ஆகும் வழிச் செலவை மாத்திரம் யாராவது கொடுக்க ஒப்புக்கொண்டால், என் உடம்பில் இவரது கைத் திறமையைக் காட்ட, நான் சந்தோஷமாக இசைவேன்."

*　　　*

**ராஜாஜி முஸ்லிமாம்:** லண்டன் 'நியூஸ் ரிவ்யூ' என்ற பத்திரிகை ஒரு குறிப்பினிடையே ராஜாஜியைப்பற்றிப் பிரஸ்தாபிக்கையில் "முஸ்லிம் ராஜகோபாலச்சாரி" என்று எழுதிவிட்டதாம். "திரு.

ராஜகோபாலாச்சாரி ஒரு முஸ்லிம் அல்ல; ஓர் உயர் ஜாதி ஹிந்து'' என்று, லெப்டினண்ட் கர்னல் பெயிர்ட் ஸ்மித் என்பவர் அந்தப் பத்திரிகைக்கு ஒரு மறுப்பு எழுதியதை, பின்னால் அது பிரசுரித்திருக்கிறது.

எல்லாம் இந்தப் 'பாகிஸ்தான்' கூக்குரலால் வந்த வினைதான்!

*   *

**இரண்டே முத்தம்:** கல்கத்தா முஸ்லிம் லீக் பத்திரிகையான 'ஸ்டார் ஆப் இந்தியா' வில் காணப்படும் ஒரு குறிப்பு:

டில்லியில் உள்ள அயல்நாட்டுப் பத்திரிகை நிருபர்களுக்குச் சர்க்காரிடம் இருந்து ஒரு விசித்திர உத்திரவு பிறந்திருக்கிறதாம். "இந்திய நிலைமையைப் பற்றி நாள் ஒன்றுக்கு நீங்கள் இரண்டே செய்திகளைத்தான் உங்கள் பத்திரிகைகளுக்கு அனுப்பலாம்'' என்று அந்த உத்திரவு கூறுகிறதாம். இது எப்படி இருக்கிற தென்றால், ஒரு காதலனைப் பார்த்து, "நாள் ஒன்றுக்கு இரண்டே தடவைதான் நீ உன் காதலியை முத்தமிடலாம்'' என்று கட்டளையிடுவதுபோல்தான் இருக்கிறது. இந்த மாதிரி கட்டளையிட்டால், தேவர்களுக்குக் கூடக் கோபம் வராதா?

*   *

**முஸோலினி கதை:** இதாலியில் முஸோலினியைப் பற்றிப் பல விகடத் துணுக்குகள் உலவுகின்றனவாம்.

முஸோலினி ஒரு நாள் ஒரு சோதிடரிடம் சென்றார். "இதாலியின் பெருந் திருவிழா நாளுக்கு முதல் நாள் மாலைதான் நீங்கள் சாவீர்கள்'' என்றான் சோதிடன்.

அது என்ன நாள் என்று புரியாமல், மனைவியின் முகத்தை நோக்கினார் முஸோலினி.

"இது தெரியவில்லையா? நீங்கள் சாகும் நாளுக்கு மறுநாள் தான் அந்த நாள்'' என்று மனைவி விளக்கினாள்!

*   *

**'டாங்கி'யின் பெயர்:** 'டாங்கி' என்ற கவச வண்டிகள் இந்த யுத்தத்தில் மிகவும் நடமாடுகின்றன அல்லவா? இந்த 'டாங்கி' என்ற பெயர் எப்படி வந்தது என்பது ஒரு வேடிக்கையாகும். போன யுத்தத்தின்போது, முதன் முதலாக, பிரிட்டிஷார்தான் இந்த 'டாங்கி'யைக் கட்டினார்களாம். ஆனால், தொழிலாளர்களுக்குக் கூடத் தெரியாமல் இதன் உபயோகம் என்ன என்ற விவரத்தை ரகஸ்யமாய் வைத்திருந்தார்கள். "எகிப்தில் ஜல சப்ளை செய்வதற்காகவே இந்த வண்டிகள் கட்டப்படுகின்றன'' என்று ஒரு பொய் உபயோகத்தையும் சொல்லி வைத்தார்கள். ஆகவே, "ஜலம் சுமக்கும் டாங்கி'' என்று தொழிற்சாலை ஊழியர்கள் இதைக் குறிப்பிட்டு வந்தார்கள். 'டாங்கி', 'டாங்கி' என்று, அந்தப் பெயரே இதற்கு நிலைத்து விட்டது. ஆனால், இதில் 'டாங்கி'யும் கிடையாது, மண்ணாங்கட்டியும் கிடையாது. துப்பாக்கிகள், பீரங்கிகளைத் தாங்கி 'நடமாடும் கோட்டை'யேயாகும் இந்த டாங்கி.

**பிராணிகளின் பக்தி :** இலங்கையில் ஒரு பௌத்தக் கோயிலில் குருக்கள் பிரார்த்திக்கும்போது, கோயில் குளத்திலுள்ள மீன்களெல்லாம் ஜலத்துக்கு மேலே வந்து விடுகின்றனவாம். கல்லெறிந்தாலும் கலைவதில்லையாம். பிரார்த்தனை முடிந்ததோ, இல்லையோ; ஓடி விடுகின்றனவாம். அனுராதபுரத்தில் பௌத்த விழாக்களின்போது ரேடியோவில் மதப்பிரசங்கங்களைக் கேட்க, சில குரங்குகள் இப்படியே வந்துவிடுகின்றனவாம். இதையெல்லாம் தாம் நேரிலே கண்டதாக, குணவர்த்தனர் என்பவர் 'ஸிலோன் டைம்'ஸில் எழுதுகிறார். இருக்கலாம். மனிதர்களைத்தான் அஹிம்சைக்குத் திருப்ப முடியவில்லையே என்று, பிராணிகளைக் கிளப்பிவிடப் புத்த பகவான் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறாரோ என்னவோ? யார் கண்டது?

* *

**நாற்காலி நெருக்கடி :** சென்ற மகா யுத்தத்துக்குப் பின் நடந்த லாசேன் சமாதானமகாநாட்டில், ஒரு சமயம் 'நாற்காலி நெருக்கடி' உண்டாகிவிட்டதாம். துருக்கியின் பிரதிநிதிகளுள் ஒருவராக கெமால் அட்டாடர்க் அந்த மகாநாட்டுக்குச் சென்றிருந்தார். துருக்கிப் பிரதிநிதிகளுக்கு முதுகில்லாத நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. பிற நாடுகளின் பிரதிநிதிகளுக் கெல்லாம் முதுகுள்ள நாற்காலிகள் போட்டிருந்தார்கள். "ஏன் இந்த வித்தியாசம்?" என்று கேட்டார் கெமால். 'முதுகு நாற்காலிகள் போதிய அளவு கிடைக்கவில்லை, அது இது' என்று மகாநாட்டு அமைச்சர்கள் சால்ஜாப்புச் சொன்னார்கள். "முதுகுள்ள நாற்காலிகள் போதிய அளவு கிடைத்தபிறகு, நாங்கள் மகாநாட்டுக்கு வருகிறோம்" என்று வெளியே கிளம்பி விட்டார் கெமால். பிரிட்டிஷ் பிரதிநிதியான கர்ஸான் பிரபு பல்லைக் கடித்துக்கொண்டார். முனகினார். என்ன செய்தும் பயனில்லை. முதுகு நாற்காலிகள் எங்கிருந்தோ கண நேரத்தில் பறந்து வந்தன. அதன் பிறகே துருக்கிப் பிரதிநிதிகள் உள்ளே சென்று அமர்ந்தார்கள்.

* *

**சம்பள உலகம் :** "இந்த ஆசிரியருக்கு என்ன சம்பளம்?" "எண்பது ரூபாய்" "அவருக்கு?" "ஐந்நூறு ரூபாய்" "ஓ! அவர் ரொம்பக் கெட்டிக்காரரோ, ஸார்! ஜோராய்த்தான் எழுதுகிறார்"—இப்படி மதிப்பது நவநாகரிக உலக இயற்கை. நம்முடைய வைசிராய்க்கு, சுமார் இரண்டரை லட்ச ரூபாய் வருஷச் சம்பளம். 1941-ஆம் வருஷ அமெரிக்காவில் சிலர் வாங்கியுள்ள வருஷச் சம்பளத்தைப் பாருங்கள் :

**ஹாலிவுட்டில்**

| | | |
|---|---|---|
| எம். ஜி. எம். தலைவர் லூயி பி. மேயர் | 7,04,425 | டாலர் |
| ஜேம்ஸ் காக்னி | 3,62,500 | ,, |
| கிளார்க் கேபிள் | 3,57,500 | ,, |
| நிக்கோலஸ் எம். ஷென்க் | 3,34,204 | ,, |
| பெட்டி டேவிஸ் | 2,71,083 | ,, |
| டாரில் ஜானக் | 2,60,000 | ,, |

**புகையிலை வியாபாரத்தில்**

| | | |
|---|---|---|
| ஜார்ஜ் வாஷிங்டன் ஹில் | 2,88,144 | ,, |

எங்கிருந்தோ 'குடிக்கூலி'க்கு வந்தார். வீட்டோடு வீடாய்ப் பழகினார். வாடகை மட்டில் கடைசிவரையில் நாமந்தான். ஆனால், அந்தக் கணக்கு என்ன ஆயிற்று?

# வாடகை — 'சுரன்'

எங்களுக்கு எதற்கு அவ்வளவு பெரிய வீடு? மாடி அறையை வாடகைக்கு விட, அம்மா தீர்மானித்தாள். வாசலிலே 'அறை வாடகைக்கு விடப்படும்' என்று ஓர் அட்டையில் எழுதித் தொங்க விட்டோம். அன்று மாலையே ஒரு கனவான் வந்து சேர்ந்தார்.

இதுதானே வாடகைக்கு இடம் விடுவதில் அம்மாவுக்கு முதல் அனுபவம்? ஆகையால், முன் பணம் ஒன்றும் அவள் கேட்கவில்லை. வந்த மனிதர் எப்படிப்பட்டவர், யார் என்றும் விசாரிக்கவில்லை.

"இடம் ரொம்ப நன்றாயிருக்கிறது" என்று அவர் சொன்னதே, இவளுக்குக் கனகாபிஷேகம் செய்ததுபோல் ஆகிவிட்டது. அறைச் சாவியை அவரிடம் கொடுத்துவிட்டாள்.

கனவான் அன்றிரவே அறையை வசப்படுத்திக் கொண்டார்.

எல்லாரிடமும் 'கல கல' என்று அவர் பழகினார். அம்மாவை



★

கனவான் போதிக்கிறார்.

★

எங்கே கண்டாலும் வணங்கித் தலே குனிவார். அப்பாவுக்கோ அவரிடம் பிரியம் விழுந்தது. நாங்கள் குழந்தைகள் இருக்கிருேமே, எங்கள் அனைவருக்கும் அவரைப் பார்ப்பதே ஆனந்தமா யிருந்தது. எங்களிட மெல்லாம் விளையாடுவார்; தமாஷ் செய் வார். அவருடைய அறைக்குள் நாங்கள் எல்லாரும் நுழைந்து 'ஹாட்டி' அடிப்போம். அவர் துளிக்கூட முகத்தைச் சிணுக்க மாட்டார்.

ஆனல், ஒருநாள் என் அத்தை எங்கள் வீட்டுக்கு வந்தாள். அவளுக்கு மாத்திரம் இந்தக் கன வானைப் பிடிக்கவில்லை. அவள் ஏராளமாய் வீடுகளை வாட கைக்கு விட்டு அனுபவம் உடை யவள்; வாடகை வருமானத்தா லேயே ஜீவிப்பவள்.

"சேலை வாங்க இந்த ஆசாமி யின் பணத்தையா நம்பிக்கொண் டிருக்கிருய்? என்றைக்கு இவன் உனக்கு வாடகை கொடுக்கப் போகிருன்?" என்று அம்மாவை அத்தை கேட்டாள்.

"ஏன்? வெகு சீக்கிரம் கொடுத்துவிடுவார். ரொம்ப நல்ல வர்" என்ருள் அம்மா.

அத்தை "ஹூம்! இந்த மாதிரி பேர்வழிகள் ரொம்பப் பேரை நான் பார்த்திருக்கிறேன். இவன் பணங்கொடுத்து நீ சேலை வாங்கு வது இந்த ஜன்மத்தில் இல்லை" என்று வெகு கருராய்ச் சொன் ஞள் அத்தை.

அம்மாவுக்குச் சேலை மாத்திர மல்ல; எங்களுக்குப் புதுச் சட் டைகள் வாங்கவும் அந்தப் பணத் தையே சாட்டுதல் சொல்லிக் கொண்டிருந்தார் எங்கள் அப்பா. அத்தை பேச்சைக் கேட்டதும், "ஏது? எங்களுக் கெல்லாம் சட்டை வாங்குவது நாமந் தானு?" என்று நாங்கள் கத்தி னேம்.

"சே! அசட்டுப் பிசட்டென்று பேசாதீர்கள்" என்று அம்மா எங்களை அடக்கி விட்டாள்.

கனவான் வந்து ஒன்றரை மாசமாகியும் வாடகை ஒரு சல்லி கூட வரவில்லை. "அதெல்லாம் தாளுகை அவர் கொடுத்துவிடுவார். நாம் கேட்பது மரியாதையில்லை" என்று எங்கள் எல்லாரையும் அம்மா அடக்கி வைத்து விட் டாள்.

ஆனல், ஒரு நாள் மழை கொட் டியது. "ஐயோ பாவம்! மாடியில் சாரல் அடிக்குமே! அந்த மனித ருக்குக் கஷ்டமாயிருக்கும். திண்ணைப் பக்கம் உள்ள அறை யில் வேண்டுமாளுல் தங்கச் சொல்லுங்களேன்" என்று அம்மா அப்பாவிடம் சிபார்சு செய்தாள்.

கனவான் இவ்வாருகத் திண்ணை உள்ளுக்கு வந்து சேர்ந் தார். இதன் பிறகு, எங்கள் குடும் பத்தோடு குடும்பமாகவே, கன வான் பழகலாஞர்.

அப்பா அவரை அடுப்பங் கரைக்கு அழைத்து வந்து வம்பு பேசத் தொடங்குவார். எங்கள் பள்ளிக்கூடப் பாடங்களைப்பற்றி யெல்லாம், எங்களை அந்தக் கன வான் கேள்விகள் கேட்பார். எனக்கு அவர் கணக்குச் சொல்

லிக் கொடுப்பார்; அண்ணனுக்கு இங்கிலீஷ் சொல்லிக் கொடுப்பார்; தங்கைகளுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுப்பார்.

இதற்குள் அம்மா வீட்டுக் காரியங்களை யெல்லாம் முடித்து விட்டு, எங்களோடு வந்து உட்கார்ந்து கொள்ளுவாள். அதன் பின் எங்கள் பள்ளிக்கூடப் புத்தகங்களை யெல்லாம் மூட்டை கட்டி வைத்து, சிறுவர்களாகிய நாங்களும் அம்மாவும், அந்தக் கனவானைச் சுற்றி உட்கார்ந்து கொள்ளுவோம். ராமாயணம், பாரதம், பக்த விஜயம் முதலிய கதைகளை யெல்லாம் படித்து, ரொம்ப ரஸமாக எங்களுக்கு, அவர் விளக்கிச் சொல்ல ஆரம்பிப்பார். இந்தக் கதைகளெல்லாம் போக, டால்ஸ்டாய், ஷேக்ஸ்பியர், ஹ்யூகோ, கார்க்கி, ரோமேன் ரோலந்து இம்மாதிரி உலகப்பிரபலஸ்தர் நாவல்களையும் தமிழ்ப் படுத்திச் சொல்லுவார். மாதம் மூன்ருயிற்று. வாடகை மாத்திரம் வரவில்லை. அம்மாவும் கேட்க இன்னும் கூசினுள்.

இப்போது மழை இல்லை. நல்ல வெயில்தான். அப்படியிருந்தும், சிறுவர்களாகிய நாங்கள் மாலையிலே வெளியே போய் விளையாட ஆசைப்படவில்லை. குழந்தை ராஜாத்திகூட, தன் பொம்மைகளையும் தொடாமல் அவர் பக்கத்திலேயே உட்கார்ந்து விடுவாள். அவர் கதை சொன்னுல் அவ்வளவு ரஸமாயிருக்கிறது; நாங்கள் என்ன செய்ய! புதிய புதிய உலகமல்லவா எங்கள் கண்முன்னே வந்து விடுகிறது!

டால்ஸ்டாயின் 'போரும் காதலும்' என்ற நாவலை நடுப்பாதியில் அந்தக் கனவான் எங்களுக்குக் காலட்சேபம் செய்து கொண்டிருக்கையில், அவருக்கு ஊரிலிருந்து கடிதம் வந்துவிட்டது. அவர் எங்களை விட்டுப் பிரிய வேண்டியவராகி விட்டார்.

"அம்மா! நான் போகவேண்டும். இந்த என் புஸ்தகங்களை யெல்லாம் குழந்தைகள் வைத்துக் கொள்ளட்டும். உங்கள் குடும்பத்தோடு குடும்பமாய்ப் பாவித்து, என்னிடம் பட்சம் காட்டியதற்கு வந்தனம்" என்று சொல்லி, வாடகைப் பாக்கி பூராத் தொகைக்கும் ஒரு செக் எழுதி, அதை அவர் எங்கள் அம்மாவிடம் கொடுத்துவிட்டு விடை பெற்றுக் கொண்டார்.

அவர் ஊருக்குப் போனதிலே எங்களுக் கெல்லாம் மிகவும் வருத்தமாகவே இருந்தது. ஆனுலும், கடைசியாக வாடகை வந்து விட்டதல்லவா? அம்மாவுக்குச் சேலை, எங்களுக்கெல்லாம் சட்டைகள் இனி வாங்கியாகிவிடும்—இதிலே ஒரு சந்தோஷம்.

புத்தகங்களை யெல்லாம் அடுப்பங்கரைக்குக் கொண்டுபோய், அம்மா அவைகளின் தூசியைத் தட்டி, அவற்றின் பெயர்களை ஒவ்வொன்ருக எங்களைப் படிக்கச் சொல்லிக் கேட்டு மகிழ்ந்தாள்.

என் முத்தண்ணு வேலுவைப் பார்த்து, "வேலு! இனிமேல் அந்த மனிதர் மாதிரி நீதான் இரைந்து இந்தப் புத்தகங்களைப் படித்து,

எங்களுக்கு அர்த்தம் புரித்துச் சொல்ல வேண்டும். உனக்குத் தான் நல்ல குரல் இருக்கிறது. அதோடு, இத்தனை நாளும் உனக்குத்தான் நன்றாய் இங்கிலீஷ் சொல்லிக் கொடுத்திருக்கிறார்" என்று கட்டளை யிட்டாள் அம்மா. வேலுவும் கம்பீரமாகத் தலையை அசைத்தான்.

இந்தச் சமயம் அத்தை வந்து சேர்ந்தாள். அவளிடம் அம்மா அந்தச் 'செக்' கைக் காட்டி, "என்னவோ சொன்னீர்களே, அக்கா! அந்த மனிதர் எவ்வளவு நாணயஸ்தர், பாருங்கள். போகும் போது, பைஸா மாறலாக ஒரு 'செக்' வெட்டி வாடகையைக் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்." என்று சந்தோஷமாய்க் கூறினாள்.

"என்னவோ ஆச்சரியந் தான்" என்று, உண்மையிலேயே வியந்தவளாய் நின்றாள் அத்தை.

இழவு! அவள் போய்த்தொலையு முன்னே தெருக்கோடி ஓட்டல்கார ஐயன் வந்து குளறத் தொடங்கி விட்டான்.

"இந்த வீட்டிலே இருந்தானே ஓர் ஆசாமி, அவன் எங்கே? பலே புரட்டனா யிருக்கிறானே! ஆறு மாசமாய் என் சோற்றைத் தின்றுவிட்டு, பொய்ச் 'செக்' எழுதிக் கொடுத்து ஏமாற்றிவிட்டான். பாங்கியில் கொண்டு போய்க் கொடுத்தால், வீசியெறிகிறான். இந்த ஆசாமி ஊரிலே ரொம்பப் பேரை இப்படி மோசம் செய்திருக்கிறான்—பல பேரிடம் 'செக்' கைக் கொடுத்து, பணமே வாங்கிக்கொண்டுபோயிருக்கிறான்" என்று புலம்பிய ஹோட்டல்காரன், தன் கையிலே வைத்திருந்த ஒரு 'செக்' கின் மீது, 'தூ!' என்று துப்பினான்.

வெற்றியடைந்த சேவல்மாதிரி, நிமிர்ந்து, அத்தை எங்கள் அம்மாவைப் பார்த்தாள். அம்மா பேசவில்லை. அவள் புடவையின் கதியென்ன? எங்கள் சட்டைகளின் கதி என்ன?

ஹோட்டல்காரனே ஓயவில்லை. அம்மாவை நோக்கி, "உங்களுக்குக்கூட ஏதாவது அந்தக் கடன்காரன் பாக்கி வைத்திருப்பானே? நாமம் சார்த்தி யிருப்பானே?" என்று கேட்டான்.

அம்மா மிகவும் சாந்தமாக, எங்களை யெல்லாம் ஒரு முறை சுற்றிக் கண்ணோட்டம் விட்டாள். பிறகு, "வேலு! அந்த டால்ஸ்டாய் நாவலை எடுத்து வந்து படி" என்று அழுத்தமான குரலில் சொன்னாள்.

பின்னர், அடுப்பண்டை சென்று, தன் கையிலிருந்த 'செக்' கைத் தீயிலே திணித்து எரியவிட்டு விட்டுத் திரும்பிவந்து, ஹோட்டல்கார ஐயனுக்குப் பதில் சொன்னாள்: "இல்லை; அவரிடம் எங்களுக்கு வரவேண்டிய பாக்கி ஒன்றுமில்லை. எங்கள் கணக்குத் தீர்ந்துவிட்டது."

★

**இறைவன் தான் யார்? சநாதனமாக உள்ள ஒரு சோலையில், அனாதியான ஒரு விளையாட்டை ஆடும் ஒரு நித்திய பாலகனே அவன்.**

**—அரவிந்தயோகி**

# புத்தக உலகம்

**ஸ்ரீ ராமகிருஷ்ணர் அருள் வாக்கு: விலை அணா 1. ஸ்ரீ புத்தர் அருள்வாக்கு: விலை அணா 1. இரண்டையும் பிரசுரித்தோர்: ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம், கோயமுத்தூர்.**

சட்டை ஜேபிக்குள் போட்டுக் கொள்ளக் கூடிய இவ்விரு சிறு புத்தகங்களும் அற்புதமான பிரசுரங்களாகும். இந்த மகான்களின் அரிய உபதேசங்களை அருமையாய் மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார்கள். ஒவ்வொன்றின் முகப்பிலும் அந்தந்த மகானின் திருவுருவப் படமும், தெளிந்த, சுருக்கமான ஜீவிய வரலாறும் காணப்படுகின்றன. இத்தகைய மகான்களின் உபதேசங்கள் நாடெங்கும் பரவும்படி செய்வதற் கேற்ற ஒரு சாதனம் இம்மாதிரி பாராயணப் பிரசுரங்கள் தான். கல்யாணம், விழாக்கள் முதலிய விசேஷ காலங்களிலெல்லாம் நூற்றுக் கணக்காய் வாங்கி விநியோகிக்க ஏற்ற இச்சிறு பிரசுரங்கள், தமிழ் நாடெங்கும் பரவ வேண்டுமென்பது நமது ஆவலாகும்.

**செண்பக ராமன் பள்ளு: பதிப்பாசிரியர்: மரியஜான் காலிங்கராயர். விலை 14 அணா. கிடைக்குமிடம்: ஸ்ரீ குமார் காப்பி மார்ட், கேப் ரோடு, கோட்டாறு, நாகர் கோவில்.**

'பள்ளு' என்பது தமிழ் நாட்டுப் பிரபந்த வகைகளில் ஒன்றாகும். நிகழ்ச்சிகள் பள்ளரிடையே நடப்பது போல, பாட்டுடைத் தலைவனை கடவுள் அல்லது பெரியோன் ஒருவனது பெருமையை விளக்குவது இதன் இலக்கணம். 'பள்ளு'க்கள் கிராம மக்களைச் சித்தரிப்பவை. 'செண்பக ராமன் பள்ளு' பழங்காலக் கிறிஸ்தவப் புலவரொருவரால் இயற்றப்பட்டிருக்க வேண்டும். ஆயினும், தமிழனின் இதயம் அதில் பொங்கி வருகிறது. மதம் ஒரு மக்களின் அடிப்படைக் கலாச்சாரத்தை ஒரு நாளும் பாதியாது என்பதற்கு ஓர் உதாரணம்போல் இந்நூல் விளங்குகிறது. இத்தகைய பழம் நூல்கள் வெளிவருவது, இலக்கியத்துக்கும் சமூகத்துக்குமே நல்ல சேவையாகும்.

**ஓட்டைப் படகு: ஆசிரியர்கள்: அ. டேவிட் பிச்சை, எஸ். ஏ. ரஹீம். விலை அணா 10. வெளியிட்டோர்: டார்ப்பிடோ பதிப்பகம், தஞ்சை.**

ஏழை மக்களின் இன்னல்கள் தீர, நாட்டிலே பொருளாதார அமைப்பில் புரட்சிகரமான மாறுதல் வேண்டும் என்ற உணர்ச்சி பரவி வருகிறது. இதை அடக்க எழுந்துள்ள பல முயற்சிகளில் முஸ்லீம் லீக்கின் பாகிஸ்தான் திட்டமும் ஒன்று என்பது இந்நூலாசிரியர்களின் அபிப்பிராயமாகும். ஜமீன்தார்களின் கட்சியே முஸ்லீம் லீக் என்று ஆசிரியர்கள் கருதுகிறார்கள். பாகிஸ்தான் திட்டத்தின் போலித் தனத்தையும் அபாயத்தையும், ஏராளமான மேற்கோள்கள், ஆதாரங்க

**இந்த மதிப்புரைகளில் காணப்படும் புத்தகங்கள் 'சக்தி காரியாலய'ங்களிலும் விலைக்குக்கிடைக்கும்.**

ளுடனும் தர்க்க ரீதியாகவும் விளக்கி யிருக்கிருர்கள்.

**எதிர் பார்த்தது:** ஆசிரியர்: நா. சோமசுந்தரம். விலை அணு 12. கிடைக்குமிடம்: நா. சோமசுந்தரம், ஷண்முகநாதபுரம்.

கற்பனையான ஒரு தமிழ் நாட்டில்; கற்பனையான ஒரு புரட்சியை, கற்பனையான முறையில் வர்ணிக்கும் ஒரு தமிழ் நாவல் இது. பிரத்யட்சமாய் நம் அருகே நடப்பதுபோல் அவ்வளவு தத்ரூபமாக வாழ்க்கை இதில் வர்ணிக்கப் படவில்லை. ஆயினும், சமூகச் சீர்திருத்தம், குடியரசுப் புரட்சி முதலிய உயர்ந்த கொள்கைகளைப் பரப்பும் பிரசார முறையில் இது அமைந்திருக்கிறது. நடை எளிதாயும் இலக்கண சுத்தமாயும் இருக்கிறது. திரு. சோ. இலக்குமிரதன் பாரதி ஓர் அழகான முகவுரை எழுதி யிருக்கிருர்.

**பரிசலோட்டி:** ஆசிரியர்: 'சங்கரராம்'. விலை ரூ. 1—8—0. வெளியிட்டோர்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை.

ஏழை எளியவர் வாழ்க்கையைக் கண்முன்னே நடப்பதுபோல் சித்தரிக்கும் சிறு கதைகள் இவை. கதாபாத்திரங்கள் அனைவரும் ஜீவனேடு இயங்குகிருர்கள். பற்பல விதமான தொழிலுடையோரையும் பலவிதமான சம்பவங்களையும், பாத்திரங்களும் எழுவாய்களுமாக ஆசிரியர் கையாண்டிருப்பதால், ஒவ்வொரு கதையும் தனிச்சுவை தருகிறது. சில கதைகளின் தொனி, சற்று மங்கலா யிருக்கிறது. உதாரணமாகப் 'பரிசலோட்டி' என்ற கதை மூட நம்பிக்கையிலே போய் லயமடைவது போல் முடிகிறது. இம்மாதிரி சிறு குறைகளும் கதைகளின் ரஸத்திலே மறைந்து விடுகின்றன. மொத்தத்தில் கதைகள் அனைத்தும் மணியானவை என்றே சொல்ல வேண்டும்.

**பொழுது போக்கு:** ஆசிரியர்: தி. ஜ. ர. விலை ரூ. 1—12—0. வெளியிட்டோர்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை.

காலம் தலைச் சுமையாக இருக்கும்போது, 'பொழுது போக்கு' வேண்டியது தான். இதையே ஆசிரியர் தி. ஜ. ர. தம்முடைய 49 கட்டுரைகளில் தருகிருர். அடிஸன், ஸ்டீல் முதலானவர்கள், ஹாஸ்ய நடையைக் கையாண்டு அரசியல், பொருளாதாரம், மதம், இலக்கியம், குடும்பம், சமூகம், கல்வி, இசையரங்கு, நாடகக்கலை முதலிய துறைகளில் உள்ள குறைகளை நீக்க முயன்றது போல, நம் ஆசிரியரும் ஹாஸ்யச் சுவையைப் பயன்படுத்தி யிருக்கிருர். 'புத்தக இரவல்', 'கடிகார மகாத்மியம்', 'வாத்தியார் ரகங்கள்', 'இச்சக வித்தை', 'ரஸிகன் உரிமை', 'ரஸமான சம்பாஷணை' முதலிய அபூர்வமான கட்டுரைகளில், சிந்தனை நிறைந்திருக்கிறது. 'பாம்பாட்டி முனிய'னின் பாம்பு, பட்டினி கிடந்து, தலை தூக்க முடியாமல், சத்தியாக்கிரகம் செய்வது ஒரு நல்ல ருசிகரமான அனுபவ சித்திரமாகும். 'புத்தக இரவல்' என்ற தலைப்பில், புத்தகக் காதலர்களும், புத்தக மோஹிகளும், புத்தகம் காக்கும் 'பூதங்களும்' வருவதும் போவதும் மிக மிக ருசியாக இருக்கிறது.

—வி. ஆர். எம். செட்டியார்.

# சிறந்த தமிழ் நூல்கள்

★

**1. கம்ப ராமாயணம்**

ஸ்ரீ டி. கே. சி. விலை ரு. 6—0—0

" அநேக வர்ணப் படங்கள். எல்லா விதத்திலும் உயர்ந்த பதிப்பு. மேல் அட்டையின் அழகையே பார்த்துக் கொண்டிருக்கலாம். தலைமுறை தலைமுறையாக அழியாத் தமிழ்ச் செல்வமாய் வைத்துக் காக்கவேண்டிய புத்தகம். விலை ஆறு ரூபாய் போட்டிருக்கிறது. பணம் உள்ளவர்கள் ஆறு பவுன் கொடுத்தும் வாங்கலாம்."

—"கல்கி" 16—4—42.

**2. மலரும் மாலையும்**

ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளை விலை ரு. 1--12—0

**3. அரும்பிய முல்லை**

ஸ்ரீ தித்தாரப்பன் விலை ரு. 2— 0—0

(தபாற் செலவு வேறு)

★

அச்சில்

**4. முத்தொள்ளாயிரம்**

**5. மாணவருக்கு : காந்திஜீ**

★

## புதுமைப் பதிப்பகம்

காரைக்குடி, S. I. R.

★ ஆடவரின் ஆடைகளும் திருப்தியும்
★ ஸ்திரீகளின் அலங்காரமும் குதூஹலமும்
★ குழந்தைகளின் பொழுதுபோக்கும் வாசிப்பும்.

- நாகரிகமான மில் நெசவு வேஷ்டிகள், கோட்டு, ஷர்டிங்குகள், பின்கள், பொத்தான்.
- ரம்மியமான சில்குகள், சார்ஜட்டுகள், சீட்டி, பாப்ளின், நைஸ் வாயல்கள், சிந்தாமணி, பிரபாத் டேப்புகள், கல்பகா பார் வாசனை சோப்புகள், குட்டிகூரா பவுடர்கள், டாய்லட் செட்டுகள்.
- விளையாட்டுச் சாமான்கள், ஸெல்லூலாய்ட் பொம்மைகள், நோட்டு, பென்ஸல், சிலேட்டுகள், ஸ்டேஷனரிகள்.

எல்லாவிதமான தேவைக்கும் :

**ந வீ ன ஸ் டோ ர் ஸ்**

ராமச்சந்திரபுரம் :: ராயவரம்

[புதுக்கோட்டை சமஸ்தானம்]

**தாய்மார்களே !**

கண்ட மாவுகளைப் போட்டு குழந்தையின் குடலைக் கெடுக்காதீர்

குழந்தைக்குச் சரியான உணவு

தாய்ப்பால்தான்

உங்கள் பாலையே விருத்தி செய்து கொள்ளுங்கள்.

**ப ய ஸ் ய ா**

தாய்ப்பாலை விசேஷமாய் வளர்க்கும் திவ்ய ரஸாயனம்

விலை ரூ. 2—8—0 (பாக்கிங் & போஸ்டேஜ் வேறு)

தயாரிப்பவர் :
ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர் ரோடு,
திருச்சினப்பள்ளி.

Distributors :
THE IDEAL AGENCIES,
M. M. STREET,
KARAIKUDI.

# உடம்பும் மருந்தும்

வர்ணங்களின் சக்தி: லண்டனில் பழைய பிளாக் பிரையர்ஸ் பாலத்தில் ஒரு காலத்தில் ஏராளமான தற்கொலைகள் நடந்தன. போலீஸ்காரன் இருபது முப்பது அடி தூரத்தில் நிற்கையிலேயே, பலர் பாலச் சுவரிலேறி நீரில் குதித்து மூழ்கி மாண்டார்கள். இதற்குக் காரணம் எவருக்கும் புரியவில்லை. வர்ண நிபுணர் ஒருவர் வந்தார். "பாலத்தில் பூசப்பட்டிருக்கும் மங்கலான கருநிறமே இப்படி மனிதர்களின் மனதில் வெறுப்பை அதிகரிக்கச் செய்கிறது. பளிச்சென்றிருக்கும் பச்சை வர்ணம் பூசுங்கள்" என்று அவர் யோசனை சொன்னார். அப்படியே செய்யப்பட்டது. தற்கொலைகளும் நின்றன! பொதுவாக, மங்கல் வர்ணங்கள் அனைத்துமே பயனில்லை. நீலமும் ஊதாவும் மன அமைதியும் ஆறுதலும் தருமாம். ரத்தச் சிவப்பு, உற்சாக மூட்டிச் சுறுசுறுப்புத் தரும். மஞ்சளும் உற்சாக மூட்டுமாயினும், பரபரப்புண்டாக்காது. சாப்பாட்டு அறைக்கு ஏற்றது பழுப்பு வர்ணந்தான். இவ்வாறாக, வர்ணங்களை யோசனையோடு வீட்டு அறைகளுக்கும் சாமான்களுக்கும் பூசினால், தேக-மன ஆரோக்கியத்தோடு வாழலாம்.

* *

சங்கீதமும் உதவும்: வர்ணம் மட்டிலும் அல்ல; சங்கீதத்துக்கும் ஆரோக்கிய விஷயத்தில் நல்ல சக்தி உண்டாம். சங்கீதத்தால் (1) அதன் தன்மைக்கேற்றபடி இருதயத் துடிப்பு விரைவுபடவோ மெதுப்படவோ செய்யும்; (2) தேகத்தில் உணவணுக்களை உயிரணுக்களாய் மாற்றும் இயற்கைச் சக்தி அதிகரிக்கும்; (3) சுவாசம் துரிதப்படும்; (4) தசைகளின் உரம் அதிகரிக்கும் அல்லது குறையும்; (5) மனது நிச்சயமாய்ப் பாதிக்கப்படும். இனிமையும் சாந்தமும் குதூகலமுமான சங்கீதத்தால், தேகத்துக்கும் மனதுக்கும் ஆரோக்கிய மூட்டிக் கொண்டு வாழ முடியும். வர்ணம், இசை என்ற இந்த இரண்டு விஷயங்களிலும் நல்ல ஆராய்ச்சி செய்துள்ள டாக்டர் எட்வார்டு படலாஸ்கி என்பவரே இதையெல்லாம் கூறுகிறார்.

* *

கர்ப்ப கால வாந்தி: கர்ப்ப ஸ்திரீகளுக்கு உணவிலே வெறுப்பு ஏற்பட்டு வாந்தியெடுக்கிறார்களே, அதைத் தடுக்க முடியுமா என்ற கேள்விக்கு, ஒரு வைத்தியப் பத்திரிகை பதிலளித்திருக்கிறது: (1) கர்ப்பத்துக்கு முன்னும் கர்ப்ப காலத்திலும் உடம்பை ஆரோக்கியமாய் வைத்துக் கொள்ள வேண்டும்; (2) தூக்கம் விழித்த உடனேயே படுக்கையை விட்டு எழுந்து விடக்கூடாது; விழித்தபடியே நீண்ட நேரம் படுத்திருந்து ஓய்வு கொள்ள வேண்டும்; (3) காலையில் லேசான ஆகாரம் உட்கொள்ள வேண்டும் - இவைகளின் மூலம் அன்னத் துவேஷமும் வாந்தியும் குறையும். பொதுவாக, ஒரு ஸ்திரீயின் ஒரு கர்ப்ப காலத்தில் கடுமையான வாந்தி உபத்திரவம் இருந்தால், அவளது அடுத்த கர்ப்பத்தின் போது அந்த உபத்திரவம் இருப்பதில்லை.

வெளவாலும் மலேரியாவும்: ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த ஸான் ஒண்டேரியோ என்னும் நகரில் சுமார் 35-வருஷங்களுக்கு முன், மலேரியா முதலிய வியாதிகள் மிகுந்திருந்தன. காரணம், சுற்றிலும் இருந்த சகதி நிலங்களில் கொசுக்கள் மல்கியிருந்தது தான். கொசுக்களின் கொடுமையால் நகரில் மிகுந்த வியாதிகளை யெல்லாம் ஒழிக்க, டாக்டர் சார்லஸ் எ. ஆர். காம்பெல் என்பவர் ஒரு யுக்தி செய்தார். வெளவால்களை ஏராளமாய் நகருக்கருகில் அவர் வளர்த்தார். கொசுக்களை யெல்லாம் வெளவால்கள் பட்சணம் செய்து அழித்தன. நகரும் க்ஷேமம் அடைந்தது. வெளவால்களைக் கொல்லுவோருக்கு 5 முதல் 300 டாலர் வரை அபராதம் விதிக்கப்படுமென நகர சபையார் ஒரு சட்டமும் செய்து விட்டார்கள்.

* *

அரசின் குணம்: ‘குணபாடம்’ என்ற நூல் கூறுகிறது:

அரசம்வேர் மேல்விரணம்
ஆற்றும் அவ் வித்து
வெருவவரும் சுக்கில நோய்
வீட்டும் - குரல்வறள்வி
தாகமொழிக் கும்கொழுந்து
தாதுதரும் வெப்பகற்றும்
வேகமுத் தோடம்
போக்கும் மெய்.

அரச இலைக் கொழுந்தைப் பாலில் அவித்துச் சர்க்கரையுடன் தின்றால், சுரமும், முப்பிணிக் கோபமும் தணியும்; தாது விருத்தியடையும். வித்தின் சூரணத்தை உண்டு வர, மலச்சிக்கல், சுக்கில நோய், குரல் வறட்சி தீரும்; ஜீரண சக்தி மிகும். பட்டைப் பொடியைக் கருக்கிய சாம்பலை நீரில் ஊற வைத்து வடிக்கட்டிய ஜலத்தைக் கொஞ்சம் குடித்தால் விக்கல் தீரும். பட்டைப் பொடியில் கால் பலம் எடுத்துக் கஷாயம் செய்து பருகினால், சொறி சிரங்குகள் குணமாகும்; வெப்பு அகலும். பட்டைத் தூளைப் புண்களின் மீது தூவி வர, அவை ஆறி வரும்.

★

## தந்தையை விடுவித்த மகன்

சென்னை ஸ்மால் காஸ் கோர்ட் ஜட்ஜியான (1859—80) ஸி. வி. ரகுநாத சாஸ்திரியார், 12-வயதுச் சிறுவனாயிருந்த காலத்தில், ஓர் ஆச்சரியமான செயல் புரிந்தார். அவருடைய தகப்பனார், ஒரு கடனைத் தீர்க்க முடியாமல் சித்தூர் ஜெயிலில் அடைபட்டார். அப்போது, தந்தை தம் தந்தைக்குச் செய்யவேண்டிய சிராத்தம் வந்தது. ரகுநாதரின் தாய்க்கு, என்ன செய்வதென்று புரியவில்லை. தாய் அழுவது கண்ட ரகுநாதன், அதன் காரணத்தைக் கேட்டறிந்தார். உடனே சித்தூர் ஜில்லா ஜட்ஜியின் வீட்டுக்கு ஓடி, தங்கள் குறையை முறையிட்டார். “ஜாமீன் இல்லாமல் உன் தகப்பனாரை விட முடியாதே” என்றார் ஜட்ஜி. “ஜாமீன் கொடுக்க என்னிடம் வேறெதுவுமில்லை. நான்தான் இருக்கிறேன். என்னையே ஜாமீனாய்ச் சிறையில் வைத்துக்கொண்டு, என் தந்தையை அனுப்புங்கள்” என்று மன்றாடினார் ரகுநாதர். பனிரண்டு வயதுச் சிறுவனின் இவ்வுரை கேட்ட ஜட்ஜி, மனமிளகி, ஜாமீனில்லாமலே தந்தை சாஸ்திரியாரை விடுவித்தார். அந்த விடுதலை உத்தரவை ரகுநாதர் தாமே சிறைக்கு எடுத்துச் சென்று, தந்தையை விடுவித்து அழைத்துக் கொண்டு, அன்றிரவே வீடு போய்ச் சேர்ந்தார்.

# நம்பிக்கை

வாயுவி னாட்சியும் வந்தது — மத
　　வாரணம் போல்முகில் கூட்டமும்
போயங்கே யோர்மலை யுச்சியைச் — சரண்
　　புக்கிடும் காட்சியை என்சொல்வேன்.

தென்னை தலைவிரித் தாடுதே — நீலத்
　　தெய்விக விண்ணுங் குமுறுதே
மின்னொளி கண்ணைப் பறிக்குதே — இந்த
　　மேதினி யாடி நடுங்குதே.

ஓலமிட்டே கடல் சீறுதே — அதன்
　　ஓரத்தி லுள்ள குடிசையில்
பாலக னோடொரு தாயுமே — கடல்
　　பார்த்தழுதே யங்கு நிற்கிறாள்.

நைந்தழும் பெண்ணினைப் பார்க்கிலான் — புயல்
　　நகைத்தக் கூரையைப் பிய்க்கிறான்
பைந்தொடி கண்ணினீர் கட்டுமே — மழை
　　பரிந்து தண்ணம் சொரிகிறான்.

கதறி யெழுங்கடல் தன்னிலே — அவள்
　　கணவன் வலையுடன் சென்றுளான்
விதியின் செய லறியாமலே — அவன்
　　வீடு வரும் வழி பார்க்கிறாள்.

நம்பிக்கையென்ற பலத்திலே — அந்த
　　நள்ளிரவு தனைப் போக்கினாள் — அவள்
நம்பிக்கை யற்றிடக் காலையில் — சவம்
　　நண்ணிய தாழிக் கரையிலே.

நம்பிக்கை வாழ்வி னடிப்படை — இந்த
　　நம்பிக்கை வாழ்க்கையின் ஆணிவேர்
நம்பிக்கை தன்னை யிழந்தவர் — சாவை
　　நாடி யலைபவ ராவரே.

—கு. ராமலிங்கம்

*மழை பெய்யுமா? அவள் பெய்யும் என்றால் பெய்யும்; பெய்யாது என்றால் பெய்யாது. பல வருஷம் ஊருக்கு அவள் இந்தச் சோதிடம் சொல்லி வந்தாள்....*

# மழை அம்மன்

'ராதா'

அவளது குடிசை, ஐயனார் கோயில் பாலைக் காட்டுக்கு அடுத்தாற்போல் ஒட்டியிருந்தது. பாலை மரக் கிளைகளும் ஆலமரக் கிளைகளும் ஒன்றையொன்று தழுவி, அந்தக் கூரைக்குக் கூரையாய் நிழல் தந்து கவிந்துகொண்டிருந்தன.

இந்த மழையில்லா வறட்சிக் காலத்தில், நூற்றுக் கணக்கான ஜனங்கள் அவளைத் தரிசித்துக் காணிக்கை செலுத்த வந்தார்கள். அவளது குடிசை, ஓர் ஆலயம் போல் விளங்கியது. பெண்கள் தலைமீது கூடைகளில் மாவும் வெல்லமும் தேங்காயும் சூடனும் சுமந்து, பின்னே தம் குழந்தைகள் தொடர, வந்தார்கள். பெரியோரும் சிறியோரும் பல ஜாதி மக்களும் கூடிக்கூடி வந்தார்கள்.



★

குடியானவன் வணங்குகிறான்.

★

எல்லாரும் அவளை ஒரே கேள்விதான் கேட்டார்கள்: "தாயே! மழை பெய்யுமா? எப்போது பெய்யும்?" என்ற ஏக்கமான கேள்விதான். கிழக் குடியானவர்கள், குடிசைக்கு வெளியே இருந்த விசிப் பலகையில் அமர்ந்து, திரை விழுந்த தம் நெற்றி வியர்வையைத் துடைத்த வண்ணம், உள்ளிருந்து அம்மன் வருகையை ஆவலோடு எதிர் பார்த்தார்கள். இவர்களின் தலைக்கு மேலே கருணையற்ற நீல வானத்தில், ஜகஜ்ஜோதியாய்த் தன் கொடுங் கதிர்களை வீசிக் கொண்டு சூரிய பகவான் நித்த நித்தம் பவனி வந்துகொண்டிருந்தான். மழை! அந்த வானம் பார்த்த சீமைக்கு என்றுதான் மழை வரும்? இவ்வருஷம் பெய்யுமா? பெய்யாமலே போய் விடுமோ?

மழை அம்மன், இன்று ஒரு துறவியைப் போல் வாழ்கிறாள். என்றாலும், ஒரு காலத்தில் அவள் மகா அழகியாய் இருந்தாள். இளமையிலே சர்வாபரண பூஷிதையாய், வனதேவதை போல் ஊரிலே அவள் நடமாடிய காலம், முதியவர்களுக்கு நன்றாய் நினைவிருக்கிறது. புருஷனை யிழந்த போது, தோகை மயில் வீழ்ந்தது போல் வீதியிலே அவள் வந்து வீழ்ந்த அந்தச் சோகக் காட்சியைத்தான் யார் மறக்க முடியும்? அது நடந்து பல வருஷங்கள் ஆகிவிட்டன. இன்று அவள் ஊரெல்லாம் வணங்கும் சாமியாரிணி-மழை அம்மன்-ஆக மாறி விட்டாள்.

மழை அம்மன் மௌனமாக, மெள்ள, வெளியே வருவாள். அவளைக் கண்டதும், ஆண் பெண் குழந்தை குட்டிகள் அடங்கலும் வாய் புதைத்துப் பயபக்தியுடன் நின்று கொள்ளுவார்கள். அம்மன் அன்புடன் தலையசைப்பாள்.

சோர்ந்து ஏங்கிய குரல்கள் கேட்கும்:

"தாயே! வாய்க்கால் வறண்டு விட்டதே!"

"கம்பு காய்கிறதே!"

"கடலை தீய்கிறதே!"

"காராமணி கருகுகிறதே!"

"கன்று காலி சாகிறதே!"

"மழை பெய்யுமா, தாயே!"

மழை அம்மன் வாய் பேசாள். மௌனமாகவே, அவர்களுடைய காணிக்கைகளை எடுத்துக் கொண்டு உள்ளே செல்வாள்.

"இதோ அம்மன், சாமியுடன் பேசுகிறாள்" என்று ஒரு குழந்தை சொல்லும்.

ஒரு பெண் தலையசைப்பாள்: "ஆம்; நாளை மழை பெய்யும் என்று அவள் சொன்னால், பெய்தே தீரும். ஒரு நாளும் அவள் வாக்குப் பலியாது போனதில்லை."

பயந்து நடுங்கும் உடல் விதிர்ப்புடன், "மழையை இவளே ஆட்டிவைக்கிறாள்" என்றோர் இளம் பெண் முணுமுணுப்பாள்.

"இல்லை, இல்லை. அவள் சாமி அவளுக்குச் சொல்லுகிறது. முந்தாநாள் வந்தேன். 'இன்றும் நாளையும் கண்டிப்பாய்ப் பெய்யாது' என்றாள். அவள் சொன்னபடியேதான் நடந்து விட்டது" என்பான் ஒரு புருஷன்.

"அவளுடைய சாமி, சமையல் கட்டிலே ஓர் அலமாரிக்குள் ஒளித்து வைக்கப் பட்டிருக் கிறது" என்பான் ஒரு வாலிபன்.

"என்னை எப்போது வந்தா லும் பூக்கள் கொண்டுவா என்று அம்மன் சொல்லுகிருள்" என் பான் ஒரு சிறுவன்.

"உனக்கு ஞாபகமிருக்கிறதா? அப்போது அவளுக்குப் பதி னேழு வயதிருக்கும். ரொம்ப அழகாய்த்தான் இருந்தாள். அவ ளோடு வந்த அவள் புருஷன், எதையோ ஒரு முக்காலிப் பெட் டியை வைத்துக்கொண்டு, ஊரை யெல்லாம் ஜிகினு பார்த்துக் கொண்டிருந்தான்" என்ருள் ஒரு முதியவள்.

"ஆமாம். அப்புறம் அவன் மாண்டதும், ஒருவருஷம் வரை யில் இவளையும் காணேம். பின்பு திரும்பிவந்தாள். சாமியார்போல் இருந்தாள். இன்று மாதிரி அப் போதும் பெரிய வறட்சி. நாமெல் லாம் கவலையோடு தெருச் சந்தி யில் கூடி, கொடும்பாவி கட்டி யிழுத்துக்கொண் டிருப்பது கண்டு, நம்மிடம் வந்தாள். இரக் கம் நிறைந்து 'கவலைப்படாதீர் கள். இன்ருே நாளையோ மழை பெய்யும்' என்று அபயமளித் தாள். அன்று ராத்திரியே, இடி யும் மின்னலுமாய் மழை வந்து, மூன்று நாள் இரவு பகல் சோனு மாரியாகப் பொழிந்து விட்டது. ஊரெல்லாம் பசுமை கொண் டது" என்ருன் ஒரு முதிய குடி யானவன்.

குடிசைக் குள்ளிருந்து மெல் லிய பாட்டுக் குரல் கேட்டது; பிறகு, சிறு விரல்கள் எதையோ தட்டுவது போல் சத்தம்.

பயத்தால் உடல் குன்றி "அவள் சாமியுடன் பேசு கிருள்" என்ருன் ஒரு சிறுவன்.

மழை அம்மனின் மெலிந்த உருவம் வாயிற்படியில் தோன்றி யது. நிசப்தம்.

"கவலைப்படாதீர்கள், இன் றிரவு மழை பெய்யும்!" என்று அம்மன் கம்பீரமாய்க் கூறினள்.

"இன்றைக்கேயா? வானத் தில் ஒரு மேகத்தைக் காணேமே! நிர்மலமா யிருக்கிறதே?" என்று சந்தேகப்பட்டாள் ஒரு பெண்.

அம்மனின் முகம் சுளித்தது. "நான் சொன்னது ஒருபோதும் தவறியதில்லை. கவலையை விட்டு வீட்டுக்குப் போங்கள். இன்று பெய்யும்" என்று தீர்க்கமாய்ச் சொன்னுள் அம்மன்.

சந்தேகத்தால் எதிர்த்துப் பேசிய பெண்ணை, எல்லாரும் கோபித்துக் கொண்டார்கள். "தாயே! மன்னித்துக்கொள். சிறு பெண் ஏதோ தெரியா மல் சொல்லிவிட்டாள். உன் வார்த்தை தவறவே தவருது. நாங்கள் செல்கிருேம். எங்களைக் காப்பாற்று" — இப்படிப் பல குரல்கள்.

எல்லார் முகமும் ஓரளவு மலர்ந் தது. அதிலே கொஞ்சம் சந்தேக மும் ஒட்டிக்கொண் டிருந்தது. எல்லாரும் சென்ருர்கள்.

அன்றிரவு, அம்மன் சொன்ன படியே மழை சந்திரத்தாரை யாய்ப் பொழிந்து விட்டது.

கருப்பு வருமோ என்ற பயம் தீர்ந்தது. ஊரெல்லாம் செழித்தது. அவ்வருஷம் நல்ல விளைச்சல். சாமிகளுக்கும் மழை அம்மனுக்கும் செலுத்த வேண்டிய காணிக்கைகளெல்லாம் செலுத்தப்பட்டன.

இவ்வாறே இன்னும் பத்து வருஷங்கள் மழை அம்மன், கிராமத்தாருக்கு, தவருத மழை வெயில் சோதிடங்கள் சொல்லிக்கொண்டிருந்தாள். வருஷத்துக்கு வருஷம் ஆண் பெண் குழந்தை குட்டிகள் அடங்கலும் அவள் வீட்டு வாசலில் பலமுறை வந்து காத்து நிற்பார்கள்.

பிறகு, அவள் காலமானுள். அவளது வாழ்க்கையைப் போலவே, அவளுடைய சாவும் ஒரு விசித்திரமாய்த்தான் இருந்தது.

ஒரு நாள் ஒரு குடியானவன் தன் வண்டியைச் சந்தைக்கு ஓட்டிக்கொண்டு சென்றுன். போகிற வழியில்தான் மழை அம்மனின் ஏகாந்தக் குடிசை.

குடிசை வாயிற்படியிலே வாடிய புஷ்பம் போல் அம்மனின் மெல்லிய உடம்பு துவண்டு சுருண்டு கிடந்ததை, அவன் கண்டான். வண்டியிலிருந்து சரேல் என்று இறங்கிய குடியானவன், அம்மன் மூர்ச்சையாகிக் கிடக்கிருளோ என்று சந்தேகித்து, அவளை வாரித் தூக்கினுன். பேச்சில்லை; மூச்சுமில்லை. அம்மனின் ஆவி பிரிந்தோடிவிட்டது. குடியானவன் நடுநடுங்கித் திகைத்தான். ஒரு புறம் பெருந்துயர் கொண்டு கண்ணீரும் சொரிந்தான். அம்மனின் வெற்றுடம்பைப் பூப்போல் மெல்லக் கீழே கிடத்தினுன். வண்டி மாட்டை ஒரு மரத்தில் கட்டினுன்.

மழை அம்மனின் குடிசை இன்று அநாதையாகி விட்டது. யார் வேண்டுமானுலும் இப்போது அதற்குள்ளே நுழையலாம். குடியானவனுக்கு என்னவோ அந்தக் குடிசைக்குள்ளே சென்று பார்க்க வேண்டுமென்று ஆசை உண்டாயிற்று. இதுவரையில், சென்ற பல வருஷங்களாக, அம்மனைத் தவிர வேறு யாரும் புகுந்திராத அந்தக் குடிசைக்குள்ளே அவன் நுழைந்தான்.

சமையலறைச் சுவரிலே ஓர் அலமாரி. அதற்குள், நல்லுடையுடுத்த வொரு வாலிபனின் புகைப்படம் இருந்தது. அதற்குப் பூமாலைகள் அணியப்பட்டிருந்தன. பக்கத்திலே ஒரு மாக்கல் விளக்குப் பிரகாசமாய் எரிந்து கொண்டிருந்தது. மூன்றடி உயரமும் பல கோடுகளும் எண்களுமிட்ட பளிங்குத் தெய்வம்போல் துலங்கிய ஒரு கண்ணுடிக் குழாய் மீது தீபத்தின் ஒளி வீசிக்கொண் டிருந்தது. குழாய் மிகப் பத்திரமாய்ச் சுவரிலே மாட்டப்பட் டிருந்தது. அதற்கும் ஒரு மாலை சார்த்தப்பட்டிருந்தது. குடியானவன், அதைக், கண்டதும் தன்னையறியாமலே கைகூப்பிப் பயபக்தியுடன் வணங்கினுன். பெரியவர்கள் காலத்திலே என்ன ஆச்சர்யமான தேவதைகளைத்தான் வைத்துச் சென்றிருக்கமாட்டார்கள்? அவன் பயந்து பிரமித்து மீண்டும்

வணங்கி நின்றான். அந்தப் பெண்ணின் கணவன் காலமானபோது, அவளுக்கு அவன் வைத்துச் சென்ற ஒரே ஆஸ்தி அந்தப் 'பளிங்குத் தெய்வந்தான்' என்று குடியானவன் அறியான்; அந்தப் புருஷன் ஒரு ஸர்வேயர் என்றும் அவன் அறியான்; கால நிலை அளக்கும் 'பாரோ' மீட்டர் என்றொரு கருவியுண்டு என்பதும் அந்தக் குடியானவனுக்குத் தெரியாது. 'பளிங்குத் தெய்வம்' பாரோ மீட்டரா யிருந்தால் என்ன, வேறெதுவா யிருந்தாலென்ன? மழை அம்மனோடு அதன் சக்தியும் போய்விட்டது. இப்போது அது யாருடனும் பேசாது. ஆனால், ஊர்க் கோயிலிலே ஒரு மாடத்தில் எண்ணெய் பால் அபிஷேகங்கள் பெற்று, ஆடை ஆபரணதி அலங்காரங்களோடு அது அமர்ந்துவிட்டது. அதைப் பார்க்கும்போதெல்லாம் மழையம்மனையும் அந்தக் கிராமத்து மக்கள் ஞாபக மூட்டிக் கொள்ளுகிறார்கள்.

★

## ஹிந்துக்களின் நாணயம்

எந்த இந்தியனும் ஒரு காலத்தும் பொய் சொன்னதாகக் குற்றஞ் சாட்டப் பட்டதில்லை என்று அரியன் சொல்லுகிறார். இந்திய மக்கள் நேர்மையும் நாணயமும் நடுநிலைமையும் உடையவர்கள் என்று ஹ்யூ வெங்ட்ஸாங் கூறுகிறார். சிந்துவிலும் மேற்கிந்தியாவிலும் உள்ள மக்கள் பேச்சிலே உண்மையும் நீதியிலே சிறப்பும் வாய்ந்தவர்கள் என்று பிரையர் ஜோர்டானஸ் (1330-ஆம் ஞு) சொல்லுகிறார். ஆஸ்ட்ரகான் என்ற ருஷிய மாகாணத்தில் குடியேறிய பனியா மக்களைக் கண்ட பல்லாஸ் "பனியாக்கள் நாணயமாய் நடப்பதால், அர்மீனியர்களைவிட இவர்களிடமே ஜனங்களுக்கு அதிகப்பற்று உண்டாகியிருக்கிறது" என்று கூறுகிறார். உலகிலே வேறெந்த வர்த்தக மக்களையும்விட இந்திய வர்த்தகரே மிக்க உறுதியுடன் நாணயமாய் நடக்கிறார்கள் என்று, அறிவும் புகழும் வாய்ந்த பொதுஜன ஊழியரான ஸர் வில்லியம் ஸ்லீமான் சொல்லுகிறார்.

—ஸர் ஹென்ரி யூல்.

## மறுக்க முடியாத பதில்

அவுரங்கசிப் சக்கரவர்த்தி, பாதுஷாக்களின் பாதுஷா என்று அழைக்கப்படுவது வழக்கம். ஒரு சமயம் அவருடைய தூதராக, மீர்ஜா முகம்மது என்பவர் கோல்கொண்டாவின் அரசரான அபுல் ஹாஸன் என்பவரிடம் சென்றார். அந்தத் தூதரோடு பேசுகையில் "நானும் கூட என் நாட்டில் பாதுஷா என்று தான் அழைக்கப்படுகிறேன்" என்று அபுல் ஹாஸன் சொன்னார். மீர்ஜா முகம்மது கோபமூண்டு "அதென்ன இப்படித் துணிச்சலாய்ச் சொல்லுகிறீர்! அவுரங்கசிப் சக்கரவர்த்தியைத் தவிர, வேறு எவனும் தன்னைப் பாதுஷா என்று சொல்லிக்கொள்ள முடியாது. இதை அறியும்" என்றார். "ஏன்? அவுரங்கசிப் சக்கரவர்த்தி பாதுஷாக்களின் பாதுஷா அல்லவா? நாம் பாதுஷாக்களா யில்லாவிட்டால், அவர் எப்படிப் பாதுஷாக்களின் பாதுஷா ஆக முடியும்?" என்று அபுல் ஹாஸன் சாதுர்யமாய்ப் பதிலளித்தார். மீர்ஜா முகம்மது இதை மறுக்கமுடியாமல் வாய்மூடி மௌனியானார்.



அதன் வாசனையிலிருந்தே

அதன் பெயரைச் சொல்லட்டுமா?

அதுதான்

# நரஸுஸ்

# காபி

மற்ற விபரங்களுக்கும், மெயில் ஆர்டர்களுக்கும்
கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :—

**நரஸுஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி**

ஹெட் ஆபீஸ் :—சேலம்

MNK 8 TM

( REGD. NO. 1983 ) [கேட்லாக் இனாம்]

# விலைகள் மாறுதல் இல்லை!

தங்க மெடலும், நற்சாக்ஷிப் பத்திரங்களும்
பரிசு பெற்ற

ஒரிஜினல்

# கல்ச்சர் வைரங்கள்

டிரேட் மார்க் | டிரேட் மார்க்



"Original" Inventor

தோடு சைஸ் அணா 8

பேஸரி சைஸ் அணா 6

## M. ராமசாமி செட்டி & கோ.,

ஷராப் வியாபாரம் :: திருச்சினாப்பள்ளி

ஒரிஜினல் டைனமோ கல்ச்சர் வைரங்கள்
தோடு சைஸ் அணா 12 பேசரி சைஸ் அணா 10

# காந்திஜி



உள்ளம் உருகுது கள்ளம் கருகுது
உத்தமன் காந்தியை நினைத்து விட்டால்
வெள்ளம் பெருகிடக் கண்ணீர் வருகுது
வேர்க்குது இன்பம் தேக்குதடா...... (உள்)

சித்தம் குளிர்ந்துள பித்தம் தெளிந்திடும்
சீரியன் காந்தியின் பேர் சொன்னால்
புத்தம் புதியன முற்றும் இனியன
பொங்கிடும் உணர்ச்சிகள் எங்கிருந்தோ... (உள்)

கிளர்ச்சிகொண் டான்மா பளிச்சென மின்னுது
கிழவன் காந்தியின் பழமை சொன்னால்
தளர்ச்சிகள் நீங்கிய வளர்ச்சியில் ஓங்கிய
தாட்டிகம் உடலில் கூட்டுதடா... (உள்)

சோற்றையும் வெறுக்குது காற்றையும் மறக்குது
சுத்தனக் காந்தியின் சக்தி சொன்னால்
கூற்றையும் மிரட்டிடும் ஆற்றலைத் திரட்டிடக்
கூடுதடா மனம் தேடுதடா... (உள்)

தூக்கமும் கலைந்தது ஏக்கமும் குலைந்தது
துன்பக் கனவுகள் தொலைந்ததடா
வாழ்க்கையும் திருந்திட நோக்கமும் விரிந்தது
வள்ளலக் காந்தியின் நினைப்பாலே... (உள்)

வஞ்சனை நடுங்கிடும் வெஞ்சினம் அடங்கிடும்
வாய்மையன் காந்தியின் தூய்மை சொன்னால்
அஞ்சின மனிதரும் கெஞ்சுதல் இனியில்லை
ஆண்மையும் அன்பும் அருளுமடா... (உள்)

ஜீவர்கள் உலகுள்ள யாவரும் சமமெனச்
செய்கையில் காட்டிய காந்தியடா
பாவமும் பழிகளும் தீவினை வழிகளும்
பதுங்குமடா கண்டு ஒதுங்குமடா... (உள்)

எழுபதும் நாலும் குழகுழ வயசினில்
என்னே! காந்தியின் இளமையடா!
முழுவதும் அதிசயப் பழுதறு வாழ்க்கையின்
முத்தனடா பெரும் சித்தனடா... (உள்)

ஏழைகள் எளியரின் தோழன்அக் காந்தியை
எப்படிப் புகழினும் போதாதே
வாழிய அவன்பெயர் ஊழியின் காலமும்
வையகம் முழுவதும் வாழியவே. (உள்)

—நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை.

# மங்கையின் மந்திரம்

## எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

பூண்டி என்பது ஒரு குறுநாடு. அது ராஜபுதனத்தில் உள்ளது. பதினாலாம் நூற்றாண்டில், அதனை ஆண்டவன் அனங்க தேவன். அவனுக்கு அறிவு அதிகம்; ஆண்மை மிகுதி; ஆற்றலும் நிறைவு.

விதி யாரை விட்டது? அதனால் அனங்கன் மதி பிசகினான்; காமத்தில் ஆழ்ந்தான்; கள்ளில் மூழ்கினான்; பகலும் இரவும் காமமும் கள்ளுமே கதி யெனக் கிடந்தான். அவன் தேவியின் பெயர் மங்கள மங்கை.

அன்னை தயை, அடியாள் பணி, மலர்ப்பொன்னின் அழகு, புவிப் பொறை, வேசி துயில், விறல் மந்திரி மதி—இவை எல்லாம் உடையவள் அம்மங்கை நல்லாள். தன் பதியைத் திருத்த முயன்றாள் அப் பத்தினி; நயந்து வேண்டினாள்; பயந்து கூறினாள். அனங்கன் காதில் ஒன்றும் ஏறவில்லை.

**பூர்வ காலத்தில் தமிழ்ப்பெண்கள் வீரம் நிறைந்திருந்தார்கள்; ராஜ தந்திரம் வாய்ந்திருந்தார்கள். சில சமயம் ஆண்களை விடத் தன்மதிப்பும் துணிவும் காட்டியிருக்கிறார்கள். அப்படிப் பட்ட ஒரு தீர ரமணியின் வீரச் செயலை விவரிக்கும் இந்தச் சரித்திரக் கதையின் போக்கும் சரி, நடையும் சரி, விறுவிறுப்பாய் இருக்கின்றன.**

பூண்டி மக்கள் அம் மன்னவன் மீது வெறுப்புக் கொண்டனர்; படை வீரரும் பரிபவம் அடைந்தனர். அவனுக்குப் பகைவர் இருவர். இருவரும் முகம்மதியர். ஒருவன் தாகூர்கான்; மற்றவன் கேசரிகான்; இருவரும் சமயம் பார்த்து நின்று நாட்டைக் கட்டிக் கொண்டனர்.

மங்கள மங்கை என்ன செய்வாள்? மகிபனை அழைத்துக் கொண்டாள்; தன் தாயின் வீடு சேர்ந்தாள்; குலதெய்வத்தைக் குறித்து நோன்பு கொண்டாள். பின்னர், அனங்க தேவன் மதி கொண்டான்; மனைவியின் ஆலோசனையையும் நாடினான். நாட்டை மீட்க, சதிபதிகள் இருவரும் சேர்ந்து உபாயம் தேடினர்.

பகைவருக்கோ படைப் பலம் மிகுதி; பக்க பலமும் உண்டு. ஆதலின், அவர்களை வாள்முனையில் வெல்லுதல் கடினம். பார்த்தாள் மங்கள மங்கை; தந்திர முனையை மேற்கொண்டாள்.

ரஜபுதனத்தில் வசந்த காலம்; மக்களுக்கு மிகவும் உல்லாச காலம். அங்கே காமன் பண்டிகை மிகவும் பிரபலம். அது சமயம் ஆடவரும் பெண்டிரும் ஆனந்தமாகக் காலம் கழிப்பர்; சிறிய விளையாட்டில் முனைவர்; செம்பஞ்சுக் குழம்பைக் குழல்

மூலம் பலர்மீது தூவுவர்; பண்பும் பரிகாசமுங் காண்பர்.

பெண்டிரோ சந்தனம், புனுகு, சவ்வாது, குங்குமக் குழம்பு இவை கொண்டு விளையாடுவர்; விநோதம் கொள்வர்; வேடிக்கையும் காண்பர். இதற்கு உறவினரையும் பிறரையும் அழைப்பது வழக்கம்.

மங்கள மங்கை வசந்த விழாக் கொண்டாட ஆயத்தம் செய்தாள்; அனைவரையும் பரிந்தழைத்தாள்; ஆடலுக்கும் பாடலுக்கும் நடிகரை வரவழைத்தாள். தாகூர்கான், கேசரிகான் இருவருக்கும் அழைப்போலை போயிற்று.

ரஜபுதன வழக்கம், மங்கையின் அழைப்போலை காணின், மகா வைரிகளும் வியந்து வருவர்; நயந்து பேசுவர். இரண்டு 'கான்'களும் களிப்புடன் வந்தனர்; கழிபேருவகையும் கொண்டனர்.

மங்கள மங்கை அவ்விருவரையும் வரவேற்றாள்; மண்டபத்துக்கு அழைத்துச் சென்றாள்; மகிமையான ஆசனத்திலும் அமர்த்தினாள். உடனே கானத்தில் கைவந்த காரிகையர் ஆடினர்; பாடினர். புருவம் நெறிய வில்லை, உதடு அசைய வில்லை, உடம்பு நெளிய வில்லை; குரல் கண்டு குயிலும் நாணியது. முகமதியர் இருவரும் பூரிப்புக் கொண்டனர்; பரவசமும் ஆயினர்.

முடிவிலே நவமாதர் தவ வேடத்தில் தோன்றினர்; கைகோத்து வட்டமாக நின்றனர்; சுற்றிச் சுற்றிச் சோளமடித்தனர்; கானம் எழுப்பினர்; நரம்பா, மிடறு என்று தெரியவில்லை. பலரும் பிரமித்தனர்; சிலைபோல் இருந்தனர்.

இளமங்கையரில் சிலர் சந்தனக் குழம்பெடுத்து, யாவர் மீதும் தெளித்தனர். முடிவில் மங்கள மங்கை ஆடரங்கில் தோன்றினாள்; நாட்டியக் கலையின் நுணுக்கம் காட்டினாள்; கான ரஸமும் கொட்டினாள்; செம்பஞ்சுக் குழம்பை இரு கான்கள்மீதும் வீசினாள்.

கான்கள் இருவரும் சொக்கிப் போயினர்; மெய்யும் மறந்தனர். மங்கள மங்கை சைகை செய்தாள் நயனங்கொண்டு! உடனே தாகூர்கானும் கேசரிகானும் மணிக் கயிற்றால் பிணிப்புண்டனர்; சிறையும் பட்டனர்.

ஜால வித்தையே போல், ஆடிய மாதர் அனைவரும் ஆடவர் ஆயினர். ஒவ்வொருவரின் இடுப்பிலும் ஈட்டி மிளிர்ந்தது; கையிலே பட்டாக்கத்தி மின்னியது. மண்டப மெங்கும் சிங்க நாதம் கிளம்பியது.

என் செய்வர் அவ்விருவரும்? எல்லாம் மாயமெனக் கண்டனர்; மங்கையின் சூழ்ச்சியெனக் கொண்டனர்; மண்ணாசையைக் கைவிட்டனர்; உயிர்ப் பிச்சை வேண்டினர்.

மங்கையின் மனம் அல்லவா? இளகிவிட்டது. இருவருக்கும் மங்கள மங்கை அபயம் அளித்தாள்; ஆறுதல் கூறினாள்; புத்தி

யும் புகட்டினுள்; இருவருக்கும் துணையாக வந்த வீரரும் மெய் விதிர்த்து, மங்கையின் பாதம் பணிந்து மன்னிப்பு வேண்டினர். நல்லது என்றுள் அந் நங்கை நல்லாள்.

பின்பு, இரு கான்களும் கை விலங்குடன் உடன்வர, மங்கள மங்கை தன் கணவன் சகிதம் பூண்டிநாடு சேர்ந்தாள்; மணுள னுக்குப் பட்டாபிஷேகமும் செய் வித்தாள்.

★

## தடையுத்தரவின் கதி

ஒருகாலத்தில் உம்பாலா ஸ்விப் என்ற லாட்டரிச் சீட்டு மிகவும் பிரபல மாக இருந்தது. இது ரொம்பவும் தீமையானது என்று எண்ணி, இதைத் தடுத்துவிட, இந்திய சர்க்கார் தீர்மானித்தார்கள். மே-மீ 25-வ அந்தச் சீட்டுக் குலுக்கும் தேதி. அதை விளம்பரம் செய்யக்கூடாது என்று 'பயனீர்' என்ற பிரபல பத்திரிகைக்குத் தடையுத்தரவு ஒன்றைச் சர்க்கார் விதித்து விட்டார்கள். உம்பாலா ஸ்விப் கமிட்டியின் தலைவர், உடனே ஒரு யுக்தி செய்தார். "உம்பாலா ஸ்விப் சீட்டுக் குலுக்கும் தேதி மே-மீ 25-வ என்று விளம்பரம் செய்யக்கூடாது என்று 'பயனீர்' பத்திரிகைக்குச் சர்க்கார் உத்தி ரவு போட்டிருக்கிருர்கள்" என்று ஒரு விளம்பரத்தை அதே பத்திரிகையில் அவர் பிரசுரித்துவிட்டார்!

## நைஜாம் பட்டம் பெற்ற கதை

மஹ்பூப் ஆலி என்ற நைஜாமை, வைஸிராய் லார்டு கர்ஸான் எப்படியோ தாஜா செய்து, பிரிட்டிஷ் சர்க்காரிடம் பீராரைக் குத்தகைக்கு விடும்படி செய் தார். அதற்குக் கப்பமாக வருஷம் ஒன்றுக்கு இருபத்தைந்து லட்சம் ரூபாய் தாங் கள் செலுத்துவதாக, கர்ஸான் ஒப்புக்கொண்டார். இந்த ஏற்பாட்டுக்கு, நிர்ப் பந்தத்தால் இசைந்துவிட்ட நைஜாம், நான்கு நாள்வரையில் அன்னுகாரம் செல் லாமல் துக்கப்பட்டாராம். ஆனுல், இதற்குப் பரிசாக ஜி. ஸி. பீ. (Grand Cross of Bath) என்ற கௌரவப் பட்டம், நைஜாமுக்கு அளிக்கப்பட்டது. அதைப் பற்றி ஆங்கிலோ இந்தியர்கள் தமாஷாக "Gave Curzon Berar (கர்ஸானுக்கு பீராரைக் கொடுத்தவர்)" என்று வம்பளந்தார்களாம்.

## நாயக ராணிகளின் வீரம்

ஒரு சமயம் திருச்சி அரசரின் படைகள், தஞ்சைமாநகர்மீது படை யெடுத்தன. அக்காலத்தில் தஞ்சையில் அரசுசெய்த விஜயராகவ நாயக்கர், தம்முடைய அந்தப்புரப் பெண்களையெல்லாம் கோட்டைக்குள் திரட்டி வைத்து விட்டு, தாம் யுத்தமுனைக்குச் சென்ருர். கோட்டைக்குள் இருந்த பெண்கள் அனைவரும் வாள் தாங்கிய கைகளுடன், தங்கள் மன்னரின் செய்தியை எந்நேர மும் எதிர்நோக்கி நின்றுகொண்டிருந்தார்கள். அவர் வெற்றிவாகை சூடிவந் தால் வைபவமாக வரவேற்கவும், அவர் மாண்ட செய்தி வந்தால் தாங்களும் மாண்டு மடியவும் தயாராயிருந்தார்கள். அரசர் மாண்ட செய்திதான் வந்தது. உடனே, ஒருவரை ஒருவரும் தன்னைத்தானேயும், அந்தப் பெண்கள் அனை வரும் வெட்டி மடித்து மாண்டு விட்டார்கள். இந்தப் பயங்கரமான சாகஸச் செயலைப்பற்றி, மைசூர்க் கல்வெட்டு இலாக்கா அறிக்கையொன்று கூறுகிறது.

அண்ணனுக்கும் தம்பிக்கும் ஓயா விவாதம்; ஆஸ்திக நாஸ்திக விவாதம். அறிவை இயற்கை மயக்கினுல் யார் ஜயிக்க முடியும்?

# நாஸ்தீகன்

'துறைவன்'

"கடவுள் ஒருவர் உண்டா?"

"உண்டு" என்முன் அண்ணன்.

"இல்லே" என்முன் தம்பி.

அண்ணன் ஒரு பெரிய வேதாந்தி. தம்பியோ ஒரு தீவிர நாஸ்திகன். அண்ணன் பூஜைக்காக மலர்களேச் சேகரிப்பான். "அண்ணு, ஏன் அவற்றை ஓர் உயிரற்ற சிலேயின் பாதத்தில் எறிந்து வீணுக்குகிருய்? அவற்றை முகர்ந்துபார்" என்பான் தம்பி. வானத்திலே நிகழும் அந்தி நாடக சௌந்தர்யங்களே, விஞ்ஞான ரீதியாக அலசி அலசி, எண்ணிலாத பௌதிகக் காரணங்களேக் கொண்டு விளக்குவான் தம்பி. "உன் காரணங்களேத் தூக்கிக் குப்பையில் போடு. வந்து மேலே பார். வானத்தின் மோகனப் பேரழகிலே உன்னே மறந்து விடு. அதிலே தரிசிக்கலாம் இறைவனேக் கண்கூடாக" என்று ஆர்வத்தோடு சொல்வான் அண்ணன்.

அண்ணனும் தம்பியும் ஒருநாள் வெளியே சென்முர்கள். வெயில் தகித்துக் கொண்டிருந்தது. புழுதி வேகும் வீதியில் வீசிய அனல்காற்று நெருப்புக் கங்குகளே வாரிக் கொட்டியது. அந்தத் தீப்பறக்கும் வீதியிலே உருளுகிருன் ஒரு மனிதன். பொசுக்கும் மணலே அவன் பிச்சிப் பூ என்று நினேத்தான்!... உடம்பெல்லாம், கசியும் வியர்வையால், புழுதி அப்பிக்கொண்டிருந்தது.

"தருமம் தலே காக்கும், கோவிந்தா!"

அலறிக் கொண்டே புரண்டான் வீதியில். அலறலின் எதிரொலி போல், ஒரு சிறுவன் "கோவிந்தா, கோஒஓஓவிந்தா" என்று கதறிக்கொண்டே வீடு வீடாகச் சென்முன். அவனது கையில் ஒரு உண்டியல் செம்பு. அதில் போட்டிருந்த நாமம் பாதி அழிந்து போயிருந்தது.

உருளுவதை நிறுத்திஞல் உடம்பு கொப்புளித்து விடும் என்று நினேத்தவன் போல், விடாமல் அந்த வீதி பூராவும் உருண்டான் அந்தப் பிச்சைக்காரப் பக்தன். உண்டியலில் யாரோ இருவர் இரண்டு தம்பிடி போட்டார்கள். அதுவும் செல்லாத் தம்பிடியாகத்தான் இருக்கும்.

ஒரு வீட்டு வாசல்.

"கோவிந்தா, கோஓஓவிந்தா"

வீட்டுக்குள்ளிருந்து பெருத்த தொந்தியோடு ஒருவர் வந்தார். சாப்பிட்ட திகரத்தில் அவருக்கு எதிர்க்களித்தது. லேசாக வயிற்றைத் தடவிக்கொண்டே "இதே தடா சனியன்!" என்றார். மறுபடியும் வீட்டுக்குள் நுழைந்து கதவைச் சாத்தினர்......

நான்கு கண்கள் இதையெல்லாம் கவனித்தன.

"பார்த்தாயா, அண்ணு?...... கடவுள், கடவுள் என்றுயே! கடவுள் வகுத்த நீதியைப் பார்?" என்றான் தம்பி.

"அது அவனவன் விதி" என்றான் அண்ணன்.

படீரென்று ஏளனமாகச் சிரித்தான் தம்பி: "விதியா? பத்து மாதம் கர்ப்பத்தில் எல்லா மனித ஜீவன்களுந்தான் தங்குகின்றன. அவற்றுள் ஒன்றைப் பார்த்து 'நீ பிச்சை யெடுத்துத்தான் பிழைக்க வேணும்' என்றும் மற்றென்றை நோக்கி 'உலகின் சகல வசதிகளேயும் நீ அனுபவி' என்றும் சொல்லும் விதியை எழுதினவனையா வணங்குவது.........நல்லது என்கிருய் நீ?"

விர்ரென்று வந்த அனல் காற்றிலே தம்பியின் சிரிப்பொலியும் கலந்தது.

ஒரு சிறிய கோயில். ஆனல் ரொம்பப் பழமையானது. ஸ்வாமி பெரிய வரப்பிரஸாதி என்று அந்தப் பக்கமெல்லாம் தெரியும். மூல விக்கிரகம், நெடுநாளாகப் பெற்றுவரும் அபிஷேகங்களினல் இரண்டு அங்குல கனத்துக்கு மெழுகேறிப் போய் இருந்தது. கன்னங்கறுத்த விக்கிரகத்தின் தேஜஸை, பக்கத்தில் தயங்கித் தயங்கி எரிந்துகொண்டிருந்த அகல் விளக்குச் சுடர், இன்னும் நன்ருய் எடுத்துக் காட்டிற்று.

"பூம்......ம்......ம்!" என்று சங்கு முழக்கம்.

உடனே காதைச் செவிடுபடுத்தும் கண்டாமணியின் ஓங்காரமும், நாதஸ்வரம் மேளம் இவற்றின் அபஸ்வரக் கூச்சலும் பொங்கி எழுந்தன.

நிம்மதியும் நிசப்தமும் கொஞ்சமாவது இருந்து, பக்தர்கள் எங்கே கடவுளே நினைத்துவிடப் போகிருர்களோ என்று அவைகளுக்குப் பயம்!

ஒரு பட்டர் வருகிருர். கையைத் துடைத்துத் துடைத்துக் கரியேறிப்போன துணியொன்று தோளில் விளங்க, சிலையண்டை செல்கிருர். வாயில் முணுமுணுப்பு......அதாவது மந்திரம்! ஸ்வாமிக்கு அலட்சியமான ஒரு ஸ்நானம். பிறகு ஆடையாபரணங்கள்; குங்கும சந்தனுதி அலங்காரங்கள்.

நடை திறந்துவிட்டது. பக்தர்கள் அரையில் கட்டிய வேட்டியுடன் கன்னத்தில் போட்டுக் கொள்கிருர்கள், பௌடர் ஒற்றிக் கொள்வது போல! பட்டர் தமது மேல் துண்டோடு, ஸ்வாமியின் முன்னல் கம்பீரமாக நிற்கிருர்.

தீபாராதனே!

ஒரு பணிவு, பயபக்தி வேண்டுமே!

தீபத் தட்டை ஏந்திய கை, ஸ்வாமியை உதாசீனம் செய்யும் கிண்டல்போல நடனம் செய்கிறது.

"மோக்ஷம், மோக்ஷம்!"

"பாவ மன்னிப்பு..."

"சொத்து, சுகம்...குழந்தை" என்று பக்தர் குழாத்திடை முனகல்! வாய்விட்டும் கூவுகிறார்கள் சிலர். மத்தியானம் 'கோவிந்தா'ப் பிச்சைக்காரனைக் கண்டு கதவைச் சாத்திய புண்ணிய புருஷர், இப்பொழுது ஸ்வாமி சந்நிதியில், விபூதிப் பட்டைகள் பளிச்சென்று விளங்க, தேவார திருவாசகங்களைக் 'கண்ணீர் மல்க'ப் பாடுகிறார். அவருடைய கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பம் பொழிகிறது.

அண்ணனைத் தம்பி ஏறிட்டுப் பார்த்தான். அவனது முகத்தில் பழைய எள்ளனக் குறிப்பு முதிர்ந்திருந்தது.

"உன் 'கடவுள்' எங்கே இருக்கிறார், அண்ணா?.........எல்லாம் சுத்த அபத்தம்......" என்றான் தம்பி. அண்ணன் மௌனம் சாதித்தான்.

**கோயிலை** விட்டு இருவரும் வெளியே வந்தார்கள். வெற்றி பெற்று விட்டோம் என்ற நினைப்பின் பெருமிதம் முகத்திலே விளங்க, உயர்ந்து நடந்தான் தம்பி.

அண்ணனின் முகத்தில் ஒரு புன்னகை. பரிவு, எள்ளனம், இரக்கம்-என்ன வெல்லாமோ அதில் தொனித்தன.

"ஏன் சிரிக்கிறாய், அண்ணா?"

"உன் நிழலைப் பார்த்தேன். அது உன்னிலும் எவ்வளவு மாறுபட்டிருக்கிறதென்று சிரித்தேன்."

"ஒளிக் கதிர்கள் நேர்க்கோட்டில் பாய்கின்றன. அதனால் நிழல், ரூபத்தின் பல நிலைகளிலும் மாறுகிறது."

"எங்கிருந்து பாய்கின்றன?"

"ஒளிப் பிழம்பிலிருந்து."

"ஒளிப் பிழம்பு என்றால்?"

"ஜகத்தின் ஒரு பகுதி."

"ஜகத்தாவது யாது?"

"காலமும் தூரமும் கலந்து பின்னிய அகண்ட வலை."

"கலந்து பின்னியது யார்?"

"இயற்கை."

"இயற்கையா?" 'களுக்' கென்று சிரித்தான் அண்ணன்: "சரிதான், இயற்கை எப்படிப் பிறந்தது?"

தம்பி திகைத்தான்; யோசித்தான்.

அண்ணன் மௌனமாகப் பொறுத்திருந்தான். தம்பி யோசித்து யோசித்து மண்டையை உடைத்துக் கொண்டான்.

"தம்பீ, விடை தெரிந்துவிட்டதா?"

"இல்லை, அண்ணா. அது கடவுளுக்குத்தான் வெளிச்சம்" என்றான் தீவிர நாஸ்திகனான தம்பி!




— ஆசிரியர் : லியோ டால்ஸ்டாய் —
மொழிபெயர்த்தவர் : சு ப. நாராயணன்

**கி. பி.** 1852-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12-ஆம் தேதி அன்று படைத் தலைவனாகிய (கேப்டன்) க்ளப்பவ் என்பவன், என்னுடைய மண் குடிசையின் தாழ்ந்த வாயிலுக்குள், தோள் வில்லைகளும், வாளும் அணிந்து கொண்டு, நுழைந்தான். நான் காக்கசஸ் பிரதேசத்துக்கு வந்த பின், அன்றுதான் அவனை முதன் முதலாக ராணுவ உடையில் கண்டேன். அவனை நான் ஏறிட்டுப் பார்த்ததும், அவன் சொன்னான் : "நான் நேரே துணைத் தளபதி (கர்னல்) இடமிருந்து வருகிறேன். நமது படை முழுவதும் நாளை புறப்பட வேண்டும் என்பது உத்தரவு."

"எங்கே ?" என்று கேட்டேன்.

"ந——என்ற இடத்துக்கு. துருப்புகள் எல்லாம் அங்கேதான் போய்க் கூடவேண்டும்."

"அங்கிருந்தபடியே தான் தாக்குதல் ஆரம்பமாகுமோ ?

"ஆகலாம்."

"எந்தப் பக்கமாய்த் தாக்குவார்கள் என்று நீ அபிப்பிராயப் படுகிறாய் ?"

"இதில் அபிப்பிராயத்துக்கு என்ன இடம் ? இது வெறும் அபிப்பிராய மல்ல ; நான் நேரில் அறிந்த விஷயம். தளபதி (ஜெனரல்) இடமிருந்து நேற்றிரவு ஒரு தார்த்தாரியன் குடல் தெறிக்கக் குதிரையில் ஓடி வந்தான். இரண்டு நாளைக்கு வேண்டிய ரொட்டியுடன் படை கிளம்ப வேண்டு மென்பது தளபதியின் கட்டளையாம். ஆனால், எங்கே கிளம்புவது, எதற்காக, எவ்வளவு காலம் செல்லும் என்பதை மட்டும் கேட்டு விடாதீர்கள். புறப்பட வேண்டும் ! அவ்வளவு தான் !"

"ஓகோ! அப்படி இரண்டு நாளைக்கு வேண்டிய ரொட்டி மட்டும் கொண்டு போவதானல், அதற்கு மேலே துருப்புகள் தங்க வேண்டி யிராது என்று தானே ஆகிறது?"

"அப்படிச் செல்ல முடியாது."

"ஏன் முடியாது?" என்று வியப்புடன் நான் கேட்டேன்.

"இப்படித்தான் முன்பு டார்கி என்ற இடத்துக்கு ஒரு வாரத்துக்குப் போதிய ரொட்டியுடன் போனேம். ஆனல்,நாங்கள் திரும்பிவரக் கிட்டத்தட்ட ஒரு மாதமாகிவிட்டது."

சற்று நேரம் பேசாமலிருந்துவிட்டு, "உன்னேடு நானும் வரலாமா?" என்று நான் கேட்டேன்.

"நன்ருய் வரலாம். ஆனல், என் பேச்சைக் கேட்டாயானல், வரவேண்டாமென்றுதான் சொல்லுவேன். வீணய் ஆபத்தில் ஏன் மாட்டிக்கொள்ள வேண்டும்?"

"இல்லை. உன் பேச்சைத் தட்டுகிறேன் என்று நினைக்காதே. இந்த ஒரு மாத காலமாய்க் காத்திருந்ததெல்லாம் ஏதாவது யுத்தம் நடக்காதா, பார்க்கலாம் என்றுதான். அப்படியிருக்க, கடைசியில் யுத்தம் வரும்பொழுது, அதைப் பார்க்கும் சந்தர்ப்பத்தை நழுவ விடும்படி செய்கிருயே!"

"வேண்டுமென்ருல், வா. ஆனலும், வராமல் இங்கேயே தங்கிவிடுவது நல்லதல்லவா? நாங்கள் தான் போகவேண்டுமென்று கடவுள் விதித்து விட்டார். நாங்கள் திரும்பி வரும் வரையாவது, நீ இங்கேயே இருந்து, காட்டில் வேட்டையாடிப் பொழுதுபோக்கிக்கொண்டிருக்கலாமே! இதுவே உத்தமமானது" என்று அவன் ரொம்ப இரக்கமாய்ப் பேசினன்.



அவன் பேசிய பேச்சில் நானும் கூட இது சரி என்றுதான் எண்ணிவிட்டேன். ஆனல், அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் எந்தக் காரணத்தை முன்னிட்டும் பின்னே தங்கிவிட முடியாதென்று உறுதியாய்ச் சொன்னேன்.

படைத் தலைவன் மேலும் சமாதானம் சொல்லப் பார்த்தான்: "நீ இதுவரை காணுத என்னத்தைத்தான் அங்கே காணப்போகிருய்? போர் எப்படி நடக்கிறது

என்பதைத் தெரிந்துகொள்ள உனக்கு ஆசை இருந்தால், போர் விளக்கம் என்ற பெயரோடு ஆசிரியர் மிக்கைலவ்ஸ்கி தானி லெவ்ஸ்கி எழுதிய நூலைப் படித்துப்பார். ரொம்ப நன்றாயிருக்கும். ஒவ்வோர் அணிவகுப்பும் எங்கெங்கே இருந்துகொண்டு சண்டை போடும் என்ற எல்லா விவரமும் அதிலே விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது" என்றான் அவன்.

"அது ஒன்றும் எனக்குப் பிடிப்பதில்லை" என்றேன் நான்.

"வேறே என்னதான் உனக்குப் பிடிக்கும்? மனிதனை மனிதன் எப்படிக் கொல்லுகிறான் என்பதைப் பார்க்க விரும்புகிறாய் போலக் காண்கிறது: அப்படித்தானே? ......... 1832-ஆம் வருஷம் எங்களோடு நகர்ப்புறத்தான் ஒருவன் இருந்தான் — அவன் ஸ்பானிஷ்காரன் என்று நினைக்கிறேன். சற்று நீல நிறமுள்ள நெடுஞ் சட்டை போட்டிருந்தான். இரண்டு படையெடுப்பு வரை எங்களோடு இருந்தான்... ...கடைசியில், எல்லாருக்கும் நேர்ந்த கதிதான் அவனுக்கும் நேரிட்டது. இங்கே யெல்லாம் உங்கள் சாமர்த்தியத்தைக் கண்டு யாரும் அண்ணாந்து பார்க்க மாட்டார்கள், தம்பி!" என்றார் அவர்.

என் நோக்கத்தை இப்படித் தப்பாய் அர்த்தம் பண்ணியதில், அவன்மேல் எனக்கு வருத்தந்தான். ஆனாலும், நான் என் கருத்தைத் தெளிவுபடுத்த முயலவில்லை.

"அவன் வீரமுள்ள ஆளா?" என்று கேட்டேன்.

"நான் எப்படிச் சொல்ல முடியும்? எப்பொழுதும் முன்னணியில்தான் நிற்பான். எங்கெல்லாம் அமளி நடக்கிறதோ, அங்கெல்லாம் இருப்பான்."

"அப்படியானால், அவன் வீரமான ஆள்தான்" என்றேன்.

"அது எப்படி? வேண்டாத இடத்தில் எல்லாம் தலையைக் கொடுத்து மாட்டிக்கொள்வதை, வீரம் என்று சொல்லலாமா?"

"பின்பு எதைத்தான் வீரம் என்பாய்?" என்றேன்.

"வீரம்! வீரம்!" என்று அவன் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டான். அந்தப் பதத்தைப் பற்றி இப்பொழுதுதான் அவன் சிந்திக்கலானான். சற்று யோசித்து விட்டு, "எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ, அப்படி நடந்து கொள்பவனே வீரம் உள்ளவன்" என்று சொன்னான்.

இதைக் கேட்டதும் 'இன்னதைக் கண்டு அஞ்சவேண்டும், இன்னதைக் கண்டு அஞ்சப்படாது என்று தெரிந்திருப்பதே சரியான வீரம் ஆகும்' என்று பிளேட்டோ வரையறுத்திருப்பது எனக்கு நினைவு வந்தது. படைத் தலைவன் சொன்னது தெளிவில்லாமல், கோவையற்றிருந்தது. ஆனாலும், அடிப்படைக் கருத்தில் பிளேட்டோ கூறியதற்கும் இதற்கும் அப்படி வேற்றுமை எதும் இருப்பதாக எனக்குப் படவில்லை. சொல்லப் போனால், கிரேக்க ஞானியின் வியாக்கியானத்தைக் காட்டிலும் படைத் தலைவனின் வியாக்யானமே சரியானதாய்த் தோன்றிற்று. பிளேட்டோவைப்

போல, தன் கருத்தைப் படைத் தலைவன் வெளியிட்டிருக்க முடிந் தால், அஞ்சத் தக்கதைக் கண்டு அஞ்சுகிறவனும், 'அஞ்சத் தகாததைக் கண்டு அஞ்சாதவனுமே வீரமுடையவன்' என்று அவன் சொல்லியிருப் பான்.

என் எண்ணத்தைப் படைத் தலைவனுக்கு விளக்கிக் காட்ட வேண்டுமென்று எனக்குத் தோன்றிற்று.

"ஆம். எனக்கு ஒன்று தோன்றுகிறது: ஒவ்வோர் ஆபத் திலும், அதில் ஈடுபடுவது அல்லது ஈடுபடாமல் இருப்பது என்ற இரண்டு வழிகள் உண்டு. கடமை உணர்ச்சியால் தூண்டப்பட்டு ஆபத்தில் இறங்குவது வீர மாகும்; கீழ்த்தர உணர்ச்சி களின் வசப்பட்டு ஆபத்தில் இறங்குவது கோழைத்தன மாகும். தற்பெருமையினாலோ, பண ஆசையினாலோ, புதுமை மோகத்தினாலோ, தன் உயிரை ஆபத்துக்குள்ளாக்கும் ஒருவனை வீரன் என்று சொல்லமுடியாது. அற்கு மாறாக, தன் குடும்பத்துக் குத் தான் செய்ய வேண்டிய கடமை என்னும் கண்ணியமான உணர்ச்சி காரணமாகவோ, அல் லது தன் மனச் சாட்சிக்கு அது ஒவ்வாது என்ற காரணமாகவோ, ஆபத்துக்கு ஆளாக மறுக்கும் ஒருவனைக் கோழை என்று சொல்லி விடவும் முடியாது" என்றேன்.

அப்போது படைத் தலைவன் பார்த்த பார்வையி லிருந்து, அவன் என் வார்த்தைகளைக் கேட்டுப் பிரமிப்படைந்தான் என்றே சொல்லவேண்டும். புகை பிடிக்கும் குழாயில் புகையிலை யைத் திணித்துக் கொண்டே, "என்னவோ, இவ்வளவு அழ காய் விளக்கும் சாமர்த்தியம் எனக்கில்லை. எங்களிடம் இருக் கும் ஒரு கொடிக் காவலன் இந்த மாதிரி தத்துவ ஆராய்ச்சிகளில் பிரியமுள்ளவன். அப்பேர்ப்பட் டவனிடம் தான் நீ பேசவேண் டும். அவன் பாட்டுக்கூடக் கட்டு வானும்" என்றான்.

இந்தப் படைத் தலைவனை நான் நேரில் கண்டது காக்கசஸிலே தான். இதற்கு முன்பு இவனைப் பற்றி ரஷ்யாவில் நிறையக் கேள் விப் பட்டிருக்கிறேன். இவ னுடைய தாய் மரியா ஐவனெவ்ன க்ளப்பவ், என் வீட்டிலிருந்து ஒன் றரை மைல் தூரத்திலுள்ள, தன் னுடைய சிறு நிலத்தில் வாழ்ந்து வந்தாள். நான் காக்கசஸுக்குப் புறப்படும் முன்னதாக, அவளைப் பார்க்கப் போனேன். தன் செல்லப் பிள்ளையை நான் பார்க் கப்போவது தெரிந்ததும், அந்த அம்மை உள்ளம் பூரித்து விட் டாள். படைத் தலைவனுக்குத் தலை மயிரெல்லாம் வெளுத்துப் போயிருந்தும், அவனை அவள் செல்லப் பிள்ளையென்றே மதித்து வந்தாள். தன் யோக க்ஷேமத் தைப் பற்றிக் கடிதம் எழுது வதை விட உயிருள்ள கடிதமாக நானே போவது பற்றியும், அவ ளது வெகுமதியை நானே நேரில் கொண்டு சேர்ப்பது பற்றியும், அவள் மிகவும் மகிழ்ச்சி யடைந் தாள். என்முன் ஒரு பெரிய மா-வடையும், கார வகைகளும் வைத்துவிட்டு, அவளுடைய படுக்கை அறையிலிருந்து கறுப்

புப் பட்டு நாடா வைத்துத் தைத்திருந்த பெரிய தாயத்து ஒன்றை எடுத்து வந்தாள்.

அதனை அவள் கண்களில் ஒற்றிக்கொண்டு, பயபக்தியுடன் கைகளைச் சிலுவைபோல் குவித்து, "எரி புதர்த்தாய் என்ற சிறப்புப் பெயர் பூண்ட நம் குலதெய்வ மாதாவின் உருவம் இது. எரியும் புதர்த் தாயாராகிய நமது தூய காவல் அம்மை" என்று சொல்லிக் கொண்டே, "இதை அவனிடம் சேர்ப்பித்துவிடு. அவன் காக்கசஸுக்குப் போனபோது, அவனுக்காகக் கோயிலில் நான் வழிபாடுகள் செய்வித்தேன். அவன் காயம்படாமல் பிழைத்து வந்தால், தூய அன்னையின் இந்த உருவத்தைச் செய்வதாக வேண்டுதல் செய்து கொண்டேன். சென்ற பதினெட்டு ஆண்டுகளாக இக்காவல் தெய்வமும் அவளுடைய பக்தகோடிகளின் ஆன்மாக்களும், அவன் மேல் கருணைகாட்டி வந்திருக்கிறார்கள். எத்தனையோ போர் முனைகளில் அவன் வாள் ஏந்தியும் இன்னும் ஒருதரம் கூடக் காயம் அடைந்தது கிடையாது. அவனுடன் இருந்த மிக்கைலோ இந்தச் சண்டைகளைப் பற்றிச் சொன்ன போது, எனக்குத் திகிலால் மயிர்க்கூச்செறிந்து விட்டது. அவனைப் பற்றி நான் தெரிந்து கொள்வதெல்லாம் வேற்றாள்கள் மூலமாகத்தான். தன்னுடைய போராட்டங்களைப் பற்றி, என் கண்மணி எனக்கு ஒரு வரிகூட எழுதமாட்டான். எழுதினால் நான் பயந்து விடுவேனாம்!" என்று சொன்னாள்.

உண்மையில் படைத் தலைவன் நாலு முறை படுகாயமடைந்து கிடந்த சேதி, காக்கசஸுக்கு வந்த பிறகுதான் எனக்குத் தெரியும். அதுவும் அவனிடமிருந்து தெரிந்து கொள்ளவில்லை. தன்னுடைய போர்களைப்பற்றி எழுதாதது போலவே, தான் காயமடைந்ததைப் பற்றியும், தலைவன் தன் தாய்க்கு எழுதவேயில்லை.

"மீண்டும் இந்தத் தூய உருவத்தை அவன் அணிந்துகொள்ளட்டும். இதன் கூடவே எனது ஆசிமொழியையும் அவனுக்கு நான் அனுப்புகிறேன். நமது ரட்சகியான தேவமாதா அவனைக் காப்பாற்றுவாள்! இதை எப்பொழுதும் அவன் தன்னிடமே வைத்திருக்கட்டும். போர்க் களத்தில் கண்டிப்பாய் இதைத் தன்னுடன் வைத்திருக்கட்டும். அவனுடைய தாய் இந்த மாதிரி சொன்னதாகச் சொல்லு" என்று கூறினாள்.

அவளது சொற்படியே நடப்பதாக நான் உறுதி கூறினேன்.

அப்பொழுதும் அவள் பன்னிப் பன்னி, "என் பிள்ளையைக் கண்டால், கட்டாயம் அவன் மேல் நீ அன்புகொள்வாய்; அவ்வளவு நல்ல பையன். சொன்னால் கூட நம்பமாட்டாய். வருஷம் தப்பாமல் எனக்குப் பணம் அனுப்பி வருகிறான். என் மகள் அன்னுஷ்காவுக்கும் ரொம்ப உதவி செய்திருக்கிறான்............இதெல்லாம் அவனுடைய சம்பளம் ஒன்றிலிருந்துதான்! பணம் வர வேறு வழியே யில்லை. இந்த மாதிரி ஒரு மகனை எனக்குத்

தந்த கடவுளிடம், நான் என்றென்றைக்கும் உண்மையாக நன்றி பாராட்டுவேன்" என்று கண்களில் நீர் ததும்பச் சொல்லி முடித்தாள்.

"உனக்கு அடிக்கடி கடிதம் போடுவானா?" என்று கேட்டேன்.

"அடிக்கடி இல்லை. வழக்கமாய் வருஷம் ஒருமுறை பணம் அனுப்பும்போது இரண்டொரு வார்த்தை எழுதுவான். மற்றப்படி எழுதமாட்டான். 'நான் எழுதாவிட்டால், உயிரோடு சுகமாயிருப்பதாக வைத்துக் கொள்.எனக்கு ஏதாவது நேர்ந்து விட்டால்—கடவுள் அப்படி ஒன்றும் நேரவிட மாட்டார்—எனக்காக அவர்கள் எழுதுவார்கள்' என்று அவன் சொல்லுவான்."

அவனது தாய் அனுப்பிய பரிசைப் படைத் தலைவனிடம் கொடுத்தேன். அவன் அதை ஒரு துண்டுக் கடிதத்தில் சுற்றி ஒதுப்புறமாக வைத்துவிட்டான். அவனுடைய தாயின் தினசரி வாழ்க்கையைப்பற்றி விவரமாய்ச் சொன்னேன். அவன் ஒன்றும் பேசாமல் சும்மா இருந்தான். என் பேச்சு முடிந்ததும், தலையை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டு நெடுநேரம் குடிசையின் மூலையில் சென்று தனது புகை பிடிக்கும் குழாயில் புகையிலையைத் திணித்த வண்ணம் இருந்தான்.

"ஆம். என் தாய் மிக்க அருமையானவள்தான். மீண்டும் நான் வீடுசேர்ந்து அவளைக் காணும்படி கடவுள் அருள் புரிவாரோ, என்னவோ?" என்று, தலையைத் திருப்பாமலே அவன் சொன்னபோது, அவனது குரல் கம்மியது.

இந்த எளிய சொற்களில் ஆழ்ந்த அன்பும் துயரமும் மண்டிக் கிடந்தன.

"இங்கே நீ எதற்காகச் சேவை புரிய வேண்டும்?" என்று கேட்டேன்.

"சேவை புரிந்துதான் ஆக வேண்டும். என்னைப்போல ஏழை மனிதனுக்கு, யுத்த காலத்தில் இவர்கள் தரும் இரட்டைச் சம்பளம் அற்பமானதல்ல" என்று உருக்கமான குரலில் சொன்னான்.

அவன் மிகச் சிக்கனமான வாழ்க்கை நடத்தினான்; சீட்டாடுவதில்லை; எப்பொழுதோ ஒருநாள் தான் குடிப்பான்; மலிவான புகையிலையைக் கொண்டுதான் புகைபிடிப்பான். இதற்குப் பெயர் சம்புரோதாலிக் என்பான். சாதாரணமாய்ச் சொல்வது போலப் புகையிலைத் தூள் என்று சொல்லமாட்டான். ஏன் இப்படி என்பது அவனுக்குத்தான் தெரியும். முதலிலிருந்தே இவன்மேல் எனக்குப் பிரியம் ஏற்பட்டுவிட்டது. அவனது முகம் கள்ளங் கபடு இல்லாத நேர்மையான ரஷ்ய முகம்; யாரையும் நேரே கூசாமல் பார்க்கும் கண்கள்; இனிய பார்வை.மேலே சொன்ன பேச்சு நடந்ததற்கு அப்புறம், அவன் பேரில் எனக்கு உண்மையான மரியாதையும் மதிப்பும் ஏற்பட்டுவிட்டன.

## II

மறுநாள் காலை நாலு மணிக்கு என்னை இட்டுச் செல்லப் படைத்தலைவன் வந்தான். தோள் வில்லைகள் இல்லாத பழைய கிழி சல் மேற் சட்டை போட்டிருந் தான். காக்கசஸ் நாட்டுக் கால் சட்டை அணிந்திருந்தான். பழுப்பு ஏறிக் கிழிந்த ஆட்டு மயிர்க் குல்லாய் தரித்திருந்தான். தோள் மேலே, மட்ட ரகமான ஆசியா நாட்டுப் பட்டாக் கத்தி ஒன்றைத் தொங்கவிட் டிருந் தான். அவன் ஏறிவந்த காக்க சஸ் நாட்டு வெள்ளை மட்டக் குதிரை, தலையைக் கீழே தொங் கப் போட்டுக் கொண்டு, ஆடி அசைந்து நடந்தது. இடை விடாமல் தன் மெலிந்த வாலை அது ஆட்டிக்கொண்டே இருந்தது. அவனைப் பார்த்தால், அவனிடம் போர்த்திறமோ, கம்பீரமோ இருப்பதாகத் தோன்றாது. ஆனால், தன்னைச் சூழ்ந்து நிற்கும் சுக துக்கங்கள் எவற்றையும் பொருட்படுத்தாமல், எதுவும் தன்னை அலட்டிவிட முடியாது என்ற பாவனையில் சலனமற்றிரு ப்பான். அவனைப் பார்க்கும் எல்லார் மனத்திலும் இயல் பாகவே ஒருவித மதிப்பு உண் டாகும்.

அவனைக் காக்க வைக்காமல், நானும் உடனே என் குதிரை மேல் ஏறிக் கொண்டேன். இரு வரும் கோட்டை வாயிலைக் கடந்து வெளியே சென்றோம்.

படைகள் எல்லாம் எங்களுக்கு முன் சுமார் அறுநூறு கஜ தூரம் போய்விட்டன. பார்வைக்குக் கறுப்பாய் என்னவோ உருண்டு திரண்டு போவது போலிருந்தது. துப்பாக்கி முனைகளில் செருகி வைத்திருந்த நீண்ட ஈட்டிகள், குண்டூசிகளை அடுக் கடுக்காய்ச் சேர்த்து வைத்ததுபோலக் கும் பலாகத் தெரிந்ததிலிருந்தே, இவை காலாட் படைகள் என்று கண்டுகொண்டோம். சிப்பாய் களின் பாட்டுக்களும், முரசின் குமுறலும், ஆறாவது அணியைச் சேர்ந்த பாடகர்களின் தலைமைப் பாடகனுடைய இனிய குர லோசையும் இடையிடையே எங் கள் காதில் விழுந்தன. பாதை, ஓர் ஆழ்ந்த பள்ளத் தாக்கின் வழியே சென்றது. பக்கத்தில் ஒரு சிற்றோடை பிரவாக லீலை புரிந்துகொண் டிருந்தது; அதா வது கரைபுரண் டோடியது. காட்டுப் புறாக்கள் கூட்டங் கூட் டமாய் ஓடையின் மேல் பறப்ப தும், அதன் கரைகளில் இறங்கி அமர்வதும், மீண்டும் சுழன்று வட்டமிட்டு எழுந்து கண்ணுக் குத் தட்டுப்படாமல் ஓடி மறை வதுமா யிருந்தன. சூரியன் இன் னும் வெளிப்படவில்லை. என்றா லும், பள்ளத் தாக்கின் இருபுற மும் உயர்ந்திருந்த குன்றுகளின் முகடுகளில் சூரியன் தனது வெளிச்சத்தை அள்ளித் தெளிக் கத் தொடங்கிவிட்டான். பகல வன் புறப்படும்போது, பொன் னிறமாய்ப் பளபளக்கும் ஒளிப் பரப்பிலே, பழுப்புநிற, வெள்ளை நிறப் பாராங் கற்களும், மஞ்சள் தோய்ந்த பசும் பாசியும், அடர்ந்து வளர்ந்திருந்த முட் புதர்களும், காட்டுப் பழச் செடி களும், கூழையான 'எலும்' மரங் களும் வியக்கத்தக்க காட்சி யளித்தன. பள்ளத்தாக்கும்

அதன் எதிர்ப்புறமும் நீர் நிறைந்தும் இருளடைந்தும் இருந்தன. மூடுபனி எங்கும் மண்டிச் செறிந்து புகைக் கொண்டல் போலத் தவழ்ந்து ஊசலாடிக் கொண்டிருந்தது. இதனூடே மங்கலான கருமையும் வெண்மையும் பச்சையும் சிவப்புமான பல வர்ணச் சாயல்கள் மின்னல் போலத் தோன்றித் தோன்றி மறைந்தன. நேரே எதிர்ப்புறத்தில், கருநீல அடிவானத்தில் தீட்டப் பட்டதுபோல் தோன்றிய பனி மலைகளின் கோர வெண்மை நிறம், உள்ளத்தில் அச்சத்தை உண்டு பண்ணியது. மங்கல் ஒளியிலே, கண்ணுறுத்தும் பனி மலைகளின் தெளிவு தனித்துத் துண்டு பட்டு நின்றது. மலைகளிலுள்ள பள்ளம் மேடுகளும், அவற்றின் நிழலும் வகை வகையான தோற்றங்களை உருவகப்படுத்தி ஓவியத்தில் எழுதினாற்போலத் தெரிந்தன. வெட்டுக் கிளிகளும், சில் வண்டுகளும் இன்னும் ஆயிரக் கணக்கான பிற பூச்சிகளும் ஓங்கி உயர்ந்து வளர்ந்திருந்த புல்லின் இடையே சுறு சுறுப்பாய்த் திரிந்தன. இவற்றின் கீச்சுக் குரல் வானத்தில் இடைவிடாது ஒலித்துக்கொண் டிருந்தது. எண்ணற்ற சின்னஞ் சிறு மணிகள் ஒருவனுடைய காதுக்கருகிலேயே கிண்கிணி செய்வது போல இருந்தது அந்த ஓசை. காற்றிலே நீர் மணமும், புல் மணமும், பனி மணமும் செறிந்திருந்தன — கோடைக் காலத்திலே விடியற்கால வேளையில் பரவும் இனிய மணம்தான் அது.

தலைவன் தனது புகைக் குழாயைப் பற்ற வைத்துக் கொண்டான். சம்புரோதாலிக் புகையிலையின் மணமும், தீப்பற்றவைத்த மணமும் எனக்குத் தனியான ஒரு வகை இனிமை தந்தன.

காலாட்படையை முந்திக் கொள்ளும் பொருட்டு, நாங்கள் பாட்டையின் ஒரு பக்கமாக விரைந்து சென்றோம். எப்பொழுதும் போலில்லாமல், படைத் தலைவன் இன்று அதிகமாக யோசனையில் ஆழ்ந்திருப்பதாகத் தெரிந்தது. புகைக் குழாயை அவன் வாயிலிருந்து எடுக்கவே யில்லை. மூன்றடிக் கொருதரம் காலால் குதிரையை உதைத்து ஓட்டிக் கொண்டே யிருந்தான். ஈரமாய் நீண்டு வளைந்து, புல்லின்மேல் குளம்பின் தடம் பதியும்படி, குதிரை இங்கும் அங்குமாய் அலைந்து சென்றது. புல்லில் மறைந்து கிடந்த காட்டுக்கோழி ஒன்று, குதிரையின் கால் பட்ட இடத்தி லிருந்து சிறகடித்துக் கொண்டு உயரப் பறந்து சென்றது. எந்த வேட்டைக்காரனின் மனத்தையும் பட படக்கச் செய்யும் அதன் கொக்கரிப்பை; குதிரை கொஞ்சமும் கவனித்ததாகவே தோன்றவில்லை.

நாங்கள் படைகளின் பக்கம் வருவதற்குள், எங்களுக்குப் பின்னே ஒரு குதிரையின் குளம்புச் சத்தம் கேட்டது. சற்று நேரத்தில் ரொம்ப அழகான தோற்றமுள்ள ஓர் இள வாலிபன் குதிரையுடன் எங்களோடு வந்து சேர்ந்துகொண்டான். அவன் உத்தியோகஸ்தர் அணியும் உடுப்பு அணிந்திருந்தான்; ஆட்டுத் தோலால் நெய்யப்பெற்ற உயரமான குல்லாய் மாட்டிக்கொண்

டிருந்தான். எங்களைக் கடந்து அப்பால் செல்லும்போது, அவன் புன்சிரிப்புடன் வணக்கஞ் செலுத்திக்கொண்டும் கையில் வைத்திருந்த சவுக்கை ஒய்யாரமாய் வீசிக்கொண்டும் போனுன். குதிரை மீது அவன் அமர்ந்திருந்த இருப்பே, தனிப்பட்ட தொரு கவர்ச்சியுடையதாய் இருந்தது. கண்கள் கறுத்து அழகாயிருந்தன. மென்மையான மூக்கு. இப்போதே அரும்பிவரும் மீசை. நாங்கள் அவனை வியப்புடன் பார்த்ததை அவன் கவனித்ததும், அவனுல் தனக்குள் புன்னகை புரியாதிருக்க முடியவில்லை. அப்பொழுது அவனது முகம் அளித்த காட்சி, என்னை அப்படியே அவன் வசம் இழுத்துவிட்டது. அந்த ஒரு புன்னகையிலிருந்தே அவன் அதி பால்யன் என்று தெரிந்துகொண்டு விடலாம்.

வாயிலிருந்த குழாயை எடுக்காமலே, படைத்தலைவன் "என்னத்துக்காக இவன் இப்படிப் பறந்தடித்துக் கொண்டு போகிறுன்?" என்று சள்ளைப்பட்ட குரலில் முனகினுன்.

"யாரது?" என்று கேட்டேன்.

"அதுதான் கொடிக் காவலன் அலனின். என்னுடைய அணியில் உதவி உத்தியோகஸ்தனு யிருக்கிருன். ராணுவக் கல்லூரியிலிருந்து இங்கே வந்து ஒரு மாதந்தான் ஆகிறது."

"அவன் சண்டையில் கலந்து கொள்வது இதுதான் முதல் தடவையோ?"

"ஆம், அதனுல்தான் அவனுக்கு இவ்வளவு சந்தோஷம்" என்று பதிலளித்துவிட்டு, ஆழ்ந்த சிந்தனையி லிருப்பவன் போலத் தலையை அசைத்துக் கொண்டு, "இளங் கன்றுதானே!" என்ருன்.

"ஆமாம். சரிதானே. அவன் எப்படிச் சந்தோஷப் படாமலிருக்கக் கூடும்? இள உத்தியோகஸ்தன் ஒருவனுக்கு இது பரபரப்பைத் தராமலிருக்குமா?" என்று நான் சொன்னேன்.

(தொடரும்)

★

## எல்லாம் ஈசுவரனே; ஆனுல்.......?

"உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் ஈசுவர ஸ்வரூபங்களே" என்று குரு உபதேசித்தார். சிஷ்யனே இதன் வாஸ்தவமான அர்த்தத்தைத் தெரிந்து கொள்ளாமல், சொல்லர்த்தத்தை மட்டும் தெரிந்துகொண்டிருந்தான். ஒரு நாள் அவன் தெருவழியாகப் போய்க்கொண்டிருக்கையில், எதிரே வந்த ஒரு யானையைக் கண்டான். யானையின் மீதிருந்த பாகன், "விலகுங்கள், விலகுங்கள்" என்று கூவிக்கொண் டிருந்தான். "நான் ஏன் விலகவேண்டும்? நானும் ஈசுவரன், இந்த யானையும் ஈசுவரன்; ஈசுவரன் தனக்கே ஏன் பயப்படவேண்டும்?" என்று நினைத்துக்கொண்டு, சிஷ்யன் விலகாமலிருந்துவிட்டான். பிறகு, யானை சமீபித்து, இந்தச் சிஷ்யனைத் துதிக்கையால் தூக்கி அப்பால் போட்டுச் சென்றது. அதனுல் நேர்ந்த காயங்களுடன், அவன் குருவை அணுகி, நடந்த சங்கதிகளைச் சொன்னுன். "எல்லாம் சரிதான்; நீயும் ஈசுவரன், அந்த யானையும் ஈசுவரனே. ஆனுல், மேலேயிருந்த பாகனுன ஈசுவரன் உன்னை எச்சரித்து வந்தானே, அதை ஏன் நீ கவனிக்கவில்லை?" என்று குரு கேட்டார்.

—ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சர்.

# புதிய நிர்வாகத்தின்கீழ்

## ரிப்பன் புத்தகசாலை

கலாசாலைகளுக்கு உபயோகமான புத்தகங்கள் தொடங்கி, நாவல்கள், பொது அறிவு நூல்கள், புராண இதிகாசங்கள், வேதாந்த நூல்கள்வரை பற்பல புத்தகங்களுக்கும் கீர்த்திவாய்ந்த மதராஸ் ரிப்பன் புத்தகசாலையும் அச்சுக்கூடமும் புதிய நிர்வாகத்தின் கீழ், பின்கண்ட இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளன. புத்தக விலைப்பட்டியலும் ஏஜன்ஸி நிபந்தனை முதலிய பிற விபரங்களும் வேண்டுவோர், இந்த விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

★

மதராஸ் ரிப்பன் பிரஸ்

&

புத்தகசாலை

இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா



என்ன பாக்கறயள்
'டீ'க்கு அப்பறம்
அசோகா!
ASOKA
'அசோகா' பொட்டணங்களைப் பார்த்ததும், அவருக்கு 'டீ' ஞாபகம் கூடப் போய்விட்டது. தாம்பூலத் துக்கு அவசரப்படுகிறார் போலிருக் கிறது. உத்தம மனைவி 'டீ' யை ஞாபகப்படுத்துவது இயற்கை தானே?
REGD. No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
ரிஜிஸ்டர் நெ. 1506
அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

# போரும் உணவும்

மு. அருணாசலம்

பயங்கரமான யுத்தம் நடக்கிற காலம் இது. எங்கு பார்த்தாலும் யுத்தத்தைப்பற்றிய பேச்சுத்தான். யுத்தத்தைப் பற்றிப் பேச்செடுப்பதற்கு முன், வேறொரு பேச்சுத்தான் பிரமாதப்படுகிறது. அதுவே, சாப்பாட்டு விஷயம். "இன்று சர்க்கரை எந்தக் கடையிலுமே கிடைக்க வில்லை; நேற்று ஒரு கடைக்காரன் அரிசியை அநியாய விலைக்கு விற்றான்; உளுந்துக்குக் கூடவா இப்படிக் கிராக்கி!" - இதே ரீதியில்தான் இன்று நண்பர்கள், ஒருவரையொருவர் தெருவில் சந்திக்கும் போது பேசிக் கொள்ளுகிறார்கள்.

இவ்வளவுக்கும் காரணமென்ன? எங்கேயோ கிடந்த தேசங்கள் ஒன்றையொன்று அழித்து விடக் கங்கணங் கட்டிக் கொண்டு விட்டன. ஜெர்மனி தேசம் ஐரோப்பா முழுவதையும் விழுங்கி ஜீரணித்துவிட்டு, ரஷ்யாவைக் கொஞ்சம் சுவைக்கப்பார்க்கிறது. கிழக்கிலோ, சிறிய ஜப்பான் தேசம், எத்தனையோ நாடுகளையும் தீவுகளையும் ஆக்ரமித்துக் கொண்டது. எங்கேயோவுள்ள ஜாவா முதலான தீவுகள் போனதனால், நம்மூரிலே சர்க்கரைக்குப் பஞ்சம்! ராணுவத்துக்காக அரிசியும் மற்ற உணவுப்பொருள்களும் ஏராளமாகச் செலவாகி வருவதனால், நமது தினசரி ஆகாரத்துக்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் விலையேறி விட்டன. சில பொருள்கள் கிடைக்கவேயில்லை.

**போர் நடக்கும் காலங்களிலே நேரிடக் கூடிய அபாயங்களில் உணவுப் பஞ்சமே மிகக் கொடியது. சர்க்கரை கிடைக்கவில்லை; அரிசி கிராக்கி; உப்புக்குப் பஞ்சம்—இப்படியெல்லாம் கூக்குரல் எழுந்து விடுகிறது. அது நிகழாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது ஆட்சியாளர் கடமையாகும். இதை வலியுறுத்த, பழைய தமிழரசர் ஒருவரை ஒரு பழம் புலவர் வாழ்த்திய பாடலைச் சுவையோடு நண்பர் இக் கட்டுரையில் விளக்குகிறார்.**

யுத்தம் காரணமாக உள் நாட்டிலே ஏற்படுகிற இந்த விபரீத நிலைமைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக அரசாங்கத்தாரும் உணர ஆரம்பித்திருக்கிறார்கள். வெற்றிகரமாகப் போர் புரிய வேண்டுமானால், இரண்டு வசதிகள் அவசியம் வேண்டுமென்று தெரியவந்திருக்கிறது. முதலாவதாக, படைப் பலம்; ஆள் தொகை அதிகமாயிருக்க வேண்டு மென்பதோடு, விமானப்படை, கடற்படை, யந்திரப்படை முதலியன ஏராளமாக வேண்டியிருக்கின்றன. இதைப் பற்றி நாம் இங்கே கவனிக்க

வேண்டியதில்லை. இரண்டாவது வசதியைத் தான் கருத்தாய்க் கவனிக்கவேண்டும். இதுவே, உணவு வசதி. இந்த வசதி அதிக முக்கியமான தென்று இப்போது யுத்த நிபுணர்கள் கருதுகிறார்கள்.

சமாதான காலத்திலே உணவு வசதியைக் குறித்துப் பெரிதும் சிந்தனை செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுவதில்லை. ஒரு நாட்டிலே தேவையான அளவு உணவுப் பொருள்கள் உற்பத்தியாகவில்லையென்றால், அந்த நாட்டிலே தயாராகிற மற்றப்பொருள்களைப் பெற்றுக்கொண்டு, அவற்றுக்குப் பதிலாக உணவுப் பொருள்களை வழங்கப் பிற நாட்டார் தயாராயிருக்கிறார்கள். ஆனால், யுத்த காலத்திலோ, இந்த நிலைமை மாறி விடுகிறது. போருக்கு வேண்டிய காரியங்களைச் செய்வதில், மக்களுடைய அமைதியான வாழ்க்கை சற்றே நிலை குலைகிறது. இது காரணமாக, விளைபொருள்கள் உற்பத்தியாவதில்லை. அந்தந்த நாட்டுக்கு வேண்டிய பொருள்கள் முற்றிலும் விளையாத போது, பிற நாடுகளுக்கு அனுப்புதல் எவ்வாறு இயலும்?

சமீபத்திலே இலங்கை முழுவதும் பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டதைக் கண்டோம். பர்மா எதிரி வசமாகி விடவே, பர்மா அரிசி வரத்து நின்று போயிற்று. இலங்கை மந்திரிகள் முதலாயினோர் அரும் பிரயாசைப் பட்டு, இந்தியத் துரைத்தனத்தாருடைய தயவினால், இங்கிருந்து அவர்கள் நாட்டுக்கு அரிசி ஏற்றுமதி செய்ய வசதி செய்து கொண்டார்கள்.

படைகளையும் ஆயுதங்களையும் பெருக்குவதற்கான முயற்சிகளைக் குறித்துத் தினந்தோறும் பத்திரிகைகளில் படிக்கிறோம். இவற்றோடு கூட, உணவு வசதிகளைப் பெருக்குவதற்கான முயற்சிகளையும் காண்கிறோம். அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும், ஏன், நம் இந்தியாவிலுங் கூட, பயிராகாமல் தரிசாய்க்கிடந்த நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வர ஏற்பாடுகள் நடக்கின்றன. அரசாங்கத்தார், தீர்வையைத் தள்ளிக் கொடுக்கிறார்கள்; நெல் விதை கொடுக்கிறார்கள்; வேண்டிய தண்ணீர் வருவதற்கு ஏற்பாடு செய்கிறார்கள்; சாகுபடிச் செலவுக்குப் பணமும் கடன் கொடுக்கிறார்கள். எப்படியாவது மேலும் மேலும் அதிகமாக நெல்லும் மற்றத் தானியங்களும் விளைய வேண்டு மென்பதற்காக அவர்களே பெரு முயற்சி எடுத்துக் கொள்கிறார்கள்.

இவ்வளவும் இன்று நம் கண் முன்னே நடக்கும் செய்திகள்; உணவு வசதிகள் பெருகச்செய்வதற்கான முயற்சிகள்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தமிழ் நாட்டில் வாழ்ந்த குடபுலவியனார் என்ற புலவர் இந்த நிலைமையை எதிர்பார்த்தார். அவர் வாழ்ந்தது பாண்டி நாடு. நெடுஞ் செழியன் என்ற பாண்டியமன்னனுக்கு அவர் எச்சரிக்கை செய்கிறார். இப் பாண்டியனுடைய முன்னோர்கள் அரிதின் முயன்று, இந்தப் பூமி முழுவதும் வென்று தமக்குக் கீழ்ப்படுத்திப் பெரும் புகழ் படைத்தவர்கள். 'இத்தகைய சிறப்பு

வாய்ந்த குலத்தில் வந்த பாண்டியனே! ஒன்று, பத்து, நூறு, கோடி என்ற கணக்கிலே உனது ஆயுள் வளர்ந்து கொண்டே போவதாக' என்று முதலில் புலவர் பாண்டியனை வாழ்த்துகிறார்: (பாடல், பழைய காலத்திய பாடல்; வார்த்தைகள் சற்று நெரடா யிருக்கும்; கொஞ்சம் பழக்கப் படுத்திக் கொண்டால், விஷயத்தைச் சுகமாக அனுபவிக்க முடியும்.)

**முழங்கு முந்நீர்**
**முழுவதும் வளைஇப்**
**பரந்துபட்ட வியன் ஞாலம்**
**தாளிற் றந்து**
**தம்புகழ் நிறீஇ**
**ஒரு தாம் ஆகிய**
**உரவோர் உம்பல்!**

**ஒன்று பத்(து) அடுக்கிய**
**கோடிகடை இரீஇய**
**பெருமைத் தாக நின்**
**ஆயுள் தானே!**

[முழங்குமுந்நீர் - கடல். வியன் ஞாலம் - அகன்ற உலகம். உரவோர் உம்பல் - வலியோர் வழியில் தோன்றியவனே!]

இவ்வாறு வாழ்த்திய பின், 'நீ பயிர்த்தொழிலைப் பெரிதும் வளர்க்க வேண்டும்; அதன் பொருட்டு நீர்நிலைகளைப் பெருக்க வேண்டும்' என்று அவனுக்கு அறிவுறுத்த எண்ணியவர், எதன் பொருட்டு இவற்றைச் செய்ய வேண்டும் என்பதை முதலில் கூறுகிறார்.

இவ்வுலகத்திலே நல்ல கருமங்களைச் செய்து, அவற்றின் பயனாக, மறுமையிலும் நல்ல நிலைமையை அடைய வேண்டுமென்று விரும்பினால், அவ்விருப்பம் நிறைவேறுவதற்கு ஒரே வழிதான் உண்டு.

அன்றி, உலகத்திலே சிற்றரசர்களும் பேரரசர்களுமாக எத்தனையோ பேர் இருக்கிறார்கள் அல்லவா? இவர்களுடைய ஆற்றலனைத்தையும் ஒடுக்கி, அனைவரையும் தனது ஒரே குடைக்கீழ்க் கொண்டுவந்து தனியரசு செலுத்த வேண்டினாலும், அதற்கும்அந்த ஒரே வழிதான் உண்டு.

ஏகசக்கராதிபத்தியம் செலுத்த வேண்டு மென்ற பேராசையின் விளைவுதானே இன்று நடக்கும் கோர யுத்தம்? ஒரு வல்லரசு, தான்மட்டும் வாழவேண்டும், தன் மக்கள் ஓங்கவேண்டும் என்று எண்ணியமையால், எத்தனை சிற்றரசுகள் அழிந்தன? இன்னும் அழிந்துகொண்டு வருகின்றன?

**செல்லும் உலகத்துச்**
**செல்வம் வேண்டினும்,**
**ஞாலங் காவலர்**
**தோள்வலி முறுக்கி**
**ஒருநீ ஆகல்**
**வேண்டினும், மற்றதன்**
**தகுதி கேள், இனி,**
**மிகுதி யாள!**

[முருக்கி-அடக்கி.]

'செல்லு முலகத்துக் குரிய செல்வம், உலகத்துக்கே ஏகசக்கராதிபத்தியம் ஆகிய இவ்விரண்டும் உனக்கு வேண்டுமானால், அவற்றைப் பெற ஒரே வழியிருக்கிறது. சொல்லுகிறேன், கேட்பாயாக!' என்றார் புலவர். அரசனுக்கு இவற்றில் ஆசையிருப்பது இயல்புதானே? கேட்கிறான்.

உடற்கூறு பற்றிய உண்மைகளை யெல்லாம் இக் காலத்திய

விஞ்ஞானிகளை யொப்ப முற்றிலும் தாம் கண்டறிந்தவர்போலப் பீடிகை போடுகிருர். 'மனித உடம்பு முழுதும் நீர்மயமானது. உடலும் உயிரும் ஒன்றியிருக்க, உடலுக்கு உணவு இன்றியமையாதது. உண்டி கொடுத்தோரை உயிர் கொடுத்தோரென்றே கருதலாம். உண்டி என்பதென்ன? நிலத்திலே நீர் பாய்ச்சி விளையச் செய்கிற பொருளாலானது தானே உண்டி? ஆகவே, நிலமும் நீரும் வளமாகப் படைத்தவர்கள் உண்டி படைத்தவர்களென்றும், அதன் மூலம் உடலையும் உயிரையும் வளர்ப்பவர்களென்றும் சொல்லலாமல்லவா?'

நீரின் றமையா
யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர்
உயிர்கொடுத் தோரே.
உண்டி முதற்றே
உண்வின் பண்டம்.

உணவெனப் படுவது
நிலத்தொடு நீரே;
நீரும் நிலனும்
புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும்
படைத்திசி னோரே!

[புணரியோர் - ஒன்ருகக் கூட்டினவர்கள், வளம்படுத்தினவர்கள். படைத்திசினோரே-படைத்தவராவார்.]

இனி, அரசன் செய்யவேண்டிய கடமை என்ன? நாட்டிலே என்ன இருந்தாலும், போதிய நீர் வளம் இல்லாவிட்டால் நாடு வளமுடையதாகாது; ஆதலால், அரசன் அநேக நீர்நிலைகளை அமைக்க வேண்டும் என்று சொல்ல வருகிருர். இளவரசனே, பாண்டியன்; சோழனுயிருந்தால், இதைச் சொல்ல வேண்டிய அவசியமே இராது. சோழநாடு காவிரிநதி பாய்கின்ற பெருமையுடையது. வான் பொய்க்கினும் தான்பொய்யாது, காவிரி நதி அந்நாட்டுக்கு நீரளிப்பதனல், சோழநாடே பொன்னி நாடென்றும் புனல் நாடென்றும் பெயர் பெற்றுவிட்டது. இவ்வளவு பெருஞ் சிறப்புடைய நீர்வளம் பாண்டியநாட்டுக்குக் கிடையாது. அன்றியும், ஒருசமயம் பாண்டியநாடு பன்னீராண்டு 'வற்கடம் சென்றது' (பஞ்சமேற்பட்டது) என்ருெரு கதையும் இலக்கியங்களிலே சொல்லப்படுகிறது.

இவற்றையெல்லாம் நினைக்கும்போது, உணவு வசதிகளைப் பெருக்கும் கருத்தோடு, நீர்வளத்தைப் பெருக்கச் செய்ய வேண்டுமென்று புலவர் பாண்டியனுக்கு உணர்த்துவது பொருத்தமென்றே நாம் எண்ணுவோம்.

பாண்டியநாட்டிலே பல பெருநதிகள் இராமையால், நன்செய் நிலங்கள் குறைவு; புன்செய்யே மிகுதி. புன்செய்யோ, நன்செய் போல மிக்க பலன் தராது. ஏனென்ருல், நீர்ப்பாசனமின்மையால், உழவன் விதையை விதைத்துவிட்டு, வானத்தின் தயவை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது, வேண்டும்போது வானம் வழங்குமென்பது நிச்சயமில்லை. ஆகவே, புன்செய் எவ்வளவு மிகுதியாக ஒரு மன்னன் படைத்திருந்தபோதிலும், அவற்ருல் அவன் பயனடைய முடியாது. அவனுடைய 'யுத்த முயற்சி'களுக்கு அவை உதவமாட்டா.

*வித்திவான் நோக்கும்*
*புன்புலம், கண்அகல்*
*வைப்பிற் ருயினும்,*
*நன்னி யாளும்*
*இறைவன் தாட்குத*
*வாதே.......*

[புன்புலம் - புன்செய். கண் அகல் வைப்பு - அகன்ற நிலம். இறைவன் - அரசன். தாட்கு - முயற்சிக்கு.]

அதனாலே, இப்போது செய்ய வேண்டுவது என்ன? நாடெங்கும் நீர்நிலைகள் பெருகும்படி செய்ய வேண்டும். இப்படிச் செய்த மன்னரே தங்கள் நாட்டின் ஆக்கங் குறித்துச் சிறந்த முறையிலே முயன்றவராவார்கள். செய்யாதவர்கள், இவ்வுலகில் எதையும் செய்து வெற்றி பெற்றவராகார். 'ஆகவே, ஜய சீலனான செழியனே! ஏதோ, நான் - ஒரு புலவன் - சொன்னேன் என்று இந்த வார்த்தைகளை இகழ்ந்து தள்ளிவிடாதே. சீக்கிரத்திலே உன் நாடெங்கும் நீர்நிலைகளை அமைப்பாயாக' என்று புலவர் சொல்லி முடிக்கிறார்:

*......அதனால்,*
*அடுபோர்ச் செழிய!*
*இகழாது, வல்லே*
*நிலனெளி மருங்கின்*
*நீர்நிலை பெருகத்*
*தட்டோர் அம்ம இவண்*
*தட்டோரே*
*தள்ளா தோர் இவண்*
*தள்ளா தோரே!*

[வல்லே-விரைந்து. தட்டோர்-நீரை அணையிட்டுத் தடுத்து வைத்தோர். தள்ளாதோர்-அணையிடாதவர்.]

தம் நாட்டின் நன்மையிலும் அதற்கான ஆக்க வேலையிலும் ஊன்றிய கருத்துடையவராய், புலவர் குடபுலவியனார் இவ்வாறு தம் அரசனுக்கு உணர்த்தினர்.

அவர் உணர்த்தியது, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே.

ஆனல், அவருடைய வாக்கிலே எத்தகைய உண்மைகள் அடங்கியிருக்கின்றன! எவ்வளவு ஆழ்ந்த தீர்க்க திருஷ்டியும் எவ்வளவு சிறந்த யுத்த தந்திரமும் அவற்றிலே காணக் கிடக்கின்றன!

★

## கடவுள் தூங்குகிறார்!

**1940**-ஆம் ஆண்டு காந்திஜீ பேச்சுரிமைச் சத்தியாக்கிரகத்தை ஆரம்பிக்கு முன், பண்டித நேரு சேவாகிராமத்துக்குச் சென்றார். ஒரு குழந்தை தன் தந்தையிடம் வாஞ்சையுடனும் உறுதியுடனும் கூறுவதுபோல் ஜவஹர்லால் காந்தியிடம் சொன்னர் "பாபு! நீங்கள் என்னைத் தள்ளிவிட மாட்டீர்கள் அல்லவா?" என்று. சேவாக்கிராமக் குடிசையில் தந்தையும் குழந்தையும் சிரிப்பதுபோல் கலகலவென்று மகாத்மா காந்தியும் ஜவஹரும் சிரித்தனர். ஜவஹர் புறப்படும் சமயம் ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தி ஒரு விநாடி காத்திருக்கும்படி சொன்னர். சில நாட்களிலோ சில மணி நேரத்திலோ ஜவஹர்லால் கைதியாவாரென்பது ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்திக்கு தெரியுமாகையால் ஜவஹரின் நெற்றியில் திலகம் இட விரும்பினர். ஆனல் ஜவஹர் "அம்மா! அது எதற்கு? அவசியமில்லை" என்றார். கஸ்தூரிபாய், "நாம் எப்போது மீண்டும் சந்திப்போமோ! அதைக் கடவுளே அறிவார்" என்றார். "இல்லை அம்மா! கடவுள் தூங்குகிறார்" என்றார் ஜவஹர். கடவுள் விழித்திருப்பாரானல் உலகில் தவறுகள், அவமதிப்பு, கொடூரம், மிருகத்தனம், பகைமை, அஞ்ஞானம் இவையெல்லாம் எப்படி மலிந்திருக்கும் என்பதே அவர் கருத்துப்போலும்!

# மணி என்ன? — ‘உல்லாஸி’

மணி என்ன?

இந்தக் கேள்வியைக் கேட்டால், போனமாதம் வரையில், எவரும் உடனே பதில் சொல்லுவார்கள். இப்போது கேட்டால், அவர்களும் ஒரு பதில் கேள்வி கேட்கிறார்கள்.

“மணி என்ன?”

“பழைய மணியா, புதிய மணியா?”

ஆனால், “சூரியன் எப்போது உதிக்கிறான்?” என்று கேட்டால், “பழைய சூரியனா, புதிய சூரியனா?” என்று யாரும் பதில் கேள்வி போடமாட்டார்கள் என்றே நினைக்கிறேன். என்றாலும், இந்த விசித்திரமான உலகத்தில் எதைத்தான் நிச்சயமாய்ச் சொல்லமுடியும்? யாரோ ஒரு தூதனை எமதூதர் வந்து “எமன் கூப்பிடுகிறான்” என்றழைத்தபோது, “பழைய எமனா, புதிய எமனா?” என்று அவன் கேட்டானாமே, அந்தமாதிரி இதுவும் கூட நடக்கலாம்.

**காலம் என்பது ஓர் ஆச்சர்ய சங்கதி, வேதாந்திகளும் விஞ்ஞானிகளும் விதம் விதமாய், அதை வர்ணிக்கிறார்கள். ஆனால், அதை நாம் ஒரு சிறு கடிகாரத்தினால் அளந்து விடுகிறோம். அந்தக் கடிகாரத்தை, சர்வ வல்லமையுள்ள சர்க்கார் மாற்றியும் விடுகிறது. காலம்! அதன் கதியின் விசித்திரத்தை, இங்கே பாருங்கள்.**

நமது சர்வ வல்லமையுள்ள சர்க்கார், போனமாதம் ஆறு மணிக்கு உதித்த சூரியனை இந்த மாதம் எழு மணிக்குத்தான் உதிக்கவேண்டும் என்று செய்திருக்கிறது. இந்தச் சூரியனால், அதை மீறமுடிகிறதா? இந்தச் சூரியனை ‘டிஸ்மிஸ்’ செய்து, வேறு சூரியனை யாராவது ‘அப்பாயிண்ட்’ செய்திருந்தால், அது மட்டும் எப்படி ஆச்சரியமாகும்?

அதுபோகட்டும். மணி என்ன? புதிய மணியைத்தான் கேட்கிறேன். உங்கள் கைக்கடிகாரத்தை நீங்கள் திருப்பிக்காட்டுகிறீர்கள். “அடேடே! மணி எட்டரை ஆகிவிட்டதா?” என்று சொல்லி, ஒரு கட்டுரை எழுத உட்காருகிறேன்.

மணி என்ன?—ஆம்; இந்தக் கேள்வியை, நாம் ஒவ்வொருவரும் தன்னைத் தானேயோ, ஒருவரை ஒருவரோ தினந்தோறும் எத்தனைமுறை கேட்டுக்கொள்ளுகிறோம்!

நம் வாழ்வே, நமது மணிக்கட்டிலுள்ள இந்தச் சிறுகடிகாரத்தில் ஒட்டிக்கொண்டிருக்கிறது போல் அல்லவா தோன்றுகிறது! அந்தக் கடிகாரம் நம்மிடம் ஒட்டிக்கொண்டிருக்கிறதா? நாம் அதனிடம் ஒட்டிக்கொண்டிருக்கிறோமா? அது நம்முடைய ஊழியனா? அல்லது எஜமானா?

முன் காலத்தில் சூரியன் ஒருவனே மக்களின் கடிகாரமா

யிருந்தான். காலை, மாலை, நண்பகல் என்ற பருமையான பிரிவுகள் மாத்திரமே உண்டு. முன்காலமென்ன? மணிபார்த்து நாம் ஆபீசுக்குப் போகிறோமே, இந்த மாதிரி இப்போதும்கூட, கிராமத்துக் குடியானவர்கள், வேலைக்குப் போவதில்லை. சூரியன் உதிக்கையிலே அவர்கள் புலத்திலே வேலை தொடங்கிவிடுகிறார்கள். கஞ்சிக்கலயம் வரும்போது, ஓய்வு. பின், மாலையிலே, சூரியன் மலைவாயில் விழுந்தால், அவர்களது வேலையும் முடியும்.

ஜன சமூகத்தில், முதன்முதலாக வர்க்கப் பிளவை உண்டுபண்ணியதே, இந்தக் கடிகாரமோ அல்லது இதைப்போன்ற காலமளக்கும் வேறு கருவியோதான் என்று கூடத் தோன்றுகிறது. சுவர் மாட்டிக் கடிகாரம் தோன்றி ஆரம்பத்திலே குடும்ப வேலைகளைக் கண்காணிக்கத் தொடங்கியது. பின்பு, ஜேபிக் கடிகாரம், சட்டைப் பைக்குள் ஒளிந்துகொண்டு, வேண்டிய போதுமாத்திரம் வெளியே தலை நீட்டி நேரத்தை எச்சரித்துக் கொண்டிருந்தது. இந்த இருபதாம் நூற்றாண்டிலோ, கைக்கடிகாரம் வந்து விலங்கைப்போல, நம் கைகளைச் சுற்றிக்கொண்டிருக்கிறது. மணிக்கட்டின் ரத்தக் குழாய்களது இயற்கையான நாடி ஓட்டத்தோடு, கைக்கடிகாரத்தின் 'கிளிக்' சப்தமும் போட்டி போட ஆரம்பித்திருக்கிறது!

நம் நேரத்தை — நேரத்தையாவது! வாழ்க்கையையேதான் பல பின்னங்களாகக் கூறுபோடுகிறோம்; அவைகளையும் பல சிறு கூறுகள் போடுகிறோம். எல்லாம் இந்த இரும்பு யந்திரத்தின் உதவியால்தான். மணி என்ன? காலத்தை, மணிகளாகவும், நிமிஷங்களாகவும் கூறு போட்டு அளக்காவிட்டால், வாழ்வே சாத்திய மல்லவே என்று சொல்லும் நிலைமைக்கு வந்துவிட்டோம்!

இது மட்டுமா? காலப் பிரமாணத்தைப் பற்றி மணிநேர உருவில் நம் மனதிலே ஊறிப்போயிருக்கும் கருத்துக்கள் எவ்வளவு பலமா யிருக்கின்றன! அதனால் அல்லவா கடிகார நேரத்தை மாற்றிய வுடனே, நம் வாழ்க்கையே மாறிவிடுகிறது!

என்றாலும், உண்மையில், கடிகாரநேரம், தனி மனிதனது நேரத்துக்குச் சம்பந்தப் படுவதில்லை. சில மணி நேரங்கள் மாளாமல் வெகு நீளமாய் நம் மனதை வாட்டுகின்றன; மற்றும் சில மணி நேரங்களோ, கனவுபோல், குறுகி ஓடிவிடுகின்றன. காற்றைப்போல் 'விர்' றென்று பல வருஷங்கள் விரைந்து பறந்து விடுகின்றன; சில நிமிஷங்களோ, யுகமாய் நீண்டுவிடுகின்றன. மனமும் உணர்ச்சிகளும், காலத் தச்சனையும் ஆட்டிவைக்கும் சூத்திரதாரிகள் போலும்!

இவை போக, மனோபாவம், வயது, ஜாதி இவைகளுக்கேற்றபடியும் கால ஓட்டம் நடக்கிறது. கிழவனுக்குக் காயம் பட்டால், ஆற வெகு காலமாகிறது. குழந்தைக்கு நேரும் அதே

காயமோ அதி சீக்கிரம் ஆறி விடுகிறது. ஐம்பது வயது முதிய வனது வளர்ச்சி வேகத்தைப் போல், நான்கு மடங்கு வேகத்தில் பத்து வயதுச் சிறுவனின் வளர்ச்சி நிகழ்கிறது. ஆனால், சிறுவனுக்கு ஒரு மணி போவது, நான்கும்மணி போவதுபோல் மிக நீளமாய்த் தோன்றுகிறது.

ஒருவயதுக் குழந்தையைப் பனிரண்டு மாதம் கழித்துப் பார்த்தால், வளர்ச்சியால் அடையாளமே தெரியாமல் உருமாறிச் சாயல் மாறி விடுகிறது. ஆனல், ஐம்பது வயதுக்கும் ஐம்பத்தொன்றுக்கும் இடையிலே, 'பளிச்'சென்று தெரியும் வித்யாசமொன்றும் காண்பதில்லை. நேரமோ புயல்காற்றைப்போல் கடுகியோடுகிறது. இதுதான் ஓர் ஆச்சரியம். வேகமாய் வளரும் குழந்தைக்குக் காலம் ஏன் நீளமாய்த் தோன்றவேண்டும்? மெள்ளக் கனியும் கிழவனுக்கு அது ஏன் விரைவாக மனதில் படவேண்டும்?

ஆம், காலம் பறக்கத்தான் பறக்கிறது; அது பறந்தோடித்தான் போகும். அதன் வேகத்தைக் குறைக்க வழியொன்றுண்டு. சாதித்து முடித்த சிறந்த காரியங்கள், கண்டுபிடித்து வெளியிட்ட உயர்ந்த உண்மைகள் இவற்றுல் அதை நிரப்புங்கள். வீணைக்குப் புதிய நரம்புசேர்த்தது போல, நாள்தொறும் நாள்தொறும் உதய சூரியன் உங்கள் வாழ்வுக்கு இன்ப நாதம் பொழிக்கவேண்டுமானல், அது புதுப் புதுச் சாதனைகள், புதுப்புது உண்மை காணல் இவற்றுலேதான் ஆகும்.

★

## பட்டரின் சாகஸம்

ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு, நவாப் ஆலிகான் என்பவர் ஒரு சமயம் வந்தார். அவர் கர்நாடக நவாப்பான முகம்மத் ஆலியின் படைத்தலைவர்களில் ஒருவர். ஸ்ரீ வில்லிபுத்தூரில் இருந்த கோட்டையைத் தாக்க முடியாததால், நவாப் ஆலிகானின் படைகள், ஸ்ரீவில்லிபுத்தூர்க் கோயிலைத் தாக்கிக் கொள்ளையிட முயற்சித்தன. கோயில் பட்டரில் ஒருவர் இதைச் சகியாமல் கோபுரத்தின்மீது ஏறினர். கொள்ளைக்காரர்களை மனம் வந்தவாறெல்லாம் சபித்தார். பிறகு, அப்படியே 'போநீர்' என்று கீழே விழுந்து மண்டை சிதறி மாண்டார். இந்தக் கோரமான காட்சியைக் கண்டு பயந்து நடுங்கி, நவாப் ஆலிகானின் படைகள் ஓட்டமெடுத்தன! கோயிலும் காப்பாற்றப்பட்டது.

★

## அசோகன் ஆட்சி

மக்களுக்கு ஊழியம் புரிவதில் அசோக சக்கரவர்த்தி, இணையற்ற ஆர்வம் கொண்டிருந்தார். அவர் கல்தூணில் செதுக்கிய ஒரு கட்டளை வருமாறு:- "எந்த நேரமாயினும் சரி, எவ்விடமாயினும் சரி—நான் உணவுண்ணும்போதாயினும் படுக்கையறையில் உறங்கினலும் அந்தப்புரத்தில் இருந்தாலும் வண்டியில் சென்ருலும் அரண்மனைத் தோட்டத்தில் உலவினலும்— ஜனங்களின் விவகாரங்களை உடனுக்குடனே என்னிடம் என் உத்தியோகஸ்தர்கள் தெரிவிக்கவேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறேன். சகல இடங்களிலும் ஜனங்களின் விவகாரங்களைக் கவனிக்க நான் தயாராயிருக்கிறேன்............ சகல ஜனங்களுக்கும் க்ஷேமம் உண்டாகும்படி உழைப்பதே என் கடமையாகும்."

யுத்தகால மணி மொழி நெ. 1

# இன்று செய்வோன் வெற்றி யடைகிறன்; நாளைச் செய்ய நினைப்போன் தோல்வி யடைகிறன்

சரியான காலத்தில் சரியான காரியத்தைச் செய்வோனே வெற்றி யடைகிறன். இன்ஷ்யூரன்ஸ் பாலிஸி ஒன்றின் மூலம் பாதுகாப்பு அடைவதே சரியான காரியம் என்று அவன் அறிவான். சரியான காலம் இன்றே, இக்கணமே என்றும், சரியான பாலிஸி ஹிந்துஸ்தான் பாலிஸியே என்றும் அவன் அறிவான். சாமான்யப் பிரஜைகளின் உயிர்களுக்கு, வழக்கமான கட்டண விகிதங்களில், பரிபூர்ணமான பாதுகாப்பு அளிப்பது அதுவே.

## உங்கள் கவலைச் சுமையை ஹிந்துஸ்தான் மீது போட்டுவிட்டு நீங்கள் மன அமைதியுடன் வாழுங்கள்.

கோடிக்கணக்கில் தொழில் செய்யும் கம்பெனி அது.

# ஹிந்துஸ்தான்
# கோவாப்பரேடிவ் இன்ஷ்யூரன்ஸ்
## ஸொஸைட்டி லிமிடெட்

ஹெட் ஆபீஸ்:
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
கல்கத்தா

சென்னைக் கிளை:
தற்போதைய விலாஸம்:
7/67, ஜெயில் ரோடு
கோயமுத்தூர்

யுத்த சமயத்திலும்

# நியூ ஏஷியாடிக்

முன்னேறி வருகிறது! நீங்களே பாருங்கள்!!

1941-ல் பூர்த்தியான பாலிஸி தொகை
ரூ. **62** லக்ஷத்திற்கு மேல்

முதல் 8 வருஷத்தில்
பூர்த்தியான பாலிஸி தொகை
ரூ. **3·20** கோடிக்கு மேல்

ஆயுள் நிதி ரூ. **9** லக்ஷத்திற்கு அதிகம்

சாதாரண (civil) மக்களுக்கு எதிரிகளினால் ஏற்படும், விமான குண்டு வீச்சு, படை எடுப்பு முதலான ஆபத்துக்களிலிருந்து எங்கள் பாலிஸி பாதுகாப்பு அளிக்கிறது. இதற்காக அதிகப் பிரீமியம் இல்லை.

## நியூ ஏஷியாடிக் லைப் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி லிமிடெட்

மதராஸ் பிராஞ்சு: தென்னூர், திருச்சினாப்பள்ளி
பிராஞ்சு மானேஜர்: A. சுப்பையா

அமிர்தாஞ்சனம்




வலிகளைப் போக்கும்

நாதன்ஸ்

## காப்பி

குணத்துக்கும்
மணத்துக்கும்
சிறந்தது

## நாதன் & கம்பெனி
கல்லுக்கட்டி, காரைக்குடி

## தமிழன் இதயம்

தேசியக் கவிஞர் நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை பாடியன

விலை: ரூ. 2 தபாற் செலவு வேறு

சக்தி காரியாலயம்
மதுரை — காரைக்குடி

# படகோட்டியின் பெருந்தலைமை

'மௌத்கல்யன்'

பழைய கதை - புராணக் கதைதான். ஆனால், புதிய நோக்கில், எளிய பாஷையில் சொல்லும்போது என்ன உணர்ச்சி தருகிறது!

கங்கைக் கரை. காலைவேளை. சூரியோதய சமயம். குளிர்ந்த காற்று அடிக்கிறது. அந்தக் காற்றினால் கரையோரமாகவுள்ள ஒரு படகு ஊசலாடிக்கொண்டிருக்கிறது. சுத்தமான படகு அது. யாரோ பெரிய மனிதர்களை அக்கரை கொண்டு சேர்ப்பதற்காக அக்கரையுடன் ஒழுங்கு படுத்தப்பட்ட மாதிரி இருக்கிறது. அதன் நீண்ட துடுப்பை அலட்சியமாக ஒரு கையிலே பிடித்துக்கொண்டு கரைப்பக்கம் நோக்கி நிற்கிறான் ஒருவன். அவன், மற்றொரு கையை இடுப்பிலே வைத்துக் கொண்டும், பின்னவிடுகிற மாதிரி ஒரு காலை மற்றொரு காலின்மீது ஊன்ற வைத்துக்கொண்டும் நிற்பதைப் பார்த்தால், 'பொன்னுடையரேனும், புகழுடையரேனும், மற்றென்னுடையரேனும்,' யாரும் தன் தயவில்லாமல் கங்கையின் இக்கரையிலிருந்து அக்கரைக்குப் போக முடியாது என்று சொல்கிற மாதிரி இருக்கிறது. அவன் ஈனச் சாதிக்காரன்தான். ஆனால், மானத்தோடு பிழைக்கிறான். முகத்தைப் பார்த்தாலே தெரியவில்லையா?

தண்ணீர் வந்து மோதுகிற இடத்துக்குச் சிறிது எட்டினாற்போல், கரைமீது கொஞ்சம் மேட்டுப் பாங்காயுள்ள ஓர் இடத்தில், ஒரு ஸ்திரீயும் இரண்டு புருஷர்களும் நிற்கிறார்கள். அவர்களில் ஒருவன் மாநிறம்; மற்றொருவன் நல்ல சிவப்பு. ஸ்திரீயோ சொல்ல முடியாத அழகு. மாநிறமாயுள்ள புருஷனுடைய தோள் மீது அந்த அழகான ஸ்திரீ ஒரு கையை வைத்துக்கொண்டு தோளோடு தோள் ஒட்டிய மாதிரி நிற்கிறாள். காற்றினால் அவளுடைய சுருண்ட தலைமயிர், நெற்றியிலே வந்து விழுகிறது. அதை அவள் அடிக்கடி தள்ளிக் கொள்கிறாள். அப்படித் தள்ளுகிறபோது, அவளது முகத்தில் லேசாகக் கோபம் வருகிறது. பக்கத்திலிருக்கும் புருஷனைப் பார்க்கிறாள். "என்ன இந்தக் காற்று இப்படித் தொந்திரவு செய்கிறதே? இதைக் கொஞ்சம் அடக்கி வைக்கக்கூடாதா?" என்று சொல்கிற மாதிரி இருக்கிறது. ஆனால், அந்தப் புருஷனோ அவளது கோபத்திலே சோபையைக் காண்கிறான். சிரிக்கிறான். புன்சிரிப்புத்தான். தன் கையிலே பிடித்துக் கொண்டிருக்கும் நீண்ட வில்லை ஒரு தரம் அசைத்துக் கொடுக்கிறான். அதில் கட்டியிருக்கும் மணி, ஓசைப் படுகிறது. மனவொற்றுமையுடன் கூடிய தம்பதிகள், அவர்களுடைய சர்வத்தையும் இழந்துவிட்ட காலத்தில்கூட, எந்த இடத்திலும் சந்தோஷமாயிருப்பார்கள்

என்ற உண்மையை உலகத்துக்கு அறிவிக்கிற மாதிரி இருக்கிறது அந்த ஓசை.

சிவப்பு நிறமாயுள்ள புருஷன், இந்தத் தம்பதிகளின் ஊடற் காட்சியைக் கண்ணினால் பார்த்துக்கொண்டு சிறிது எட்டினாற் போல் நிற்கிறான். அவனுடைய கையிலும் பெரிய வில்லொன்று இருக்கிறது. இவர்களோடு கூடவே வந்தவன். இவர்களுக்காகவே வாழ்கிறான். முகஜாடையினால், அந்த மாநிறப் புருஷனுடைய தம்பி இந்தச் சிவப்புநிற மனிதன் என்பதைச் சுலபமாகத் தெரிந்து கொண்டுவிடலாம். இவனைப் பார்த்தவுடனே, இவன் ஒரு முன் கோபி யென்று யாரும் சொல்லிவிடுவார்கள். ஆனால், இவனைப் போல், தன்னை மறந்து உபகாரம் செய்யக்கூடியவர்கள் உலகத்திலே யாருமில்லை. எப்பொழுதுமே, முன்கோபிகளுக்குத் தாராள மனசு உண்டல்லவா?

“நேரமாகிறது. சூரியன் தேகத்தில் உறைக்க ஆரம்பித்து விட்டான். புறப்படலாமே?” என்றான் மாநிறத்தவனாகிய ராமன். அவனது வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவந்து கொண்டிருக்கையிலேயே, சீதை மடமடவென்று படகை நோக்கிச் சென்றாள். லட்சுமணன், படகின் ஒரு முனையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான், காற்றில் ஆடாமலிருக்க வேண்டு மென்பதற்காக. ராமனும் தன் கோதண்டத்தைப் பூமியிலே ஒரு முறை நன்றாகக் குத்தி எடுத்துவிட்டு, நீர் ஓரமாக வந்தான். அதற்குள் சீதை குதித்துக் கொண்டு படகில் ஏறிவிட்டாள். அதிலிருக்கும் சாண் அகலப் பலகையில் உட்கார்ந்தும் விட்டாள். “நீ ஏறிக்கொள்” என்றான் லட்சுமணனைப் பார்த்து ராமன். அவனும் படகில் ஏறுவதற்கு ஓர் அடி எடுத்து வைத்தான். அதற்குள் அந்தப் படகோட்டி, ஆம், அவன் தான் குகன், சிறிது முன்னே வந்து, ராமலட்சுமணர்களைப் பார்த்து “ஒரு விண்ணப்பம்” என்றான். “கடைசி சமயத்தில் என்ன தகராறு?” என்கிற பாவனையில் சீதை புருவத்தை நெறித்தாள்.

குகன்: படகில் ஏறுவதற்கு முன்னம் நீங்கள் இரண்டுபேரும் காலை நன்றாகக் கழுவிக்கொண்டு ஏறவேண்டும்.

## இயற்கையின் பாடம்

சுடர் வீசி எரியும் நெருப்பின் அழகைக் காணும் ஒரு குழந்தை அதைப் பிடிக்கத் தனது கையை நீட்டுகிறது. நெருப்புக் கையைச் சுட்டுவிடவே வேதனைப் படுகிறது. அதன்பிறகு தீயை அணுகுவதில்லை. உடனே சரியான வழியில் செலுத்தும் ஒரு சக்தி அக்குழந்தைக்கு ஒரு பாடம் கற்பித்ததாகக் கருதப்படுகிறது. இவ்வுலக அனுபவத்தையெல்லாம் திரட்டினால், அதைச் சரியான வழியில் செலுத்துவிக்கும் ஒரு சக்தி யென்றே சொல்லலாம். இந்தச் சக்திக்குத் தன் உணர்வேனும் புத்தியேனும் அறிவேனும் கிடையாது. அன்றியும் அதற்கொரு நோக்கமேனும், தீர்மானிக்கும் புத்தியேனும் கிடையாது. அது நமக்குக் கிடைக்கும் ஒரு விதப் பயனேயாகும்.

—இங்கர்ஸால்

லட்சுமணன் : இது என்ன உத்திரவு?

ராமன் : எதற்காக அப்பா? நாங்கள் இப்பொழுதுதானே ஆசிரமத்திலிருந்து வந்திருக்கிறோம்?

லட்சுமணன் : எங்களைப் பார்த்தால் சுத்தமானவர்கள் என்று உனக்குத் தோன்றவில்லையா?

குகன் : இருக்கலாம். ஆனாலும் நீங்கள் காலைக் கழுவிக்கொண்டு தான் என் படகில் ஏறவேண்டும். இது நிச்சயம். இல்லாவிட்டால் ஏற்ற மாட்டேன். அப்படி உங்களுக்கு இஷ்டமில்லையானால், அம்மாளை இறக்கிக் கொண்டு விடுங்கள். நான் படகை அவிழ்த்துக்கொண்டு போய்விடுகிறேன்.

ராமன் : ஏன் இப்படிப் பயப்படுகிறாய், அப்பா? காரணத்தைச் சொல்.

குகன் : ஐயோ, உங்களை இப்படியே ஏற்றிக்கொண்டு போனேனாயின், என் வயிற்றுப் பிழைப்பிலே மண் விழுந்துவிடும். அப்படிச் செய்வதிலே உங்களுக்கு என்ன லாபம்?

இதில் ஏதோ சூட்சுமம் இருக்கிறதென்று ஊகித்துக்கொண்டான் ராமன். "விவரத்தைச் சொல்லப்பா" என்றான் அன்பாக. குகன் சொல்கிறான் : "இல்லை ஐயா, உங்களைப் பற்றி நான் நிரம்பக் கேள்விப் பட்டிருக்கிறேன். உங்கள் பாததூளிபட்டு, கல்கூடப் பெண்ணாகி விட்டதாம். அதேமாதிரி இப்பொழுது கால் தூசிகளுடன் இந்தப் படகில் ஏறினீர்களாயின், இது எத்தனை பெண்களாகி விடுமோ? எனக்குப் பயமாயிருக்கிறது. ஒரு பெண்ணைக் கட்டிக் கொண்டு சமாளிப்பதே கஷ்டமாயிருக்கிறது. இத்தனை பெண்களையும்...?"

இந்த வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருக்கையிலேயே, சீதை விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தாள். "உங்கள் பவிஷு படகோட்டிக்குக்கூடத் தெரிந்திருக்கிறது" என்று ராமனைக் கேலி செய்கிறமாதிரி, தனது சுட்டுவிரலை ஆட்டினாள். படகோட்டியின் கல்மஷமற்ற மனதைக் கண்டு, லட்சுமணன் திகைத்துப் போனான். உடனே இரு சகோதரர்களும் கங்கையில்

## துணையின் அவசியம்

'எட்டுக் கட்டம்' என்னும் காயாட்டத்தில், நடுக்கட்டத்துக்குக் காய்கள் சென்று விட்டால், அவை மறுபடியும் திரும்புவதில்லை. ஆயினும், அப்படிப் போவதற்கு முன்னால் காய்கள் பலகையிலுள்ள ஒவ்வொரு கட்டத்தையும் தாண்டிச் செல்லவேண்டும். நடுக்கட்டத்துக்குப் போகும் ஒற்றைக்காய், வழியில் வெட்டப்பட்டு அடிக்கடி ஆரம்பக் கட்டத்துக்கு வரக்கூடும். ஆனால், இரண்டு காய்கள் சேர்ந்து சென்றால், இன்னொரு காயால் அவை வெட்டுப் பட்டுத் திரும்பா. அதுபோல, இவ்வுலகத்தில் குருவோடும் இஷ்ட தேவதையோடும் சேர்ந்து பக்தி மார்க்கத்தில் செல்கிறவர்களுக்கு, இடைவழியில் கஷ்டமோ துக்கமோ நேருமென்ற பயமில்லை. அவர்கள் சுலபமாகச் செல்வார்கள். வழியில் சங்கடமே இராது. திரும்பி வரவும் மாட்டார்கள்.

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்.

இறங்கிக் கால்களை நன்ருக அலம்பிக்கொண்டு படகில் ஏறினுர்கள்.

படகும், கங்கையின் குறுக்கே நீரைக் கிழித்துக்கொண்டு வேகமாகச் செல்கிறது. குகனுக்கு உள்ளே ஆனந்தம் பொங்குகிறது. "அயோத்திமா நகரத்து அரசிளங் குமரர்களை நான் அல்லவோ அழைத்துக் கொண்டு போகிறேன்" என்று நினைக்கிருன். புஜங்கள் பூரிக்கின்றன. தேகத்தில் புதிய உற்சாகம் உண்டாகிறது. துடுப்புகள் வேகமாகத் தண்ணீருக்குள் புகுந்து எழுகின்றன.

படகு, கங்கையின் தென்கரை வந்து அடைந்தது. மூவரும் இறங்கினுர்கள். கரைமேல் ஏறினுர்கள். திரும்பிப் பார்த்தார்கள் கங்கையின் பக்கம். படகோட்டியின் உடம்பெல்லாம் வியர்வை. அவனது வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவரவில்லை. சீதா ராம லட்சுமணர்களைக் கரையேற்றிவிட்டதனுல், தனக் கேற்பட்டுள்ள திருப்தியைச் சிரிப்பினுல் காட்டிக்கொண்டு நிற்கிருன். அவனுடைய இரண்டு கைகளும் ஒன்ருகி மூவரையும் வணங்குகின்றன. பார்த்தான் ராமன். அவனுடைய உழைப்புக்கு ஏதேனும் கூலி கொடுக்கவேண்டுமே என்ற எண்ணம் தோன்றிற்று. ஆனுல் கையில் ஒன்றுமில்லை. பெருமூச்சுவிட்டான். அந்தப் பெருமூச்சின் அர்த்தத்தைத் தெரிந்து கொண்டுவிட்டாள் சீதை. "இதோ என் கையில் மோதிரம் இருக்கிறதே, அதைக் கொடுக்கலாமே" என்று சொல்லிக் கொண்டே விரலி லிருந்து மோதிரத்தைக் கழற்றினுள். ராமன் மகிழ்ந்தான். ஒருவருடைய உழைப்பிலே மற்ருெருவர் செளக்கிய மடைவது அவனுக்குப் பிடிக்காது. படகோட்டியின் உழைப்பு, தன்னுல் வீண் போகக்கூடா தென்பது அவன் கவலை. அந்தக் கவலையை, சீதை புத்திசாதுர்யமாகத் தீர்த்துவைத்தாள்.

சீதையினிட மிருந்து மோதிரத்தை வாங்கிக் கொண்டான் ராமன். தண்ணீரின் ஓரத்துக்கு இறங்கிவந்தான். "இந்தா, இதை வாங்கிக்கொள்" என்று சொல்லி மோதிரத்தை நீட்டினுன் குகனிடம். துணுக்கென்று ஓர் அடி பின்வாங்கினுன் குகன். தீப்பட்ட பச்சிலை மாதிரி, அவன் முகம் வாடிவிட்டது.

**ராமன்:** இதை இப்பொழுது உனது கூலியாகப் பெற்றுக் கொள். நாங்கள் திரும்பி அயோத்தி வந்த பிறகு, உனக்குத் தக்கவிதமாகச் சன்மானம் செய்கிருேம்.

**குகன்:** ஐயே, என்னை மன்னிக்கவேண்டும். தாங்கள் அரசரிலே மனிதர் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனுல், இப்பொழுது அரசர்போலவே பேசுகிறீர்களே, இது நியாயமா? பொன்னையும் கல்லையும் எதிர் பார்த்தா இந்த மரப் படகில் உங்களை ஏற்றிக்கொண்டு வந்தேன்? பணத்தாசை பிடித்தலையும் பேயா நான்? உயிர் வாழ்வது உபகாரஞ் செய்வதற்காக அல்லவோ? உங்களை என் படகில் ஏற்றிக்கொண்டு வந்ததன் கார

ணம், என்னுடைய பூர்வ ஜன்மப் பாப மூட்டையை ஒருங்கே இறக்கிவிட வேண்டுமென்பதற்காகவே தவிர, வேறு எந்தப் பலனை உத்தேசித்தும் அல்ல. தங்களுடைய புண்ணிய சரித்திரத்தை வெகு சிரத்தையுடன் கேட்டு வந்திருக்கிறேன். ராஜ்ய போகங்களைத் துறந்துவிட்டு, வனவாசிகளாக வந்திருக்கிறீர்கள். தாங்கள் கஷ்டப்படாமலிருக்கப் பார்த்துக்கொள்வது என் கடமை. இந்தக் காட்டுப் பக்கத்திலே எனக்குக் கொஞ்சம் செல்வாக்கு உண்டு. உங்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து தருகிறேன். என் விருந்தாளியாக நீங்கள் இருக்கவேண்டும். உங்களுடைய தாசனாயிருந்து, நான் பணிவிடை செய்து வருவேன். என் வேண்டுகோளை மறுக்கக்கூடாது.

இந்த வார்த்தைகளைக் கேட்ட ராமன், ஆனந்தக் கண்ணீர் விட்டான். உழைப்புக்கு ஊதியம் பெற மறுத்ததும் அல்லாமல், உபகாரம் செய்வதாக முன்வந்திருக்கிற இந்த உதார சிந்தையை வாழ்த்தினான். "திரும்பி வருகையில் அவசியம் உனது உபகாரத்தை ஏற்றுக்கொள்கிறேன்" என்று சொல்லிக் குகனிடம் விடைபெற்றுக்கொண்டு, மேலே சித்திரகூடம் நோக்கி நடந்தான்.

குகன், ஒரு சாதாரணப் படகோட்டிதான். பாமர ஜனங்கள் என்று இப்பொழுது நாம் யாரைப் பார்த்துச் சொல்லுகிறோமோ அப்படிப்பட்ட பாமரர்களிலே ஒருவன்தான். ஆனால், அவனிடத்தில் எவ்வளவு மனிதத் தன்மை அடங்கி யிருக்கிறது? உலகத்திலே பெரும்பாலோர் பணத்திலே ஏழைகளா யிருக்கிறார்கள்; ஆனால், மனிதத் தன்மையிலே பணக்காரர்களா யிருக்கிறார்கள். சிறிய குடிசையில் பெரிய மனதுடையவர்கள் வாழ்கிறார்கள்; பெரிய மாளிகைகளில் குறுகிய மனமுடையவர்கள் குடியிருக்கிறார்கள். இதைச் சர்வ சாதாரணமாகப் பார்க்கிறோ மில்லையா?

★

## வேதாந்தமும் சர்ச்சிலும்

ஒரு சமயம் சர்ச்சிலுக்கு ஒரு நண்பர் ஒரு புத்தகம் பரிசளித்தார். அரிஸ்டாட்டில் எழுதிய வேதாந்தப் புத்தகம் அது. மத சம்பந்தமான விஷயங்களிலும், வேதாந்த உணர்ச்சியிலும் சர்வ சூனியரான சர்ச்சில் அந்தப் புத்தகத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டார்! மற்றொரு சமயம் அவருடைய நண்பர் ஒருவர், "நீங்கள் 'மானிடரின் சாசுவதம்' என்ற புத்தகத்தைப் படித்திருக்கிறீர்களா?" என்று கேட்டபோது, அவர் தாம் படித்திருப்பதாகச் சொன்னதோடு, "ஆனால், இப்பொழுது நாம் உலவிவரும் இந்த ஓர் உலகமே மிகவும் பெரிதாயிருக்கையில் வேறு உலகத்தில் எனக்கு மோகமில்லை!" என்று சொல்லிவிட்டார். குருட்டு நம்பிக்கைகளில் சர்ச்சிலுக்குப் பிரேமை அதிகம். மூன்று மெழுகுவர்த்திகளை ஏககாலத்தில் கொளுத்திவைத்தால், அவருக்குப் பயம் உண்டாகும். ஏனென்று யாராவது கேட்டால், சுவாமிகளின் எண்ணிக்கை குறையக் குறைய, கடவுளிடம் தமக்குள்ள பக்தி அதிகரிப்பதாகச் சொல்வார்!

# தூங்கு மூஞ்சி

செக்காவ்

இரவு. குழந்தை தொட்டிலில் தூங்குகிறது. நர்ஸ் தாலாட்டிக் கொண்டிருக்கிருள். வர்க்கா என்று அவளுடைய பெயர். பலர் கேட்கும்படி "கண்ணே! உறங் குறங்கு!" என்று அவள் பாடு கிருள். இனிமையான பாட்டு.

அறையில் விளக்கு மினுக்கு மினுக் கென்று எரிந்துகொண் டிருக்கிறது. நாற்புறமும் கொடி கள் தொங்கின. அவைகளில் குழந்தையின் சட்டைகளும் துணி களும் உலர்த்தப் பட்டிருந்தன. அவற்றின் நிழல் சுவரில் பல இடங்களில் விழுந்திருக்கிறது. அறையில் ஒரே புழுக்கம். வீட்டுக்கு வெளியே கொஞ்ச மும் காற்றில்லை.

ருஷியக் கதாசிரியர்களில் மிகச் சிறந்தவருள் ஒருவர் ஆண்டன் செக்காவ். அவருடைய கதைகள் ஜீவ சித்திரங்களாகும். கதா பாத்திரங்களை உயிர்த் துடிப்பு நிறைந்திருக்குமாறு தீட்டுவதில் வல்லவர் அவர். படிப் பவர் மனம் ஆவேசங்கொள்ளுமாறு ஓர் ஏழை வேலைக் காரியின் வாழ்வு இங்கே வர்ணிக்கப்பட்டுள்ளது. வர்க்கா ஒரு வேலைக்காரப் பெண்தானே? ஒரு வேலைக்காரப் பெண்ணுக்கும் தூக்கமா? தூங்க நேரமும் உண்டா? துக்கப்பட நேரமுண்டா? உழைப்புக்குத்தான் நேர முண்டு. ஆனல், இறுதியிலே, நேரம் கிடைத்து விடுகிறது தூங்க. எப்படி?

குழந்தையோ ஓயாமல் கத்து கிறது. சில சமயம் கத்தச் சக்தி யில்லாமல் நிறுத்துகிறது. ஆனல், விட்டு விட்டு அடிக்கடி கத்தின மணியந்தான். எப்பொழுது ஓயும் என்று யாருக்குத் தெரியும்? வர்க்கா எத்தனை நாழிதான் தொட்டிலை ஆட்டுவாள்! சதா தூங்கி விழுகிருள். கழுத்து வலி யினல் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டிருக்கிருள். தூக்கமோ கண்ணைச் சுற்று கிறது. கண் கொட்டாமல் குழந் தையைக் கவனிக்க வேண்டி யிருப்பதால், கண்ணிமைகள் வலிக்கின்றன. நாக்கில் துளிக் கூடத் தண்ணீரில்லாததால், பேச வும் முடியவில்லை. "கண்ணே! உறங்குறங்கு!" என்று அடிக் கடி மெதுவாகச் சொல்லிக் கொண்டே தொட்டிலை ஆட்டு கிருள்.

பக்கத்துத் தோட்டத்தில் கோட் டான் அலறுகிறது. அடுத்த அறையில் எஜமானனும் வேலைக் காரர்களும் குறட்டை விட்டுக் கொண்டு தூங்குகிருர்கள். தொட்டில் ஆடும்போது, 'கிரீச், கிரீச்' என்று சத்தம் எழுகிறது. வர்க்காவோ முணு முணுக்கிருள். வெளியே கும்மிருட்டாய் இருக் கிறது. பாதிராத்திரி வேளை யாயிற்று. யாருக்குத்தான் தூக் கம் வராது? ஆனல்,சமுத்திர அலை

ஓய்ந்தாலும், குழந்தையின் அழுகை ஓயாதுபோலிருக்கிறது! குழந்தையைத் தூங்கப்பண்ணு மல், வர்க்கா எப்படி உறங்கு வாள்? தன்னே அறியாமல் தான் தூங்கிவிட்டால், எஜமானி கடு மையாகக் கோபிப்பாளே!

விளக்குச் சுடர்த் தட்டுகிறது. சுவரில் நிழலாடுகிறது. வர்க்கா பாதிக் கண்பார்வை பார்க்கிருள். திடீரென்று சொர்ப்பனுவஸ்தை அடைவாள்; திடுக்கென்று விழித் துக் கொள்ளுவாள். ஆகாய வீதி யில் மேகங்கள் ஒன்றன்பின் ஒன் ருய்ச் செல்வதைக் காண்பாள். தெருவில் சந்தைக்குப் போகும் மூட்டை வண்டிகள் சாரி சாரி யாய்ச் செல்லுகின்றன. வெகு தூரத்துக் கப்பால் மூடுபனி மூடிய காடுகளேப் பார்ப்பாள். பறவைகள் அடிக்கடி கொக்கரிப் பது, குழந்தை கத்துவதுபோல் அவளுக்குத் தோன்றும். இடை யிடையே "கண்ணே! உறங் குறங்கு!" என்று பாடுவாள்.

பக்கத்துக் குடிசையில் அவ ளுடைய தகப்பன் குற்றுயிரும் குலேயுயிருமாகக் கிடக்கிருன். இவளோ குழந்தையை விட்டு நகருவதற் கில்லே. நோய்வாய்ப் பட்ட தந்தை வலி பொறுக்காமல் கத்துவது இவளது காதில் விழு கிறது. உடம்பில் பலமில்லாமல் 'லொக்கு லொக்கு' என்று அவன் இருமுகிருன்.

அவளுடைய அன்னே பிலாகியா என்பவள், தன் புருஷன் துன் பப் படுவதைப் பற்றி எஜமான னிடம் தெரிவிக்கப் போனுள். போய் நேரமானபடியால், சீக் கிரம் திரும்பலாம். பக்கத்தி லுள்ள குடிசையில் நடக்கும் பேச்சும் புலம்பலும் வர்க்காவின் காதில் விழுந்து கொண்டுதான் இருந்தன.

சிறிது நேரத்துக் கெல்லாம் வண்டி வரும் சத்தம் கேட் கிறது. டாக்டர் வந்து இறங்கு கிருர். குடிசையில் விளக்கேற்றி வைக்கப்படுகிறது. நோயாளி யைப் பார்த்து "உனக்கு இந்தத் தொந்திரவு வெகு காலமாக இருக் கிறதா?" என்று டாக்டர் கேட் டார். அதற்கு அவன் "இனி நான் பிழைப்பேனு? என் ஆயுள் முடிந்துவிட்டது!" என்ருன்.

"உளருதே! சீக்கிரம் குணப் பட்டு விடும்."

"குருடன் வேண்டுவது கண் ணேயே. ஆனுல், எமன் வரும் போது நீங்கள்தான் என்ன செய்ய முடியும்?"

அரை மணி நேரம் டாக்டரின் பரிசோதனே நடந்தது.

"இனி நான் ஒன்றும் செய்வ தற்கில்லே. ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போங்கள்" என்று சொல்லி, டாக்டர் போய் விட் டார்.

பிலாகியா தன் கணவனே வண் டியில் ஏற்றி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்ருள். இந்தப் பேச்சும் சந்தடியும் எல்லாம் வர்க்காவின் காதில் விழத்தான் விழுந்தன. தன் தகப்பனேப்பற்றி அவளுக்குக் கவலே உண்டா யிற்று. இடை யிடையே குழந் தையைத் தாலாட்டும் வேலே

யும் நடந்து கொண்டே யிருந்தது.

சிறிது நேரம் சென்றது. பிலேகியா திரும்பினுள். காலா காலத்தில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகாததால், அவளுடைய கணவன் உயிர் துறந்தான். அவன் ஆத்மா சாந்தியடையட்டும்!

பிலேகியாவின் அழுகையைக் கேட்டு, வர்க்கா தெருவில் வந்து 'குய்யோ! முறையோ!' என்று கதறினுள். வேலைக்காரியின் தகப்பன் இறந்தால், எஜமானனுக்கென்ன? குழந்தை அழாமல் பார்த்துக் கொள்வது தான் அவனுக்குப் பெரிதாகப் பட்டது. குழந்தையைக் கவனிக்காமல் போய் விட்டாளே என்று, வெளியே வந்தான்; துக்கத்தில் மூழ்கியிருக்கும் வர்க்காவை, 'பளீர்' என்று அறைந்தான்.

"என்ன வேலை செய்கிருய்? குழந்தை அழுவது உன் காதில் விழவில்லையா?" என்று உறுமி விட்டுப் போனுன்.

வர்க்கா திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள். செய்வ தொன்றும் புரியவில்லை. திரும்பவும் விதியை நொந்து கொண்டு தொட்டிலை ஆட்டினுள்; பழையபடி தாலாட்டுப் பாட்டையும் முணு முணுத்தாள். சுவரில் நிழல்கள் ஆடின. திக்பிரமையினுல், பல சங்கதிகள் அவளது மனதைக் கொள்ளை கொண்டன. மறுபடியும் மன வேதனையில் மூழ்கினுள். தன் தாய் தன்னைத் தட்டி எழுப்புவது போல், அவளுக்குத் தோன்றியது. "குழந்தையை என்னிடம் கொடு" என்று, பழகினவர் யாரோ திருப்பித் திருப்பிக் கேட்பது போல் அவளது காதில் விழுந்தது.

வர்க்கா துள்ளிக் குதித்தாள். என்ன சங்கதி என்று சுற்று முற்றும் பார்த்தாள். எல்லாம் கனவென்று தோன்றிற்று. அறைக்குள்ளே அடுத்த நிமிஷம் அவளுடைய எஜமானி நுழைந்தாள். குழந்தைக்குப் பால் கொடுத்தாள். அது முடியும் வரையில், வர்க்கா மௌனமாய் நின்று கொண்டிருந்தாள். அப்பொழுது பொழுது விடியும் சமயம். இன்னும் அவள் கண்கொட்டாமல் விழித்துக் கொண்டே யிருக்கிருள். வேலைக்காரிக்குத் தூக்கமும் துக்கமும் எதற்கு?

"வர்க்கா! குழந்தை என்னவோ பயந்திருக்குப் போலிருக்கு. ஜாக்கிரதையாகக் கவனி" என்று எச்சரிக்கை செய்து விட்டு, எஜமானி அகன்ருள்.

வர்க்கா என்ன செய்வாள்? தூக்கக் கலக்கம் முன்பைவிட இப்பொழுது அதிகம். எங்கே தூங்கி வழிய நேருமோ என்று பயந்து தொட்டிலைத் தன் தலையால் ஆட்டினுள். தலைக் கிறு கிறுப்புச் சொல்லி முடியாது. கண் எரிச்சலும் அதிகமாயிற்று.

"வர்க்கா, அடுப்பை மூட்டு!" இது எஜமானனின் குரல். அதைக் கேட்டு விடியற் காலம் வந்து விட்டதென்று வர்க்கா நினைத்தாள். தொட்டி லாட்டுவதை விட்டு, அடுப்பு வேலையைக் கவனிக்கப் போனுள். சிறிது சந்தோஷப்பட்டாள். ஏனென்ருல், ஓடியாடுவதனுல், தூக்க மயக்கம்

சிறிது குறையு மல்லவா? மூளை சற்றுத் தெளிவாக இருந்தது. இவ் வாறு ஒன்றன்பின் ஒன்ருய் வீட்டு வேலைகள் அனைத்தையும் செய்தாள்.

எஜமானனே ஒரு செருப்பு வியாபாரி. 'நொச்சு, நொச்சு' என்று ஏதாவது புகார் செய்து கொண்டே யிருந்தான். அவ னிடம் வேலை செய்வது யாருக் கும் சிரமம். எந்தக் காரியத்தைச் செய்தாலும், சொட்டைச் சொல் வராமலிராது. நாள் முழுதும் வர்க்காவுக்கு மனவேதனைதான். செக்கு மாடுபோல உழைத்தா லும், எஜமானனுக்குத் திருப்தி இல்லை.

இதே மாதிரி தினசரி சாயங்கால மானல் வர்க்காவுக்குத் தூக் கம் கண்ணைச் சுற்றும். வயதோ பதினெட்டு. துள்ளிக் குதிக்கும் இளமை. சிட்டுக் குருவியின் தலை யில் பனங்காயைத் தூக்கி வைக்க லாமா?

குழந்தையோ விசித்திரம். வீட்டுவேலைக்கோ ஓய்ச்சல் ஒழிவில்லை. கடைக்கு வருவோ ரும் போவோரும் அநேகர். அவர்களுக்குத் தேத்தண்ணீர் கொடுக்க வேண்டும். எத்தனை தரம் அடுப்பை மூட்டுகிறது! எத்தனை தரம் அணைக்கிறது!!

திருப்பித் திருப்பி அதே வேலை யைச் செய்தால், யாருக்குத்தான் மன அதிருப்தி ஏற்படாது? தூக்க மில்லாத வாழ்க்கை. தகப்பனே இறந்தான். தாயும் துக்கக் கட லில் ஆழ்ந்தாள். வேலை! வேலை!! சாண் வயிற்றுக்காக, வெட்கங் கெட்ட வேலை செய்தாக வேண்டியிருக்கிறது!!!

பகலெல்லாம் இப்படி. இரவில் கடைசி உத்திரவு என்னவென் ருல், "வர்க்கா! தொட்டிலை ஆட்டு. குழந்தையை அழ விடாதே!" என்பதுதான். திரும் பவும் 'பழைய குருடி கதவைத் திறடி' என்ற கதைதான். இரவு முழுமையும் "கண்ணே! உறங் குறங்கு!" என்னும் பாட்டுத் தான்!

இம்மாதிரியே பல நாட்கள் கழிந்தன. மனித சரீரந் தானே? கருங்கல்லா? தூக்கமில் லாததால் வர்க்காவுக்குப் புத்தி மயக்கம் ஏற்பட்டது. நாளடை வில் பிதற்றலும் புலம்பலும் உண் டாயின. பைத்தியம் பிடிக்க வில்லை. அது ஒன்று தான் பாக்கி.

அவளுடைய முக்கிய எதிரி குழந்தைதானே? குழந்தையை ஒழித்துவிட்டால், நன்ருய்த் தூங் கலா மல்லவா? இப்படி ஒரு பயங்கர எண்ணம் அவளது மன தில் உதித்தது?

ஒரு நாள் இடி இடி என்று சிரித்தாள். அங்கு மிங்கும் ஓடி ளுள். பைத்தியம்! பைத்தி யம்!!

தொட்டிலிலே உள்ள குழந்தை யைப் பேய்போல் உறுத்து விழித் துப் பார்த்தாள். அதன் மென்னி யில் கையை வைத்துத் திருகினுள். இனித் தாலாட்டுத் தேவையில் லாத நிலையை அது அடைந்து விட்டது; அதன் அழுகை ஓய்ந்து விட்டது. அவளும் தூங்கத் தொடங்கினுள்; அடித்துப் போட்ட பிணம் போன்ற தூக் கம்! ஸ்மரணையற்ற தூக்கம்!!



# பறித்த பூக்கள்

பக்தர்கள் சந்திப்பு: யது பாபு ஸ்ரீ கௌரங்கரின் பக்தர். ஒரு சமயம், அவரைச் சந்தித்தபோது பரமஹம்ஸர் பரவச நிலையடைந்த விவரம் 'ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயத்'தில் காணப்படுகிறது. ஸ்டார் தியேட்டரில் சைதன்ய லீலையைப் பார்த்துவிட்டு யது,வந்தார். அதைப்பற்றிப் பேச்சு நடக்கிறது. அவர் சொன்னார்: "சைதன்ய லீலை புதிதாக நடிக்கப்படுகிறது. மிகவும் நன்றாக இருக்கிறது." பகவான் மிக்க ஆனந்தத்துடன், சைதன்யரின் கதையைக் கேட்கிறார். நடு நடுவில் அங்கே இருக்கும் சிறு குழந்தைகளுடன் விளையாடுகிறார். கொஞ்ச நேரம் கழித்து, யது பாபு சொன்னதாவது "நீங்கள் ஒரு நாம சங்கீர்த்தனம் செய்யுங்கள்." 'கௌரங்கர் பக்தர்களுடன் ஸங்கீர்த்தனம் செய்து நடனமாடுகிறார்' என்னும் கருத்துள்ள ஒரு பாட்டையும் இன்னும் சில பாடல்களையும் பகவான் பாடினார். பாட்டு முடிந்தது. முகர்ஜி சகோதரர்கள் எழுந்தார்கள். பகவானும் எழுந்தார். ஆனால், தம் நினைவில்லை. வெளி வராண்டாவில் வந்ததும், சமாதியை அடைந்து நின்றார். வெளியில் அநேக விளக்குகள் எரிகின்றன. யது பாபுவின் காவல்காரன் நல்ல பக்தன். ஸ்ரீ ராமகிருஷ்ணரைத் தன் வீட்டுக்கு அழைத்து விருந்தளிப்பதுண்டு. அவன் ஓடி வந்து பகவானுக்கு விசிற ஆரம்பித்தான். கொஞ்ச நேரத்துக்குப் பிறகு, தோட்ட நிர்வாகி ரத்தினம் வந்து நமஸ்கரித்தான். பகவான் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சாதாரண நிலைமைக்கு வந்தார். 'நாராயணா, நாராயணா' என்று கடவுளின் பெயரை உச்சரித்துவிட்டு, அவர்களிடம் "கஞ்சாப் பிடிக்கும் ஆள், தன்னைப்போலுள்ள மற்றோர் ஆளைக் கண்டால் ஆனந்த மடைகிறான். ஓர் அரசன் வந்தாலும் பேசுவதே இல்லை. ஆனால், ஒரு மூதேவி போன்ற கஞ்சாப் பிடிக்கும் ஆள் வந்தால், உடனே வாரிக் கட்டிக் கொள்ளுவான்" என்று கூறினார்.

* *

பேயும் பெண்ணும்: உடல்வலி, மனத் துயரம், இவைகளைப் பொறுப்பதில் ஸ்திரீகளுக்கு நம்மைப்போல் நூறு மடங்கு சக்தி இருக்கும். இது போதாதா? பேய் பிசாசு என்று அசாத்திய பயத்தை உண்டுபண்ணி, கோவில் குளங்களுக்கு இழுத்து மந்திரவாதியைக் கொண்டு கோரமாய்த் தலையை அவிழ்த்து ஆடச்செய்து, பிரம்பால் அலற அலற அடித்து, 'இந்த உயிர் எதற்கு? சாவது நலம்' என்று எண்ணும்படி படுத்துவார்கள். நம்மிடமுள்ள இத்திய வழக்கத்தை கனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியார் தமது 'கலைமகள்' கட்டுரையினிடையே கண்

டிக்கிறார். ஒரு பெண்ணை மந்திரவாதி அடித்துப் பயமுறுத்திப் பயங்கரமான சத்தங்கள் போட்டுப் பார்த்தான். அவள் ஆடவில்லை. மூன்று நாள் பிரயாசைப் பட்டும் ஒன்றையும் காணவில்லை. "தலையை அவிழ்த்துத் தானே கொஞ்சம் ஆடினால் அல்லவா, பிடித்த பேய் வரும்?" என்று அதட்டினான். "நானுக ஆடி வரவழைக்கிற பேய் பேயல்ல" என்று, பெண் தைரியமாய் எழுந்திருந்து உள்ளே போய்விட்டாள்!

* *

**ரேடியோக் கலியாணம் :** 'ஒரு பெண்ணின் கலியாணத்தில் மாப்பிள்ளை இருக்க வேண்டிய அவசிய மில்லை! மாப்பிளை தனக்குப் பதிலாக அதிகாரம் பெற்ற ஓர் ஏஜண்டை அனுப்பலாம். ஏஜண்டு மாப்பிள்ளை ஸ்தானத்திலிருந்து விவாகத்தை முடிக்கலாம்'—இந்த நூதனக் கொள்கையை உலகுக்கு விளக்கிக் காட்டிய பெருமை, சீமையைச் சேர்ந்தது. காதல் திருவிளையாடல்கள் புரிந்து, பின்பு காதலியைத் தவிக்கவிட்டு யுவர்கள் யுத்த சேவைக்குச் சென்றுவிட்டார்கள். காதலிகள் பட்ட கஷ்டங்கள் செப்பத் தரமன்று. அதற்குப் பரிகாரமாகவே, மேலே கண்ட அபூர்வ யோசனையை வெளியிட்டார்கள். இதை இப்போது இத்தாலி தோற்கடித்து விட்ட ஒரு விவரத்தை, 'காவேரி' எடுத் துரைக்கிறது. இத்தாலியில் அநேகமாக எல்லோரும் சிப்பாய்கள் ஆகிவிட்டார்கள். மாப்பிள்ளை ஸ்தானத்துக்குப் பதில் ஆள் கிடைப்பதில்லை. ஒரு புதிய யுக்தியை அங்கே கையாளுகிறார்கள். மாப்பிள்ளையின் பெயரைச் சொல்லி, காதலி ரேடியோ மூலமாய்க் கதறுகிறாள். தான் படும் கஷ்டங்களை முறையிடுகிறாள். விவாகம் செய்துகொள்ள வேண்டுகிறாள். மாப்பிள்ளையும் ரேடியோ மூலமாகவே பதில் சொல்லுகிறான். காதல் கனி ரஸத்தைப் பொழிகிறான். காதலர்கள் தாங்கள் கலியாணம் செய்துகொண்டதற்கு அடையாளமாக ரேடியோவில் முத்த மழை பெய்கிறார்கள். இதைக் கிராமபோன் ரிகார்டு எடுத்து விடுகிறார்கள். இந்த இசைத்தட்டை மாப்பிள்ளை ஸ்தானத்தில் வைத்து, பாதிரியார் மேல் சடங்குகளை நடத்திவிடுகிறார்.

* *

**சாணக்கியர் ராஜாஜி :** சிலர் பிறவியிலேயே தலைவராக விளங்குகிறார்கள். நெப்போலியன் அப்படிப்பட்டவன். தான் கொண்ட கொள்கையை அவன் எப்படியாவது சாதித்துவிடுவான். அப்படிப்பட்ட பிறவித் தலைவர் ராஜாஜி என்று 'வசந்த'த்தில் சுவாமி சுத்தானந்த பாரதி வர்ணிக்கிறார். அந்த ஆழ்ந்த உள்ளாராய்ச்சி, தேசீய உணர்ச்சி, தேசத்தின் உயிராகிய தத்துவ உணர்ச்சி, கீதை வாழ்வு, அஞ்சா நெஞ்சம், நிதான நடை, அறிந்த பேச்சு, துணிந்த செயல், பொதுஜன வசீகரம், கஷ்ட நஷ்டங்களைச் சட்டை பண்ணமல் ஜனங்களை முன்னேற்றிச் செல்லும் வீரம், தெளிந்த சொல், ஆட்களின் மனத்தை ஊடுருவிப் பாயும் கூர்ந்த மதிப்பொலிவு,

மன விசாலம், தம்மை நம்பின வரை எல்லா விதத்திலும் உயர்த்தும் திறமை, பெருந்தன்மை— இவை யெல்லாம் ஒரு தலைவனுக்குரிய தன்மைகள். இவை முற்றிலும் அமைந்த ஒரு தலைவர் நம் ராஜாஜிதாம். அவரைச் சிலர் மாக்கிய வில்லி என்பார்கள்; அவரை நான் சாணக்கியர் என்பேன். தம்மைச் சேர்ந்தவரை வானளாவ அவர் உயர்த்துவார்; எதிர்த்தவரை ஒரேயடியாகக் குழியை வெட்டிப் புதைத்துவிடுவார். இரண்டு திறமையும் அவருக்கு உண்டு. மந்திரி, தந்திரி.

*　　　　*

**புளியங்கொட்டைக்கு யோகம்:** பிசுபிசுப்பான பெக்டின் என்னும் தாவரப் பொருள் தற்போது எத்தனையோ தொழில்களுக்கு வேண்டியதா யிருக்கிறது. பழம் முதலியவைகளில் தயாரிக்கப்படும் 'ஜாம்', 'ஜெல்லி' போன்ற தித்திப்புத் தின்பண்டங்கள் செய்வதற்கு மட்டுமன்றி, ரப்பர்ப் பாலைக் கட்டிப்படுத்துவது, வாசனைத் திரவியங்களைக் கொண்டு பால்போன்ற திரவங்கள் தயாரிப்பது, சுவர்களில் ஒட்டும் அலங்காரக் காகிதங்கள், அட்டைகள் முதலியவற்றிற்கு மேலே தடவுவது ஆகிய இவைபோன்ற பல தொழில்களுக்கும் இது அதிகமாய் உபயோகிக்கப்பட்டு வருகிறது என்று 'ஹிந்துஸ்தான்' கூறுகிறது. இத்தகைய பெக்டினை இதுவரையில், ஆப்பிள், எலுமிச்சை போன்றவற்றிலிருந்து தயாரித்து வந்தார்கள். இந்தியாவில் பழங்கள் ஏராளமாய்க் கிடைத்தாலும், சாறு, எண்ணெய் முதலியவை எடுப்பதற்கு வசதியில்லை. ஆகவே, இந்தப் பெக்டின் தொழிலை இந்தியாவில் ஆரம்பிக்க முடியவில்லை. இதுவரை வெளிநாட்டி லிருந்து வரும் பெக்டினையே இந்தியா நம்பிக் கிடந்தது. இப்போது புளியங்கொட்டையில் பெக்டின் ஏராளமாய் இருக்கிற தென்று கண்டு பிடித்து விட்டதால், இதுவரை ஒன்றுக்கும் உதவாமல் கிடந்த இந்தக் கொட்டையை, இனி மிகவும் லாபகரமாக உபயோகித்துக் கொள்ளலாம்.

*　　　　*

**ரஷ்ய தளபதி டிமொஷெங்கோ:** வீரர் மார்ஷல் டிமோஷெங்கோ பெஸ்ஸரேபியாவிலே ஒரு சிறு கிராமத்தில் குடியானவக் குடும்பத்தில் பிறந்தவர். சிறிது காலம் பண்ணைத் தொழிலாளியாக வேலை பார்த்தார். 20ஆவது வயதில்தான் இவர் முதல் முதலாகச் சைன்யத்தில் சேர்ந்தார் என்று 'குமரன்' குறிப்பிடுகிறது. அப்போதே இவரது திறமை விளங்கிற்று. யந்திர பீரங்கியை ஆராய்வதற்காக இவரை ஒரு விசேஷ ரெஜிமெண்டுடன் அனுப்பினார்கள். அங்கேதான் யந்திரப் போரில் இவருக்குப் பயிற்சியும் ஏற்பட்டது. ரஷ்யப் புரட்சியின்போது தம் தளபதி புரட்சிக்கு எதிரான கட்சியைச் சேர்ந்திருந்தும், டிமோஷெங்கோ வெள்ளைப் படைக்கெதிராய்த் தம் ரெஜிமெண்டை நடத்திச் சென்று ஸாரிட்ஸின் என்னுமிடத்திலிருந்த பத்தாம் சைன்யத்துடன் கலந்து கொண்டார். இங்கேதான் அவர் முதல் முதலாக வரோஷிலாவைச் சந்தித்தார். ஸாரிட்ஸினைச் சுற்றி நடந்த போராட்டத்தில்தான் அவர் முதல் முதலாக ஒரு பிரிகேடின்

தலைவராய் நியமிக்கப்பட்டார். அதே வருஷம் சிலநாள் கழித்து அவருக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் வெள்ளைப் படையின் பக்கத்தில் தாக்கி உதவி செய்ததால், அது பின் வாங்க வேண்டியதாயிற்று. உள் நாட்டுப் போருக்குப் பின் டிமோஷெங்கோ ராணுவக் கலாசாலையில் பட்டம் பெற்றுப் பல தலைமைப் பதவிகளை வகித்தார். 1940-ஆம் வருஷம் மே 7-உ அவர் ஸோவியத் ரஷ்யாவின் தற்காப்பு மந்திரியாக நியமனம் பெற்று, மார்ஷல் அந்தஸ்தும் அடைந்தார்.

* *

**ஈ. வே. ரா. துறவு:** திரு. ஈ. வே. ராமசாமி நாயக்கர் 25 வயதிலே, பெற்றோருக்குத் தெரியாமல் துறவு பூண்டு விட்டாராம். அவர் போகும் போது, கழுத்தில் தங்கச் சங்கிலி, விரல்களில் மோதிரங்கள், இடுப்பில் அரைஞாண் முதலிய நகைகள் அணிந்திருந்தார். ஆனல், ஒரே ஒரு மோதிரத்தை யன்றி மற்றவைகளைத் துளியும் அழிக்காமலே, மொட்டைத் தலையுடன் எங்கெங்கோ சென்று வந்து விட்டார். கடைசியில் எல்லூரில் ஈ. வே. ரா. வுக்கும் அவருடைய தந்தைக்கும் நடந்த உருக்கமான சந்திப்பைத் ' தமிழன் ' வெளியிட்டுள்ளது. மகனைக் கண்டதும் மிகவும் பரிதாபமாக " உன்னைப் பெற்றதால் பார்க்காத ஊரெல்லாம் பார்த்துவிட்டேன் " என்று சொல்லித் தந்தை கண்ணீர் விட்டார். மறு நாளே ஈ. வே. ரா. பெஜவாடாவுக்குத் தந்தி கொடுத்து, தமது நகைப் பெட்டியை வரவழைத்தார். நகைப் பெட்டியைத் தகப்பனரிடம் கொடுத்தார். மோதிரம் தவிர, பாக்கி நகைகளெல்லாம் அப்படியே யிருந்தன. தந்தைக்குப் பெரிய ஆச்சரியம் ஏற்பட்டது. மகனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே, " அடே, ராமசாமி! இவ்வளவு நாளாய் எப்படிச் சாப்பிட்டாய்? " என்ருர். அதற்கு நாயக்கர், " நாம் ஈரோட்டில் கொடுக்கும் சதாவிருத்தியை (பிச்சை) யெல்லாம் திரும்ப வசூல் பண்ணி விட்டேன், அப்பா! " என்று கூறினர்!

* *

**ரோஜாப்பூ:** புராதன இந்தியாவில் ரோஜாப் புஷ்பம் கிடையாது. அக்காலத்தில் மலர்களில் தாமரையே மகிமையான ஸ்தானம் வகித்து வந்தது. புராண ரீதியாகப் பார்த்தால், தாமரையே தலைசிறந்து நின்றது தெரிய வருகிறது. ரோஜா மலர் அந்நிய நாட்டிலிருந்து வந்ததாகும். ரோஜாவின் ஆதி இருப்பிடம் பாரஸீக தேசம் என்று ' செட்டிநாட் 'டில் ' நேசி ' எழுதுகிருர். உலகில் பிரான்ஸ் தேசம் தான் ரோஜாப் புஷ்பங்களுக்குப் பெயர் பெற்றது. இங்கிருந்துதான் ஆங்கிலேயர், ரோஜா வளர்ப்பைக் கற்றுக் கொண்டார்கள். மொகலாய மன்னர்களின் காலத்தில் ஸ்ரீநகரில் ' ஷாலமார் ', ' நிஷத் ' என்னும் ரோஜா நந்தவனங்கள் சிருஷ்டிக்கப் பட்டன. தென்னிந்தியாவில் தஞ்சாவூர், ரோஜாப் புஷ்பங்களுக்குப் பிரசித்திபெற்று விளங்குகிறது. வட நாட்டில் காஷ்மீர் மாகாணத்தில் ரோஜாப் பூக்கள் ஏராளம்.

பாலர் கதை:



# சள்ளுவாய் ராணி — 'நீலா'

கரகராம்பாள் என்று ஒரு ராணி இருந்தாள். அவள் ஒரு சிடுமூஞ்சி. ஓயாமல் யாரையாவது 'தொண தொண' என்று திட்டிக்கொண்டே யிருப்பாள்.

ஒருநாள் ராணியின் தலையை, ஒரு வேலைக்காரி வாரிக்கொண்டிருந்தாள். ராணியின் தலைமயிரில் சிடுக்கு இருந்தது. சேடி கொஞ்சம் பலமாக இழுத்துவிட்டாள். மயிர் அவள் கையோடு வந்துவிட்டது. பார்க்கணுமே ராணியின் கோபத்தை! சீறிச் சீறி, விடாமல் திட்டினாள். இப்படித் திட்டிக்கொண்டே யிருக்கையில், தொண்டையை என்னவோ அடைத்துக்கொண்டது. ராணியால் பேச முடியவில்லை. 'திறு திறு' என்று விழித்தாள்.

உடனே ராஜாவுக்கு ஆள் அனுப்பினார்கள். ராஜா வந்து டாக்டருக்கு ஆள் அனுப்பினார். டாக்டர் வந்தார். ராணியின் தொண்டையைப் பார்த்தார்.

"ஓ! மகாராணி! ரொம்பப் பேசினீர்கள் போல் இருக்கிறது. அதனால்தான் இப்படி வந்திருக்கிறது. உங்கள் உள்நாக்கு, தொண்டையை விட்டுக் கழன்று, குரல்வளையைப் போய் அடைத்துக்கொண்டிருக்கிறது" என்றார் டாக்டர்.

"இதற்கு என்ன செய்வது?" என்று கேட்டார் ராஜா.

"இப்போதே ஆப்பரேஷன் செய்யவேண்டும். அதற்குச் சிறிது நேரம் மகாராணியின் பெரிய நாக்கை அகற்றிவிட வேண்டும். ஆப்பரேஷன் முடிந்த பிறகு, திரும்பவும் ஒட்டிவிடலாம்" என்றார் டாக்டர்.

"அப்படியே செய்யும்" என்று ராஜா உத்தரவு போட்டார்.

டாக்டரும் மகாராணியின் நீண்ட நாக்கை முதலில் வெளியே எடுத்து, தம் ஜேபிக்குள் போட்டுக் கொண்டார். ஆப்பரேஷனை முடித்தார். மறுநாள் காலையில்தான் ராணியால் பேச முடிந்தது.

"கழுதை அந்த எங்கே? இல்லையா வர கொண்டு காப்பி இன்னமும்? செய்கிறேன் டிஸ்மிஸ் உன்னை பார்" என்று ராணி கத்தினாள்.

பக்கத்திலிருந்த வேலைக்காரன் நடுங்கினான். ராஜாவிடம் ஓடினான். "ராணி யம்மாளுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. என்னவோ உளறுகிறார்கள்" என்றான். ராஜா வந்தார்.

"செய்கிறீர்கள் சந்தடி இந்த ஏன்? காரணம் என்ன வர ஓடி இங்கே மகாராஜா?" என்றாள் ராணி.

ராஜா பேசாமல் டாக்டருக்கு ஆள் விட்டார்.

"டாக்டர் வாருங்கள்! இல்லை வியாதியும் ஒரு எனக்கு. செய்கிறீர்கள் கலாட்டா இந்த ஏன்?" என்று கத்தினாள் ராணி.

"ஐயோ டாக்டர்! உளறுகிறாளே!" என்று ராஜா புலம்பினார்.

"பயப்படாதீர்கள்" என்று சொல்லிவிட்டு, ராணியின் வாயை டாக்டர் திறந்து பார்த்தார்.

"அடடா! அந்த அவசரத்தில் ஒரு தவறு நடந்து விட்டது; நாக்கைத் தலைகீழாக ஒட்டிவிட்டேன். அதனால் மகாராணி தலைகீழாக வார்த்தைகளைப் பேசுகிறார்கள். வேறொன்று மில்லை. இதோ நொடியில் சரிப்படுத்தி விடுகிறேன்" என்றார் டாக்டர். பிறகு, ராணியின் நாக்கை வெளியே எடுத்து, நேராக ஒட்டி விட்டுப்போனார்.

இதிலும் ஒரு சின்னப் பிசகு நேர்ந்துவிட்டது. நாக்கை டாக்டர் சற்று வெளியே நீட்டி வைத்து விட்டார். ஆகையால், ராணி 'கட கட' வென்று வெகு வேகமாகப் பேசினாள். வார்த்தைகள் எல்லாம் ஒன்றோடொன்று முட்டிக் கொண்டு ஒன்றும் புரியாமல் போகும்படி பேசினாள். "எங்கந் கழுத்கள்ளாம்" என்று கத்துவாள். "எங்கே அந்தக் கழுதைகள் எல்லாம்?" என்று அதற்கு அர்த்தம். இது எப்படிப் புரியும்? "உடக்காப் கொணு" என்பாள். "உடனே காப்பி கொண்டு வா" என்று அவள் நினைப்பு. வேலைக்காரர்கள் ஒன்றும் தெரியாமல் விழிப்பார்கள். அவர்களை ராணி திட்டுவாள். அதுவும் ஒன்றும் புரியாது.

மறுபடியும் டாக்டரை அழைத்தார்கள்.

இந்தத் தடவை டாக்டர் ரொம்ப நிதானமாக, ஜாக்கிரதையாக, ராணியின் நாக்கைச் சீர்ப்படுத்தினார். அளவுக்கு மேலே உள்ளே தள்ளி, துளியூண்டு நாக்குமட்டில் வெளியே இருக்கும்படி ஒட்டினார்.

பின்பு, ராணி மிக்க மெதுவாகப் பேசலானாள். ரொம்பவும் சொற்பமான வார்த்தைகளே அவளது வாயில் வரும். அவள் யாரையாவது திட்ட ஆரம்பித்தால், முதல் வார்த்தையை முடிக்கவே நெடுநேரமாகும். "அ......டே......ரா......மு......" என்று அவள் தொடங்குவதற்குள் வேலைக்கார ராமு ஓட்டமாய் ஓடித் தப்பித்துக்கொள்ளுவான். இதனால், ராணியின் சிடுமூஞ்சித்தனம் பலிக்காமல் போயிற்று. ஆகையால், அந்தத் துர்க்குணத்தை அவள் விட்டு நல்லவள் ஆனாள். டாக்டருக்கு ராஜா பெரிய பெரிய இனாமெல்லாம் அளித்து, சுகமாய் வாழச் செய்தார்.

# மலரின் வாழ்வு



★

பசிய இலைகளில்—பனிநீர்
பதித்த முத்தினைப்போல்
பொசியும் வேளையில்—செடியில்
பூத்த தொரு மலர்

சின்னஞ்சிறு இதழில்—ஆங்கே
செம்மை கலந்ததுண்டு
கன்னங்கரிய வண்டு—அதனில்
களிக்க வந்ததுண்டு

★

நல்லமணம் வீசி—தன்னை
நாடி வந்தோர்க்கு
அல்லல் மறந்திடவே—செய்து
ஆடும் தென்றலிலே

சின்னேரம் செலவே—ஒரு
சிறுவன் பறிக்கப்பின்
கண்ணன் கழலினிலே—நல்ல
காட்சி யானதம்மா

—கி. சுப்பிரமணியன்

## உயர்ந்த வைரங்கள்

புதுமாதிரி வைர நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்

உ. அ. அரு. அருணசலம்
செட்டியார்

வைர வியாபாரம்

கல்லுக்கட்டி, காரைக்குடி




சுகாதார முறையில் தகுந்த வசதிகள்
குறைந்த சார்ஜு
[மர வியாபாரம்]
M. செல்லய்யா பிள்ளை
அண் கோ.,

## டிராவலர்ஸ் ரூமில்

தங்குங்கள்
மெயின் ரோட்டில் உள்ளது — —
S. I. Ry. அவுட் ஏஜன்ஸி,
பஸ்ஸ்டாண்டு, ஹோட்டல்கள்,
பஜார் எல்லாவற்றிற்கும் வெகு
சமீபம்.
கோவிலூர் ரோடு, காரைக்குடி




**CHROMECO AGENCY**

NEXT TO GOKHALE HALL

சக்தி மலர்

## அகண்ட இந்தியா ரூ. 1

ஆசிரியர்: கே. எம். முன்ஷி

மொழிபெயர்த்தவர்: கொடுமுடி ராஜகோபாலன்

**சக்தி காரியாலயம்**

மதுரை - காரைக்குடி

புதிதாக வெளிவந்த

# சக்தி மலர்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| **போரும் காதலும்** .... .... (டால்ஸ்டாய் எழுதிய உலகப் பிரசித்தி பெற்ற நாவல்—பொ. திருகூடசுந்தரம் மொழிபெயர்ப்பு முதல் பாகம்.) | 2 | 8 |
| **அகண்ட இந்தியா** .... .... (கே. எம். முன்ஷி பாகிஸ்தான் கூடாது என்று விபரமாக எழுதிய இப்புத்தகத்தை கொடுமுடி ராஜகோபாலன் தமிழில் மொழிபெயர்த்தது.) | 1 | 0 |
| **இன்பம் எது?** .... .... (ராய. சொ. எழுதிய உயர்ந்த இலக்கியக் கட்டுரைகள்.) | 1 | 0 |
| **மானிட ஜாதியின் சுதந்திரம்** .... (ராபர்ட் இங்கர்ஸால் எழுதிய அறிவாராய்ச்சி நூல். வெ. சாமிநாத சர்மா தமிழ்ப்படுத்தியது.) | 1 | 0 |
| **பிரயாண நினைவுகள்** .... .... (ஏ. கே. செட்டியாரின் நான்காவது பிரயாண நூல். தமிழ் நாட்டு அனுபவங்களும் அடங்கியிருக்கிறது.) | 0 | 12 |
| **இருளின் வலிமை** .... .... (டால்ஸ்டாய் எழுதிய உயர்ந்த—உணர்ச்சியைக் கிளப்பக்கூடிய நாடகம். நா. வானமாமலை மொழிபெயர்ப்பு.) | 1 | 0 |
| **படையெடுப்பு** .... .... (டால்ஸ்டாய் கதைகள் மூன்றும் பாகம்—மொழிபெயர்ப்பு சுப. நாராயணன்.) | 1 | 0 |

கிடைக்குமிடம் :—

**சக்தி காரியாலயம்**

மதுரை : : காரைக்குடி.

காலத்தை மாற்றினுர்கள், துரைத்தனத்தார்?

ஆனுல், எக்காலமும் இடைவிடா சேவைசெய்வது

# ரிகார்டு, கடியாரமே



கனவான்கள் தரிப்பது $7\frac{3}{4}$"; ஸ்டீல் ரூ. 70/-
ரோல்டு கோல்டு ரூ. 75/- 18 காரட் கோல்டு ரூ. 250/-

அழுத்த வஸ்து

தவருத காலம்

15 வச்ரம் பதிந்தது

5 வருஷம் உத்திரவாதம்



அழகு உருவம்

கருக்காத உலோகம்

யாவர்க்கும் உபயோகம்

ஸரஸமான விலை

வாருங்கள்! வாருங்கள்!!

வாங்குங்கள்! வாங்குங்கள்!!

சீமாட்டிகள் தரிப்பது $5\frac{1}{4}$" ரோல்டு கோல்டு ரூ. 60/-
9 காரட் கோல்ட் ரூ. 100/-

## ஜலால் & ஸன்ஸ்

ஹெட் ஆபீஸ்: 46, (S). ராட்டன் பஜார், மதருஸ்

பிராஞ்சுகள்:

அபீத் ரோடு, ஹைதராபாத் (ஸமஸ்தானம்)
மௌண்ட் ரோடு, மதருஸ் ஆடிஸன்பேட்டை, காஞ்சீபுரம்

தந்தி: "ராஜா" டெலிபோன்: நெ. 81



## நம்பிக்கையே மன நிம்மதி



## நாணயமே எங்கள் நோக்கம்

கோயமுத்தூரில் கியாரண்டியுள்ள பவுன் நகைகள், வைர நகைகள், கல் நகைகள், சுத்தமான வெள்ளிப் பாத்திரங்களுக்கும் நாணயமும் நம்பிக்கையும் மிகுந்த இடம்



## P. A. ராஜு செட்டியார் அண்டு பிரதர்

ஆபரண மாளிகைக்கு

தாங்கள் அவசியம் குடும்பசகிதமாய் ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

முக்கிய கவனிப்பு:—
"P. A. R." சீல் போட்ட நகைகளை பார்த்து வாங்குங்கள்

TELEPHONE: NO. 81 TELEGRAMS: RAJA COIMBATORE

## P. A. RAJU CHETTIAR & BRO.

JEWELLERS & DIAMOND MERCHANTS

BIG BAZAAR STREET COIMBATORE

# ஜெமினி
# நந்தனார்

படத்திலுள்ள பாட்டுக்களில்
மிகவும் நன்றாயுள்ள மூன்று
பாட்டுக்களைத் தெரிவித்து



## ரூ 10,000
## லாபம் பெறுங்கள்

**3** வது வாரம்

| | | |
|---|---|---|
| சென்னை | — | வெலிங்டன் |
| மதுரை | — | நியூ ஸினிமா |
| பெங்களூர் | — | ஸூப்பர் |
| கோயமுத்தூர் | — | ராஜா |
| காரைக்குடி | — | ராமவிலாஸம் |
| சேலம் | — | நியூ ஸினிமா |
| திருநெல்வேலி | — | பாலஸ் |
| கும்பகோணம் | — | டைமண்ட் |
| திருப்பாப்புலியூர் | — | நியூ ஸினிமா |

சென்னையில் தினசரி 3 காட்சிகள்



**1942ன் உன்னத சங்கீதப் படம்**

Regd. No. M. 4162 **SHAKTI** October 1942




கவனியுங்கள் !

உயரிய அச்சுவேலைக்கும்
நூதனமுறையான அச்சு
வேலைக்கும், கலர் அச்சு
வேலைக்கும் எங்களைக்
கலந்து ஆலோசியுங்கள்

அழகான அச்சுவேலைக்குப் பெயர் பெற்ற

சக்தி பிரஸ் லிமிடெட்

காரைக்குடி


Edited, Printed and Published by V. Govindan at Shakti Press Limited
Devakottah Road, Senjai, Karaikudi. Joint Editor: T. J. Ranganathan.